அறைவு 03 இயம் 31 February 14-20, 2015
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 20 விலை : 30.00

aat @ VBC
0770203201




# தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பகைமை ஏற்படக் கூடாது

– தலைவர் சம்பந்தன் –



**கிழக்கில்** தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பகைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே கிழக்கு மாகாணசபையின் முஸ்லிம் அங்கத்தவர்களுடன் எமது அங்கத்தவர்கள் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்டத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா சம்பந்தன் அவர்கள் மலைமுரசிற்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வியில் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் ஆட்சியைக் கைப்பற்றிய விதம் மிகக் கீழ்த்தரமானது. அவ்வாறு ஸ்ரீ.மு.கா நடந்து கொண்ட விதத்தை ஒரு போதும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. 17

பிரத்தியேகச் செவ்வியின் முழு வடிவம் பக்கம் 4ல்....

# கிழக்கில் தேசிய அரசு?

## 2 அமைச்சர்கள் , உபதவிசாளர் பதவி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு!

**கி**ழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சிக் கட்டேறும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் எடுத்துள்ளதாக நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கும் பேச்சுக்கள் இடம்பெற்று வந்த வேளையில் யாரும் எதிர்பார்க்காத வகையில் மத்தியில் முரண்பட்டுக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கிழக்கில் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்தது.

இதனையடுத்து அவ்வரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணையுமாறு 17

### 16ம் திகதி குழுநிலை ஆய்வு

**இ**லங்கையில் தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணத்துவக் குழு ஆய்வுகளைச் செய்து தமது முடிவுகளை எழுத்துமூல அறிக்கையாகச் சமர்ப்பிக்கவுள்ள நிலையில் தற்போது இலங்கையில் நிகழந்துள்ள அரசியல் மாற்றத்தின்பால் அவ்வறிக்கையை வெளிப்படுத்துவதா? இல்லையா? என்பது பற்றிய குழுநிலைக் கலந்தாய்வொன்று எதிர்வரும் 16ம் திகதி ஜெனீவாவில் 17

### திருமலைப் பெண்களை ஏமாற்றியவர் கைது

பல பெண்களை ஏமாற்றிய பின்னர் ஆறாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்ய முயன்ற வாலிபரை யாழப்பாணத்தில் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஐம்பத்தாறு வயதான இவர் இருபது வயதான இளம் பெண்ணைத் திருமணம் செய்ய முற்பட்டபோதே வல்லிபுர ஆழ்வார் சன்னதியில் இருந்து இப்போலி வெளிநாட்டவர் கைதாகியுள்ளார். 17

## தேசிய அரசு என்பது சரியா? - சுரேஸ்



**கி**ழக்கு மாகாணத்தில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது சிறந்த விடயமானதாகக் கருதவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த பன்னிரண்டாம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே 17

## அரச ஊழியர்களின் பல லட்ச ரூபாய்கள் முடக்கம்

**அ**ரசாங்க அலுவலர்களுக்கு மிகக் குறைந்த விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் பணத்தைச் செலுத்திய அரச அலுவலர்களின் பணம் முடங்கியுள்ளது.

முன்னைய சனாதிபதியால் அரச அலுவலர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தகுதியுடைய அலுவலர்கள் முறையே பெண்களாயின் ரூபா நாற்பத்தையாயிரமும், ஆண்களாயின் ரூபா ஐம்பதினாயிரமும் செலுத்துமாறு பணிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய திருகோணமலை மாவட்டத்தில் அரச அலலவலர்களால் செலுத்தப்பட்ட பணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த மூன்று 17



- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# கிழக்கின் சமநிலைத் தளம்பல்

கிழக்கு மாகாண சபையை முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றிய விதமானது மிகத்தரம்குறைந்த அரசியல் அனுகுமுறையின் பதிவாக இலங்கையின் வரலாற்றில் பதிவாகியுள்ளது.

தமக்குரியதை அடைவதை விடுத்து திருடிய விதமாக இதனைப் பார்க்க முடிவதாக மூத்த அரசியல் தலைவர்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அடைவதும் திருடுவதும் எவ்வகையில் வித்தியாசப்படுகின்றது என்பதனை அவதானித்தால் அங்கு யாருக்கு அது பொருத்தமானது என்பதை வைத்தே அதனை அடைவதும் திருடுவதும் வேறுபடுவதைக் காண முடிகின்றது.

தனக்குரியதைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது அடைவது என்றும் தனக்குரிமையில்லாததைப் பெற்றுக்கொள்ள எந்தவொரு வழியையும் பின்பற்ற நினைப்பது திருடுவது என்றும் பொருள்படுகின்றது.

முங்லிம் காங்கிரஸசின் இந்த அரசியல் நடவடிக்கையானது ஆளமான வடுவொன்றைக் கிழக்குத் தமிழினத்தின் மீது உருவாக்கியுள்ளதுடன் கிழக்கில் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழ முயற்சிக்கும் முஸ்லிம் மக்களிற்கும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல்வாதிகளின் நீண்டகால இருப்பை உறுதி செய்து கொள்ள கிழக்கின் பெரும்பான்மையான இரு இனங்களையும் ஒற்றுமைப்படவிடப்போவதில்லை என்பதில் பேரினவாத அரசசக்தி மிகக் கவனமாக இருக்கின்றது.

கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட முறையைக் கருத்தில் எடுத்துக்கொண்டால் மத்தியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கடும்போக்கில் பிரிவுபட்டுள்ள முஸ்லிம் காங்கிரசிற்கு கிழக்கில் ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏன் முன்வந்தது என்பதைப் புரிந்து கொள்வதன் ஊடாக பேரினவாதிகளின் உள்ளக நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

மத்தியில் முரண்பட்டாலும் கூட எச்சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களுடன் தமிழர்கள் ஒன்றிணையக் கூடாது என்பதில் பேரினவாதிகளின் எண்ணம் தத்தமது கட்சிகளையும் விடுத்து ஒன்று பட்டிருப்பது தெரியும்.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பது இழுபறி நிலையில் இருந்தபோது தற்போது மதிதய அரசுக் கட்டிலில் இருக்கும் முக்கிய புள்ளிகள் மூவரும் வெறுமனே பார்வையாளர்களாக ஏன் இருந்தர்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

கிழக்கில் ஆட்சியமைக்கும் பெரும்பங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அடுத்த பங்கு முஸ்லிம் காங்கிரசிற்கும் இருப்பதைத் தெரிந்துகொண்டும் அவ்விரு கட்சிகளையும் அழைத்து ஒரு பொது உடன்பாட்டை ஏற்படுத்தாமல் இழுபறி நிலையை அவ்வாறே விட்டுவிட்டது அம்முக்கிய புள்ளிகளின் சரியான தார்மீக அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தின.

அதற்கமைய முஸ்லிம் காங்கிரசிற்கு மற்றொரு வழியையும் யார் திறந்துவிட்டிருப்பார்கள் என்பதையிட்டு நாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

கிழக்கில் சமநிலையைக் குழப்பியுள்ள கிழக்கு மாகாண சபையின் நகர்வுகள் இரண்டு முக்கிய இனத்திற்குள்ளும் மாறாத பகையை உருவாக்கிவிடலாம் என்ற பயம் மேலோங்கத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு ஒரு பகையை உருவாக்கும் பட்சத்தில் மீண்டும் பேரினவாதிகளின் வெற்றி பல தசாப்தங்களுக்குப் பயணிக்கும். அதற்கு முஸ்லிம் அரசியற் கட்சிகள் தம்மையும் தம்மக்களையும் பலியிடத் தயாராகிவிட்டார்களோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. உண்மையாகவா?


-மாயன்-

## கடற்படைக் கல்விச் சான்றிதழ் விழா

கடற்படையின் அலுவலர்களுக்கு நடாத்தப்பட்ட நீண்டநாள் ஏற்பாட்டியல் முகாமைத்துவக் கல்விக் கற்கையினை (Long Logistics Management Course) நிறைவு செய்த அலுவலர்க்கு கல்விச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 8ம் திகதி திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நடைபெற்ற இவ்விழாவில் இலங்கைக் கடற்படைத் தளபதி கலந்துகொண்டிருந்தார்.

தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா, கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பலகலைக்கழக உபவேந்தர் மேஜர் ஜெனரல் லிந்த பீரிஸ் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.



## திருகோணமலையில் பாதுகாப்பு இராசாங்க அமைச்சர்



வடக்குகிழக்கில் தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த பாதகாப்பராசாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன எஸ்எல்என்எஸ் சாகர கடற்படைக் கப்பலில் சிறு பயனமொன்றை மேற்கொண்டிருந்தார்.

## சம்பூர் மகாவித்தியாலயத்திற்கு உதவிகள்





சம்பூர் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் இணைந்து அங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்துள்ளனர்.

## மக்களின் சமகாலப் பிரச்சனைகள்

சமகாலத்தில் மக்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலொன்று, மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த 11ம் திகதி திருகோணமலையில் நடைபெற்றுள்ளது.

உப்புவெளி பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரம் மற்றும் ஜே.வி.பி. முக்கியஸ்தர் விஜேயகோன் சுமல ஆகியோர் திருகோணமலை மாவட்ட பொதுமக்கள் சமகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

இதன்போது, கடத்தப்பட்டு காணாமல்போன அல்லது யுத்தத்தின் போது கொல்லப்பட்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் தமது கல்வியைத் தொடருவதில் எதிர்நோக்கும் க்'ட நிலைமை, பாதுகாப்புத்தரப்பினர் ஆக்கிரமித்துள்ள பொதுமக்களின் காணிகள், வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்கள் எதிர்நோக்கும் இருப்பிட வசதி பிரச்சினை, நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் ஒன்று திருகோணமலையில் ஸ்தாபிக்கப்பட வேண்டியதன் அவசியம் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## சுவாமி கங்காதரானந்தா வாழ்கை வரலாற்றை பாடமாக்குங்கள்

சுவாமி கங்காதரானந்தாவின் வாழக்கை வரலாற்றைப் பாடப் புத்தகங்களுள் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை இந்துசமயக் கலாசார அமைச்சிற்கு விடுத்துள்ள முன்னாள் பாரதி முதியோர் சங்கத் தலைவரும் முன்னாள் கிராமோதய சபைத் தலைவருமான நா. இராமசாமி அவர்கள் திருகோணமலையில் திருக்கோணேஸ்வரத்தில் பலகாலமாகத் தவம் செய்து ஞான அருள் பெற்று பலகாலமாக சமயத் தொண்டாற்றி மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழி சமைத்த சுவாமியின் வாழக்கை வரலாறு ஒரு பாடமாக சைவ சமயப் பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட வேண்டும் எனத் தாம் இரண்டாவது தடவை கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

சிவயோக சமாயத்தை நிறுவி அதனூடாகத் தொண்டாற்றி இம் மண்ணிலேயே சமாதியடைந்த சுவாமி தொடர்பாக பல நிறுவனங்களின் ஊடாக இக் கோரிக்கையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பிய போது அதனை ஏற்றுக்கொண்ட திணைக்களம் இவ்விடயத்தைப் பற்றி தேசிய கல்வி நிறுவனப் பிரிவின் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து இவ்விடயம் தொடர்பாக எவ்வித பதிலும் தற்போதுவரை கிடைக்கப்பெறாததால் தற்போது புதிய இந்து சமய விவகார அமைச்சருக்குத் தானெனொரு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## அரசிற்கு எதிராகப் போராடுவோம்

-அமைச்சர் குணவர்த்தன -

மோசடியில் ஈடுபட்டவர்களைத் தேர்தலில் நிறுத்துவது தொடர்பாகத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், காணி அபிவிருத்தி அமைச்சருமான குணவர்த்தன கடுமையான கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்.

நேற்று இவ்விடயம் தொடர்பாகத் தனது கருத்தைத் தெரிவிக்கும் போது அவர் அரசிற்கு எதிராகப் போராட்டம் நடத்தவும் தயங்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால ஸ்ரீசேன அவர்கள் சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய பொழுது அவருடன் வெளியேறியவர்களுள் குணவர்த்தனவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவர் கருத்தறிவிக்கும் போது -

"மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டால் இந்த அரசிற்கு எதிராகவும் வீதியில் இறங்கி போராட்டம் நடத்த நேரிடும் எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

## கவனயீர்ப்பு போராட்டம்

- சச்சி -

மட்டக்களப்பு மாவட்ட உள்ளக கணக்காளர் ரி.தேவகாந்தன் அவர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொள்ள சென்றபோது வீட்டில் அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் அவரது மனைவி உறவினர்களை தாக்கிவிட்டு சென்றுள்ளனர் தாக்குதலுக்கு உள்ளான அவர்கள் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இதனை கண்டித்து மாவட்ட செயலக அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் தாக்குதலை மேற்கொண்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் படிகூறி செயலக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டத் தினை மேற்கொண்டனர். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவம் இடம்பெறக்கூடாது எனவும் கோரிக்கை விடுத்தனர் .





## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பெற கோரிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தால் இடம் பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்காத காரணத்தினால் அவர்கள் மீண்டும் இடம்பெயரும் நிலையேற்பட்டுள்ளது. இதனை கருத்தில்கொண்டு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு புதிய மீள்குடியேற்ற அமைச்சருக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் கடிதம் ஒன்றினை கடந்த புதன்கிழமை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து நடந்த யுத்தம் காரணமாக பலர் இடம் பெயர்ந்தனர். இவர்களில் குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த பலர் மீளக்குடி அமர்த்தப்பட்டனர்.

பல குடும்பங்கள் விருப்பத்துடன் மீளக்குடியமர்த்தப்பட்டனர். மீளக்குடியமர்த்தப்பட்ட இடங்களில் இவர்களுக்கான அடிப்படை தேவைகளான நிரந்தர வீட்டு வசதி, குடிநீர், போக்குவரத்து, தொழில்வாய்ப்பு, உணவு, கல்வி, வீதிஅமைப்பு, சுகாதாரம் ஏனைய வாழ்வாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக பல மீளக் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் மீண்டும் இடம் பெயர்ந்தனர். கடந்த காலங்களில் இடம் பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வந்த பலர் அப்பகுதியிலேயே தங்களுக்கான அனைத்துத் தேவைகளான போக்குவரத்து, தொழில், சுகாதார கல்வி வசதிகள் போன்ற விடயங்கள் பூர்த்தி செய்யக் கூடிய வண்ணம் இருந்ததன் காரணமாக சொந்த இடங்களில் மீளக்குடியமர செல்லும் போது வாய்ப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படாததன். காரணமாக மீளக்குடியமர்ந்த பலர் மீண்டும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் திரும்பி விட்டனர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பல்வேறு தரப்பினர் வீட்டு வசதிகளுக்காக ஏங்குகையில் அரசியல் பலம் மிக்கவர்களால் சிலருக்கு வேறு இடங்களில் காணிகளும், வீடுகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் அநீதியான முறையில் சிலருக்கு மீளக் குடியுயர்வுக்கான கொடுப்பனவை வழங்கவும் முற்படுவதில் நியாயம் இருக்க முடியாது என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

குறித்த உதவிகள் வழங்கப்படும் போது கட்சி சார்ந்த உதவி தவிர்த்து பொதுவான விதி முறையினை நடைமுறைப்படுத்துமாறு மிக அன்பாக கேட்டுக்கொள்கின்றேன் என கேட்டுள்ளார்.

## மீறியோர்க்கு எதிராக தண்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களை மீறியமைக்காக கடந்த வருடத்தில் 1,055 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு, 15 இலட்சத்து 75ஆயிரம் ரூபாய் தண்டம் அறவிட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் இணைப்பதிகாரி ஏ.எல்.ஜௌபர் சாதிக் தெரிவித்தார். நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களை மீறிய வகையில் செயற்பட்டவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளில் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் தண்டம் விதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## டெங்கு சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு மாநகரசபை பிரிவிலுள்ள நாவற்குடா பிரசேத்தில் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் வீடுகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலை வைத்திருந்ததாகக் கூறப்படும் 25 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக மட்டக்களப்பு நாவற்குடா பிரசேத்துக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் வி.செனவிரட்ன தெரிவித்தார். நாவற்குடாப் பிரதேசத்தில்கடந்த வியாழக்கிழமை டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பொலிஸார், இராணுவத்தினர், கிராம உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மட்டக்களப்பு மாநகர சபை அதிகாரிகள் என 92 பேர் டெங்கு பரிசோதனையை மேற்கொண்டனர். இதன்போது 1,016 வீடுகளும் வெற்றுக்காணிகளும் சோதனை செய்யப்பட்டன.

## வீதியைச் சீரமைக்க ஆர்ப்பாட்டம்



காத்தான்குடியையும் பாலமுனையையும் இணைக்கும் கர்பலா வீதியை சீரமைத்து தருமாறு கோரி பொதுமக்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர். ஜும்மா தொழுகையின் பின்னர் பாலமுனை ஜாமியுல் ஹசனாத் பள்ளிவாசல் சந்தியில் ஒன்றுகூடிய பொதுமக்கள், பேரணியாக கர்பலா சந்திவரை சென்றனர். இதன்போது, ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டிருந்தோர் "பொய்யான வாக்குறுதி வேண்டாம்", "எமது வீதி சீரமைக்கப்படுமா?", "நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் அவர்களே பதில் கூறுங்கள்" போன்றவை எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

## மாணவி திடீர் மரணம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு, கல்லடி சுவாமி விபுலானந்தா இசை, நடனக்கல்லூரியினல் மூன்றாம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் சுகயீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவி இன்று காலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் மல்லாவி, யோகபுரத்தைச் சேர்ந்த சி.வாமிலா (வயது 24)என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கல்லடி சுவாமி விபுலானந்தா இசை, நடனக்கல்லூரிக்கு பின்புறமாகவுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து கல்வி பயின்றுவந்த இந்த மாணவி, இரு தினங்களுக்கு முன்னர் வயற்றுவலி மற்றும் காய்ச்சல் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே குறித்த மாணவி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- ஃபர்கான் -



## வாகன விபத்து

வெல்லாவெளியில் அறுவடையை முடித்துவிட்டு மண்டூரின் 14ஆம் கொலனி நோக்கி மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதியில் கடந்த வியாழக்கிழமை பயணித்துக்கொண்டிருந்த அறுவடை இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகிச் சென்று வயல்வெளியினுள் விழுந்துள்ளது. இருப்பினும், இந்த அறுவடை இயந்திர சாரதியும் உதவியாளரும் எந்தவித பாதிப்பையும் எதிர்நோக்கவில்லை.

## மரணத்திற்கு விபத்தல்ல காரணம்

தாயின் வீடு சென்று சாப்பிட்டு விட்டு மனைவி குழந்தையுடன் மோட்டார் சைக்கிளில் தனது வீடு திரும்பும் வழியில் விபத்தினால் கால் உடைந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் உயிர் இழந்த மு.சுதாகரன் (வயது 25) விபத்தின் காரணமாக இறக்கவில்லை என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று மண்டூர் திடீர் மரண விசாரணை அதிகாரி த.ராாளசிங்கம் கூறினார். இவரின் மரண விசாரணையின் போது இறந்தவரின் மனைவியான வினோதினி (வயது 19) அவரின் சாட்சியத்தில் கூறியதாவது கால் எலும்பு உடைந்துள்ளது என்றும் சந்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். இந்த நிலையில் புதன் கிழமை அதிகாலை அவர் இறந்துவிட்டார் என்று தகவல் கிடைத்தது என அவர் கூறினார்.

## துவிச்சக்கர வண்டி வழங்கல்

தொப்பிகல பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள ஐந்து பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு சிறுவர் நிதியம் எனும் அமைப்பு அன்பளிப்பாக துவிச்சக்கர வண்டிகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களின் பிரத்தியேகப் பேட்டி

கடந்த 12ம் திகதி திருகோணமலைக்கு வருகை தந்திருந்த தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் அவர்களுடன் பிரத்தியேகச் செவ்வியொன்றை மேற்கொள்ளும் வாய்ப்பு மலைமுரசிற்குக் கிடைத்தது.

அச்செவ்வியை முழவதுமாக இங்கு தருகின்றோம்.

**ஐயா! கிழக்கில் ஆட்சியமைப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் வருமாறு விடுத்த அழைப்புத் தொடர்பாக என்ன முடிவு நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றீர்கள்?**

இதற்குப் பதில் தருவதற்கு முன்பதாக கிழக்கு மாகாண சபையின் பின்னணியைப் பற்றி விளக்குவது பொருத்தமாக இருக்கும் என் நினைக்கின்றேன்.

2012 ம் ஆண்டு தேர்தல் நடந்த போது ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆளும் கட்சியிலிருந்து வெளியேறி அன்றைய அரசாங்கத்தை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டவர்கள். அந்த நேரத்தில் நாங்களும் போட்டியிட்டோம் .அந்த நேரத்தில் நாஙகள் கிழக்கு மாகாணத்தில் ஆட்சியை அமைக்க வோண்டும் என்ற அடிப்படையில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் உடனும் அரசாங்கத்தை எதிர்த்து போட்டியிட்ட இன்னொரு கட்சியான ஜக்கிய தேசிய கட்சியுடனும் இணைந்து அரசை அமைக்க வேண்டும்என்ற கோரிக்கையை முன்வைத்தோம்.

அந்த கோரிக்கையை நாங்கள் முன்வைத்த போது ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸசிற்கு மதலமைச்சுப் பதவியைக் கொடுப்பதாக நாங்களே பகிரங்கமாக சென்னோம். அதை சொல்ல காரணமென்னவென்றால் மகிந்த ராஜபக்ஸவின் கட்சி கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைத்தால் அதன் மூலம் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் பாதகம் ஏற்படும் என்ற காரணத்தால் தான் அந்த அழைப்பை விடுத்தோம்.

தேர்தல் முடிந்த பின் நாங்கள் 11 ஆசனங்களையும், ஸ்ரீ.மு.கா கட்சி 07 ஆசனங்களையும், ஜ.தே.கட்சி 04 ஆசனங்களையும் பெற்றிருந்தோம்.

நாங்கள் மூவரும் ஒன்று சேர்ந்திருந்தால் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி ஒன்றை அமைத்திருக்கலாம். அந்த அடிப்படையில் நாங்கள் மீண்டும் பத்திரிகை மாநாடு நடாத்தி ஆட்சி அமைக்க எங்களுடன் சேரும் படி மு.காவை நோக்கி அழைப்பு விட்டோம் ரணில்விக்கிரமசிங்கவுடனும் பேசினோம். ஸ்ரீ.மு.கா கட்சிக்கு முதலமைச்சர் பதவி கொடுப்பதாக அன்றும் பகிரங்கமாக சொன்னோம்.

அப்படி இருந்தும் கூட ஆளும் கட்சியிலிருந்து வெளியேறி அரசாங்கத்தை எதிர்த்து அவர்கள் போட்டியிட்டு அதன் நிமித்தம் முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்று 07 ஆசனங்களை பெற்றிருந்த போதும் கூட அவர்கள் மீண்டும் திரும்பிச் சென்று அதே அரசாங்கத்துடன் சேர்ந்து ஆட்சி அமைத்தர்கள்.

அந்த நேரத்தில் அவர்கள் நடந்து கொண்ட விதம் மக்களுடைய ஜனநாயக தீர்விற்கு முற்றாக, முரணாக நிலைப்பாடு.

அந்த நிலைப்பாட்டை முஸ்லீம் மக்களே எதிர்த்து விமர்சித்தவர்கள். அப்படி இருந்தும் அவர்கள் செயற்பட்டனர்.

சமீபத்தில் ஜனாதிபதி பதவி மாற்றத்தின் பின் அந்த ஆட்சி தனது பெரும்பான்மை இழந்து தொடர முடியாமல் ஒரு நிலை ஏற்பட்ட போது ஸ்ரீ.மு.கா எங்களுடன் பேசியது.

அப்பொழுது அவர்களுக்கு முன்வைத்த நிலைப்பாடு நாங்கள் 2012 இந்த பதவியை தர முன்வந்த போது அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது நாங்கள் மக்களின் ஜனநாயக தீர்வின் பிரகாரம் முடிவெடுக்க வேண்டும்.

எங்களுக்கும் ஆளும் கட்சிக்கும் இடையிலான வித்தியாசம் 2012ம் ஆண்டு மாகாண சபையின் அடிப்படையில் ஆக 6150 வாக்குகள். அதுவும் ஒரு குழறுபடியின் காரணமாகவே அந்த வித்தியாசம் ஏற்பட்டது. உங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான வித்தியாசம் 61 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்று இருக்கிறோம். கிழக்கு மாகணத்தில் 03 மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் 02 மாவட்டங்களில் திருகோணமலை, மட்டகளப்பிலும் நாங்கள் முதலிடத்தில் வந்திருக்கின்றோம்.

நீங்கள் திருகோணமலையில் 03ம் இடத்திலும், மட்டக்களப்பில் 03ம் இடத்திலும் வந்திருக்கிரீர்கள். வேறு எந்த மாவட்டத்திலும் முதலிடத்தில் வரவில்லை. ஆனபடியால் ஜனநாயக ரீதியில் முதலமைச்சர் பதவி எங்களுக்கு வரவேண்டும். அது மிகவும் நியாயமான கோரிக்கை இந்த நிலைப்பாட்டை பலர் ஏற்றுக்கொண்டனர். ஆனால் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் மூன்று முறை பேசினோம். ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் அவர்கள் பழைய அரசாங்கத்தில் அங்கம் வகித்து, ஜனாதிபதி தேர்தலில் முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்காக பிரசாரம் செய்த மாகாண சபை உறுப்பினர்களுடன் சேர்ந்து அதனூடாக ஒரு பெருபான்மையை நிரூபிக்கக் கூடிய நிலையை அடைந்து அவர்கள் ஒரு முதலமைச்சர் பதவியை ஏற்று சத்திய பிரமாணம் செய்த பின்னர், இந்த அழைப்பு எங்களுக்கு வந்திருக்கிறது.

இந்த அழைப்பு சம்பந்தமாக எனக்கும் ஸ்ரீ.மு.காக்கும் பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை. ஆனால் அவர்கள் எமது மாகாண சபை உறுப்பினரை அழைத்தார்கள். பேச்சுவார்த்தைக்கு! கருத்துக்கள் பரிமாற்றப்பட்டுள்ளன. அதன் முடிவுகள் பகிரங்கப் படுத்தப்படவில்லை இன்னும் அமுலுக்கு வரவில்லை. ஆனபடியால் அம்முடிவுகள் பற்றி என்னால் பேசமுடியாது.

அந்த முடிவுகள் அமுலாகும் பொழுது போது எமது உறுப்பினர்கள் எமது நிலைப்பாட்டை விளக்குவார்கள்.

எங்களைப்பொறுத்தவரை மகாண ஆட்சி முறையாக நடக்கவேண்டும். இந்த மாவட்டத்தில் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் வாழ்ந்துவருகின்றனர். எங்களுக்கு சிறப்பான முறையில் தேவையான முறையில் ஆட்சி நடக்க வேண்டும். அவ்வாறான ஒரு ஆட்சி அமைவதற்கு எங்களுடைய மாகாண உறுப்பினர்கள் பரிபூரணமான ஒத்துழைப்பை தர தயாராக இருக்கின்றனர். அவர்கள் மிகவும் ஒழுக்கமாக செயற்படுவார்கள்.

ஆனால் ஸ்ரீ.மு.கா நடந்து கொண்ட விதத்தை ஒரு போதும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. 2012ம் ஆண்டிலும், தற்போது 2015ம் ஆண்டிலும் அவர்கள் மிகவும் கேவளமாக நடந்து கொண்டுள்ளார்கள். அதை கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களும் அதிலும் விசேடமாக தமிழ் பேசும் மக்களுக்கும் அதிலும் விசேடமாக முஸ்லீம் மக்களும் கூற கடமை பட்டுள்ளோம். எமது மாகாண சபை உறுப்பினர்கள் ஸ்ரீ.மு.கா கட்சியினரை சந்தித்து பேசியதன் முக்கிய காரணம் என்னவென்றால் ஸ்ரீ.மு.கா எந்தளவிற்கு கேவளமாக நடந்திருந்தும் கூட தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையில் ஒரு பகைமை ஏற்பட கூடாது, பிரிவினை ஏற்பட கூடாது எனும் அடிப்படையில் தான் பேசி இருக்கிறோம். அதை நாங்கள் பாதுகாப்போம் ஆனால் நிச்சயமாக ஸ்ரீ.மு.கா செயற்பாட்டை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர்கள் மிகவும் நியாயமற்ற முறையில் நடந்து இருக்கிறார்கள் என்பதை வலியுறுத்துவது எனது கடமை என நினைகிறோம்.

**சுதந்திர தினத்தில் கலந்து கொண்டதன் ஊடக எமது மக்களுக்கு என்ன கிடைக்கும்? அதனூடாக உலகத்துக்குச் சொல்ல முயன்ற செய்தி என்ன?**

சுதந்திர தினத்தில் பங்கு பற்றியதன் முலம் தமிழ் மக்களுக்கு அது கிடைக்கும் இது கிடைக்கும் என எதிர்பாத்து பங்கு பற்றவில்லை. 10 வருடகாலமாக தமிழ் பேசும் மக்களின், விசேடமாக தமிழ் மக்களை பொருத்தவரையில், 10 வருட காலத்தில், விசேடமாக யுத்த முடிந்த பிறகு, 2009ம் ஆண்டிற்கு பிறகு ஆட்சியிலிருந்த மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் பலவிதமான பாதகமான செயற்பாட்டில் ஈடுபட்டு வட கிழக்கிலுள்ள தேசிய பிரச்சனை இருப்பதை கூட மூடி மறைக்க கூடிய வகையில் திட்டங்களை தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்தி எமக்கு மிகவும் ஆபத்தான செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

சென்ற ஜனாதிபதி தேர்தலில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டிய தேவை, கடமை எமக்குள்ளது. அவர்களுடைய கருத்துக்களையும் செயற்பாடுகளையும் பார்த்தால் மகிந்த அரசாங்கத்தின் கருத்துகளுக்கும் செயற்பாடுகளுக்கும் முற்றாக வேறுபட்டுக் காணப்படுகிறது. அவர்கள் ஆட்சிக்கு வந்து 01 மாத காலம் தான் .அந்த காலத்தில் பெரிதாக மாற்றம் ஏற்படவில்லை. ஆனால் சரியான பாதையில் அவர்கள் செல்வதற்கு முயல்கின்றனர் என எண்ணுவதற்கு இடமுண்டு. அவர்களை சரியான பாதையில் செல்ல வைப்பது எமது கடமையும் கூட. இன்றைக்கு சர்வதேச சமூகம் எமது பிரச்சனையை நியாயமான ரீதியான முறையில் தீர்த்து வைப்பதற்கு பலகோணங்களில் செயல்ப்பட்டு வருகிறார்கள். சர்வதேச சமூகம் உன்னிப்பாக இந்த பிரச்சணை சம்பத்தப்பட்ட பிரிவுகள் இந்த நாட்டில் எவ்விதம் நடந்து கொள்கிறார்கள் என்பதை கவனமாக அவதானித்து கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் மிகவும் அவதானமாகவும், மிகவும் நிதானமாகவும், மிகவும் பக்குவமாகவும் நடந்து கொள்கிறோம் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவையும் கடமைப்பாடுமுள்ளது ஆதலால் இந்த புதுச் சூழலில், விசேடமாக பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு ஒரு செய்தியை அனுப்பும் வகையில் நாங்கள் ஒரு சமத்துவமான அடிப்படையில் ஒரு நிரந்திரமான சமாதானத்தை ஏற்படுத்த தயாராக இருக்கிறோம். எமக்கிடையில் நல்லிணக்கம் ஏற்பட இடமுண்டு என்பதை நாங்கள் அவர்களுக்கு தெளிவாக சொல்வதற்காக இந்த சுதந்திர தின நிகழ்வில் நான் பங்கு கொள்வது உதவியாக இருக்கும் என்று கருதினேன். அவ்வடயமாக எமது கட்சிக்குள் கூட சிலருடன் பேசினேன். அந்த அடிப்படையில் தான் நான் கலந்து கொண்டேன். இதனை எங்கள் மக்கள் ஏற்றுக்கொள்வர் எனக் கருதுகிறேன். இந்த நிகழ்வின் பின் நான் அறியக் கூடிய வகையில் மிகவும் கூடுதலான மக்கள் இதனை வரவேற்றத்தை அறியக் கூடியதாகவுள்ளது. சிலர் அதனை விமர்சித்துள்ளனர். அது அவர்களது ஜனநாயக உரிமை. அதையும் நாங்கள் மதிக்க வேண்டும். எனினும் இந்த செயல் எமது மக்களுக்கு பிரச்சனைக்கு நிரந்திர தீர்வை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருக்க கூடிய செயல். அதன் மூலமாக எமது மக்களுக்கு நன்மை அடையலாம் எனும் அடிப்படையில் தான் பங்குபற்றினேன். அது சரி தான் என்று கருதுகிறேன்.

**சுதந்திர தினத்தில் கலந்து கொண்ட தீர்மானம் த.தே.கூவின் தலைவர் என்ற முறையில் எடுக்ப்பட்டதா? அல்லது தனிப்பட்ட இரா.சம்பந்தனால் எடுக்கப்பட்டதா?**

தமிழ் மக்கள் சார்பில் சனநாயக என்ற ரீதியாக அவர்களின் தலைவர் என்ற வகையில் செயபற்படும் கடமையை என் தோலில் சுமந்தவன் என்ற வகையில், அந்த கருமத்தை நிறைவேற்றிய பொறுப்பு என்னுடையது என்ற வகையில், இம்முடிவை நான் எடுக்க வேண்டிய தேவை இருந்தது என நான் கருதினேன். அந்த வகையில் முடிவை எடுத்தேன்.

**ஜெனீவாவில் விசாரணை ஆவணம் வெளிப்படுமா இல்லையா என்ற நிலையில் வடமாகாணசபை நிறைவேற்றிய இனவழிப்புத் பிரேரணை அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய தேவை உண்மையில் இருந்ததா?**

ஜெனிவா அறிவிப்பு அதாவது 2014 பங்குனி மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலே மனித உரிமை பேரவையால் ஓர் சர்வதேச விசாரனை நடத்தி இருக்கிறார்கள். ஒரு குழு நியமிக்கப்பட்டு கடந்த ஒரு வருட காலமாக கடமையில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களது அறிக்கை எதிர்வரும் பங்குனி மாதம் சர்வதேச மனித உரிமை பேரவை கூடுகின்றபோது சமர்ப்பிக்க வேண்டிய தேவை தீர்மானத்தின் படி உண்டு.

அந்த அறிக்கை வெளிவர வேண்டும் என்ற கருத்தை கூற வேண்டியவருக்கு கூறி இருக்கிறோம். அந்த அறிக்கை வர வேண்டும் என்ற கருத்தை பல [illegible]வருக்கு முன்பதாக கடிதமூலமாக ஐநா மனித உரிமையாணையருக்கு நான் அறிவித்திருக்கிறேன். இவ்விடயம் சம்பந்தமாக இந்த பிரேரணையை முன்மொழிந்த இரு முக்கிய நாடுகள் அமெரிக்கா, ஜக்கியராஜ்ஜியம். அமெரிக்க பிரதி செயலாளர் நிஷா பிஸ்வால், ஜக்கியராஜ்ஜிய பொது நல நாட்டு வெளிவிவகார அமைச்சருடனும் ஹ்யீகோ ஸ்வயர் உடன் ஆழமான பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளோம். உண்மை வெளிவரவேண்டும். இந்த அறிக்கை மூலமாக உண்யைமன முடிவு என்ன என்பதை அறிய வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். ஆனால் அந்த 2014 பங்குனி மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின், இந்த நாட்டில் முக்கிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆட்சியை பொருத்த வரையில். இந்த ஆட்சியில் புதிய ஜனாதிபதி, அவரின்கீழ் புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. பழைய அரசாங்கம் சர்வதேச பங்கெடுப்பை முற்றாக எதிர்த்தது. சர்வதேச பங்கெடுப்பை தேவையில்லை என்றது. ஆனால் இன்றைய அரசாங்கம் சர்வதேச பங்கெடுப்புடன், உள்நாட்டில் நம்பத்தகு விசாரணையை நடத்துவோம் என்பதற்கு ஒத்துழைப்பை நாடி நிற்கின்றார்கள்.

மிதமான அந்த வித்தியாசத்தின் காரணமாக, மாற்றத்தின் காரணமாக சர்வதேச சமூகம் இந்த பிரேரணையை பங்குனி மாதம் பகிரங்கபடுத்துவதா? அல்லது தாமதிப்பதா? என ஆலோசனை நடந்து கொண்டு இருக்கிறது. எமது வெளிவிவகார அமைச்சர் ஜெனீவா ஜக்கிய இராச்சியம், அமெரிக்காவுடன் ஆலோசிக்க சென்றுள்ளார்.

ஆனால் நாங்கள் அமேரிக்காவிடம் இருந்தும் ஜக்கிய இராச்சியத்திடமிருந்தும் ஒரு வாக்குறுதியை பெற்றிருக்கிறோம். சர்வதேச அறிக்கை வெளிவர வேண்டும. அந்த உண்மை உலகிற்கு வெிள்ப்பட வேண்டும்.

இது எவ்வகையிலும் அழிக்கப்பட, இல்லாமல் போக கூடாது என்ற வாக்குறுதியை பெற்றிருக்கிறோம்.

நாம் அவதானித்து வருகின்றோம் .எமது கருத்துக்கள் முன்வைப்போம். அதில் குறை நிகழ இடமுள்ளதாக நான் நினைக்கவில்லை. ஆனால் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

வடமாகாண தீர்மாத்தை பொறுத்தவரையில் அந்த தீர்மாணம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ் சுட்டமைப்பு உறுப்பினர்களும், எதிர் கட்சியினரும் ஏகமனதாக தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்த தீர்மானத்தின் அடிப்படை என்ன வெனில் உண்மை வெளிவரவேண்டும். சர்வதேச விசாரணை மூலமாக யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இனப்படுகொலை நடந்ததா? இல்லை? என்ற அவர்களின் அறிக்கையின் அடிப்படையில், ஒரு முடிவு வரத்தக்கவகையில் அந்த உண்மை வெளிவர வேண்டும்.

அத்துடன் நாட்டு மக்களுக்கு அதுவும் விசேடமாக பெரும்பாண்மை மக்களுக்கு வடக்கில் யுத்தத்திற்கு பிறகு யுத்தத்திலும் ஏற்பட்ட உண்மை தெரிய வேண்டும் பொதுமக்கள் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தின் பிரசன்னம் பாதுகாப்புத தேவைக்கு அப்பாற்பட்ட வகையில், மக்களின் சுய மரியாதையை கௌரவத்தை பாதிக்க கூடிய வகையில் உள்ளது. அங்கு இராணுவம் குறைக்கப்பட வேண்டும். பாதுகாப்பு தேவை முகாம்களை தவிர்த்து ஏனைய இராணுவ முகாமை அகற்ற வேண்டும். இதனை சிங்கள மக்களும் எதிர்க்கவேண்டிய தேவையில்லை. இந்த விடயம் தொடர்பாக ஒழிவு மறைவின்றி நாட்டு மக்களுக்கு விசேடமாக சிங்கள மக்களுக்கு உண்மை சொல்ல வேண்டிய கடமைப்பாடு உண்டு. அதனை மறைக்க ஒளிக்க நடைமுறைத்தப்படுபவற்றை எதிர்த்தே வட மாகாண சபை நிறைவேற்றிய அத்தீர்மானத்தை நாங்கள் மதிக்கிறோம் - நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## மத்தியத்தரைக்கடல் பகுதியில் அகதிகளுக்கு ஏற்பட்ட அவலம்



மத்தியத்தரைக்கடல் பகுதியை கடந்து ஐரோப்பாவுக்கு நுழைய முயன்றபோது கடந்த சில நாட்களில் மட்டும, 300க்கும் அதிகமானவர்கள் கடலில் மூழ்கியுள்ளதாக இப்போது கருதப்படுகிறது என அகதிகளுக்கான ஐ நா அமைப்பு கூறியுள்ளது.

கடந்த வாரத்தின் இறுதிப் பகுதியில் லிபியவிலிருந்து பயணமான இவர்களில், மூன்று சிறிய படடுகளில் தப்பித்து உயிரிபிழைத்த சொற்ப அளவிலானவர்களை இத்தாலிய கடலோரப் பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

இதேபோல நான்காவது படகு ஒன்றும் புறப்பட்டது என்றும், ஆனால் அதை தற்போது காணவில்லை என்று உயிர்பிழைத்தவர்கள் கூறுகிறார்கள்.

உயிர்பிழைத்தவர்களிடம் பேசி சேகரித்த தகவல்களின் அடிப்படையிலேயே ஐ நாவின் அகதிகளுக்கான அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அந்தக் கடலைக் கடந்து வரும்போது சிக்கித் தவிப்பவர்களை வான்வழியாக மீட்கும் நடவடிக்கையை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இத்தாலி நிறுத்தியது.

ஓராண்டாக நடைமுறையில் இருந்த அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது, மேலும் உயிரிழப்புகளுக்கு வழி வகுக்கும் என்று ஐ. நா அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## ஐ எஸ் மீதான தாக்குதலுக்கு ஒப்புதல் கோருகிறார் ஒபாமா

இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகளுக்கு எதிராக மூன்று ஆண்டு காலம் இராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலை அதிபர் ஒபாமா கோரியுள்ளார்.

இத்திட்டத்தில் அமெரிக்கப் படைகள் மட்டுப்படுத்தபப்ட்ட வகையில் தரைவழித் தாக்குதல்களை முன்னெடுக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது.

தற்போது இராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளை கட்டுப்படுத்திவரும் ஐ எஸ் அமைப்பு மீது தாக்குதல்களை நடத்த தனக்கு சட்டபூர்வமான அதிகாரம் ஏற்கனவே உள்ளது என்று அமெரிக்க அதிபர் கூறுகிறார்.

எனினும் அதற்கு நாடாளுமன்றத்தின் முழுமையான ஆதரவை அவர் கோரியுள்ளார்.



கடந்த 2002 ஆம் ஆண்டு இராக் மீதான இராணுவத் தாக்குதலை முன்னெடுப்பதற்கு முன்பாக முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஸ் இதேபோன்று நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோரியிருந்தார்.

ஆனாலும் அதிபரால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் தங்களுக்கு கவலைகள் உள்ளன என்று அமெரிக்க மக்களவையின் சபாநாயகரும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான ஜான் போய்னெர் தெரிவித்துள்ளார்ஹ

## அமெரிக்காவில் 3 இஸ்லாமியர்கள் சுட்டு கொலை

அமெரிக்காவில் கார் நிறுத்தகத்தால் ஏற்பட்ட தகராறு காரணமாக 3 இஸ்லாமிய மாணவர்கள் சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்

46 வயதுடைய கிரெய்க் ஸ்டீபன் கிக்ஸ் என்பவர் வடக்கு கரோலினா என்ற பகுதியில் வசித்து வருகிறார். இவர் தங்கியிருக்கும் கட்டிடத்தில் டீக் ஷட்டி பராகத் என்பவர் அவரது மனைவி யூசர் முகமது ஆகியோருடன் வசித்து வந்தார். மேலும் இவர்களின் உறவினரான ரஷான் முகமது அபு-சல்ஹா என்பவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.

இந்நிலையில் இந்த மூவருக்கும், ஸ்டீபன் கிக்ஸ்கும் கார் பார்க்கிங் தொடர்பாக முன் விரோதம் அரேங்கேறியது. இதில் ஏற்பட்ட மோதல் காரணமாக கிக்ஸ் அந்த 3 பேரையும் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்துள்ளார். இதுகுறித்து உடனே காவல்துறையினரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீவிர விசாரணை மேற்கொண்டு வந்த காவல்துறையினர் முதல் கட்டமாக ஸ்டீபன் கிக்ஸ்சை கைது செய்துள்ளனர்.

## தென் கொரியாவில் 100 கார்கள் அடுத்தடுத்து மோதி விபத்து

### 2 பேர் பலி, 68 பேர் படுகாயம்



தென்கொரியாவின் தலைநகரான சியோல் அருகே மூடுபனி காரணமாக சுமார் 100 கார்கள் அடுத்தடுத்து மோதி பெரும் விபத்து நேரிட்டது. இதில் 2 பேர் உயிரிழந்தனர். 68 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். சியோல் அருகே இன்சியான் சர்வதேச விமான நிலையம் உள்ளது. அங்கு, சியோல் நகரையும் விமான நிலையத்தையும் இணைக்கும் வகையில் பிரமாண்ட நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது.தென்கொரியாவில் தற்போது கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. இதன் காரணமாக நேற்று காலையில் நெடுஞ்சாலையின் முக்கியமான இணைப்புப் பாலத்தில் இரண்டு கார்கள் ஒன்றுடன் ஒன்று வேகமாக மோதிக் கொண்டன. இதைத் தொடர்ந்து இருபுறமும் வந்த கார்கள் அடுத்தடுத்து மோதி நொறுங்கின. ஒட்டுமொத்தமாக சுமார் 100 க்கும் மேற்பட்ட கார்கள் சம்பவ இடத்தில் முட்டி மோதின. இந்த விபத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தனர். 68 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளது. ஏற்கனவே, இதே போன்ற விபத்து ஒன்று அமெரிக்காவின் வெர்ஜினியா மாநிலத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## பெல்ஜிய பயங்கரவாதக் குழுவின் தலைவருக்கு சிறை



சிரியாவிலும் வேறு இடங்களிலும் சென்று போராட, ஜிகாதிகளை அனுப்பினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த "ரியா ஃபார் பெல்ஜியம்" என்று தம்மைக் கூறிக் கொண்ட அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பே என்று பெல்ஜியத்திலுள்ள நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.

அண்மைக் காலத்தில் ஐரோப்பாவில் பயங்கரவாதம் தொடர்பாக நடைபெற்ற மிகப்பெரிய வழக்கு விசாரணைகளில் ஒன்றாக இந்த வழக்கு பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கில் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட 46 பேரில் ஒருவரைத்தவிர அனைவரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம், அவர்களுக்கு மூன்று முதல் பன்னிரெண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டணை விதித்துள்ளது.


அந்த அமைப்பின் தலைவரன ஃபௌவாத் பெல்காசெம்முக்கு தீவிரவாதக் கருத்துக்களை பரப்பியது, சிரியா மற்றும் இராக்கில் சண்டையிடுவதற்கு ஆட்களை ஏற்பாடு செய்தது ஆகியக் குற்றங்களுக்காக 12 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில் காணாமல் போனகடற்படை பயிற்சி ஹெலிகாப்டர்

ஜப்பான் நாட்டில் 3 பேருடன் கடற்படை பயிற்சி ஹெலிகாப்டர் ஒன்று காணாமல் போயுள்ளது. இதையடுத்து ஹெலிகாப்டரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தென் மேற்கு ஜப்பானில் உள்ள ககோஷிமா மாவட்டத்தில் பறந்து கொண்டிருந்தபோது, இன்று காலை 11 மணியளவில் ஹெலிகாப்டருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக கடற்படை தற்காப்பு படை செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறியுள்ளார். காணாமல் போன ஹெலிகாப்டரில் பயிற்சி பெற்று வந்த ஒருவர் உள்பட மூவர் இருந்ததாக அவர் மேலும் கூறினார்.

## இந்தியருக்கு அமெரிக்காவில் நேர்ந்த கதி



அமெரிக்காவில் அலபாமா மாகாணத்தில், ஹண்ட்ஸ்வில்லே என்ற இடத்தில் தங்கி என்ஜினீயர் வேலை பார்த்து வருகிற தனது மகனை பார்ப்பதற்காக இந்தியரான சுரே' பாய் படேல் (வயது 57) சென்றுள்ளார். கடந்த 6-ந் தேதி அந்த பகுதியில் சுரே' பாய் படேல் சுற்றி திரிந்துள்ளார். இதைக்கண்ட ஒருவர் சந்தேகத்துக்கு இடம் அளிக்கிற வகையில் ஒரு நபர் நடமாடுகிறார் என போலீசில் புகார் செய்து விட்டார்.

இதையடுத்து அவரை சுற்றி வளைத்த அமெரிக்க போலீசார், ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்டனர். அவருக்கோ ஆங்கிலம் தெரியாததால் பதில் அளிக்க முடியாமல், □நோ இங்கிலி□ என்று மட்டும் கூறி உள்ளார். உடனே ஒரு போலீஸ்காரர் அவரை பிடித்து தரையில் தள்ளிவிட்டார்.

இதில் அவர் முடங்கிப்போகிற அளவுக்கு காயம் அடைந்தார். இப்போது அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார். இது தொடர்பான புகாரில், அவரை தள்ளிவிட்ட போலீஸ்காரர் ... அனுப்பப்பட்டுள்ளார்.

மகன் சிராக் கூறுகையில், எனது அப்பா ஓய்வில் இருக்கும் போது அந்த பகுதியை நடந்து சென்று பார்த்திருக்கிறார். இது வழக்கமான செயல்தான். என் அப்பாவுக்கு இந்தியும், குஜராத்தியும் தான் தெரியும். ஆங்கில மொழி தெரியாததால் போலீசார் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது" என்றார்.

இப்போது சுரேஷ் பாய் படேலை இந்த நிலைக்கு தள்ளிய மேடிசன் போலீஸ் மீது வழக்கு தொடர சிராக் திட்டமிட்டுள்ளார்.

## மலேசியாவில் கேலிச்சித்திர ஓவியர் கைது

மலேசிய எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் துணைப் பிரதமருமான அன்வர் இப்ராகிம், தனது உதவியாளர் முகமது சைபுல் என்பவருடன் இயற்கைக்கு மாறாக, அத்துமீறி பாலுறவு கொண்டது தொடர்பான வழக்கில் 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தண்டனையை அந்த நாட்டின் சுப்ரீம் கோர்ட்டு நேற்று முன்தினம் உறுதி செய்து தீர்ப்பு அளித்தது.

இந்த தீர்ப்பை விமர்சித்து, ஜுனார் என்று அழைக்கப்படுகிற ஜுல்கிபிளி அன்வர் ஹக் என்னும் கேலிச்சித்திர ஓவியர், "டுவிட்டர" சமூக வலைத்தளத்தில் தொடர்ந்து செய்திகள் வெளியிட்டார்.

குறிப்பாக, பிரதமர் நஜிப் ரசாக், நீதித்துறையில் தலையிட்டு, அன்வர் இப்ராகிமுக்கு தண்டனையை உறுதி செய்ததாக குற்றம் சாட்டினார். இதையடுத்து அவர் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கின் பேரில் அவரை மலேசிய போலீசார் கைது செய்துள்ளனர். இந்த நடவடிக்கைக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினையடி நீ எனக்கு...

தொடர் நாவல் 02

– மேவும் விரல் நானுனக்கு –
பாரதியார் –

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

அந்த நினைவுகளை உதறித்தள்ளி வேறு எண்ணங்களில் காலூன்றுவதற்காக தனது உடுப்புப் பெட்டியில் இருந்து ஒரு கவிதைப் புத்தகத்தினை எடுத்து விரித்தான். 'ஒரு பிடி சூரியன்' என்ற நீலமணியின் கவிதைப் புத்தகம் கண்களைத் திறந்தது. புகையிரதம்



மெல்லிய குலுங்கலுடன் 'சைனா பேயை'க் கடந்து விரைந்து கொண்டிருந்தது. இனிமேல் அதன் வேகம் அதிகரிக்கும் என்பது அவனுக்குத் தெரியும். கவிதைப் புத்தகத்தில் கண்களை ஆழ்த்தினான். திடீரென்று பெரும் சத்தத்துடன் புகையிரதம் நின்றது. கவிதைப் புத்தகத்தினை மூடி வைத்து விட்டு வெளியே பார்த்தவனுக்கு 'கந்தளாய் ஸ்டேஷன்' என்ற பெயர்ப் பலகை தெரிந்தது. அவளைப் பார்த்தான் அவனுக்கு முன் சீட்டில் அமர்ந்திருந்த அவள் தன் கண்களில் இருந்து வடியும் கண்ணீரை தன் கைக்குட்டையில் ஒற்றிக்கொண்டிருந்தாள். ஏதோ இனம் புரியாத சோகமும் பயமும் அவள் முகத்தில் அப்பியிருந்தன. பூசைக்கு கொண்டு செல்லப்படும் பலியாட்டைப் போல் மிரள மிரள விழித்தபடி வெளியே பார்த்துக்கொண்டிருந்த அவளைப் பார்க்க பாவமாக இருந்தது.

என்ன காரணத்திற்காக அவள் அழுகிறாள்? என்பது புரியாத நிலையில் அவள் யாருடன் பயணம் செய்கிறாள் என்பதை அறிவதற்காக அவளுக்குப் பக்கத்தில் இருப்பவரைப் பார்த்தான். நடுத்தர வயது மதிக்கத் தக்க ஒருவர் தலையில் சற்று வழுக்கையுடன் தன் இருக்கையில் சாய்ந்தபடி உறங்கிப்போயிருந்தார். அவன் தன்னைப் பார்க்கிறான் என்பதை அறிந்ததும் அந்தப் பெண் தன் கண்களைத் துடைத்து விட்டு அவனைக் கவனியாதது போல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள் கந்தளாய்ப் பகுதியில் ஏறிய புதிய பயணிகளை தன்னுள் உள்வாங்கிக்கொண்ட புகையிரதம் 'கந்தளாய் ஸ்டேஷனை விட்டு நகரத் தொடங்கியது. இப்போதுதான் ரதன் அவளை முழுமையாகப் பார்த்தான். அவள் மிகவும் அழகாக இருந்தாள். அதிக வெண்மையாக இல்லாமலும் கருப்பாக இல்லாமலும் ஒருவித சிகப்பு நிறம் புகையிரதத்தின் மங்கிய விளக்கு வெளிச்சத்தில் அவளை மஞ்சளாகவும் காட்டியது.

சாண்டில்யனின் கடல் புறாவில் வரும் மஞ்சளழகியின் ஞாபகம் வந்தது ஜெயரதனுக்கு வெள்ளையில் சின்னச் சின்ன பூக்கள் சிதறியது போல் மேற்சட்டையும், பூக்களின் நீல நிறத்திற்கேற்ப மெல்லிய நீல நிறத்தில் பாவாடையும் அணிந்திருந்தாள். கழுத்தில் சின்னதாக பாசிமணி மாலை கழுத்தை இறுக்கியது போல் இருந்தது. அவளது தோற்றத்திற்கு மேலும் அழகாக இருந்தது. காதில் தான் அணிந்திருந்த ஆடைக்கு ஏற்றாற் போல் நீலக் கல் பதித்த தங்கத் தோடு அணிந்திருந்தாள். ஒரு கையில் மணிக் கூடும் மறு கையில் தங்க வளையல்கள் நான்கும் அவளுக்கு அழகாக இருந்தன. வெண்மை நிறத்திலான கைவிரல்களில் அழகாக வளர்க்கப்பட்ட நகத்திற்கு இளம் ரோஜா நிறத்தில் வர்ணப்பூச்சு அடிக்கப் பட்டிருந்தது. வலது கை பெரு விரலில் அணிந்திருந்த இருதய வடிவிலான தங்க மோதிரத்தில் N என்ற ஆங்கில எழுத்து பதிக்கப்பட்டிருந்தது.

"நிலக்ஷி. நிமலா, நிரஞ்சன், நித்தியா," மனசுக்குள் பெயர்கள் கம்பியூட்டர் வேகத்தில் பதிவாகிக் கொண்டிருந்தது. என்ன பெயராக இருக்கும்?

" நீங்க எங்க மட்டக்களப்புக்கா போறீங்க...?" முதலில் ரதன்தான் பேச்சை ஆரம்பித்தான். ஒரு ஆடவன் தன்னை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற சங்கோஜத்தில் இருந்த அவள் ஒரு வித ஸ்நேகம் கலந்த புன்னகையுடன் தலையாட்டினாள்.

"தனியாகத்தான் போறிங்களா இல்ல துணைக்கு யாராவது வர்றாங்களா...?" அவள் அதற்கும் மெல்லிய புன்சிரிப்புடன் அவளுக்குப் பக்கத்தில் உறங்கிக்கொண்டிருந்த அந்த நடுத்தர வயது மதிக்கத் தக்கவரைக் காட்டினாள்.

"மட்டக்களப்புக்கு ஏதும் இண்டர்வியூவுக்கு போறிங்களா இல்ல உங்க இடம் ...." ரதன் பேச்சை முடிக்கவில்லை அவள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவனுக்கு என்னவோ போல் இருந்தது. ஒரு வேளை அவள் வாய் பேச முடியாதவளாக இருப்பாளோ? என்ற சந்தேகம் அவனைத் தொற்றிக் கொண்டது. தனது வலது கையை வாய்க்குக் கொண்டு சென்று நீங்க வாய் பேச முடியாதவரா என்று கேட்கும் விதத்தில் சைகை மூலம் அவன் கேட்டது அவளுக்கு சிரிப்பாக இருந்தது. நிச்சயமாக 'பற்பசைக்கு" விளம்பரம் செய்யக்கூடிய நிலையில் அழகிய வெள்ளைப் பற்கள் ஒரே அளவில் ....அவன் இதற்கு முன் இப்படி பற்களை எவரிடமும் கண்டதில்லை. ஆனாலும் அவளது சிரிப்பின் சத்தம் கேட்கவில்லை. சிரித்தாள் சிரித்தாள். இவ்வளவு நேரமும் சோகமாக இருந்த அவளது முகம் திடீரென்று பிரகாசித்தது. சிரிக்கும் போது அளவுக்கு அதிகமாகவே அவளது கன்னம் இரண்டிலும் விழும் குழி அவளுக்கு மேலும் மெருகூட்டியது. அவள் சிரித்துக்கொண்டிருந்தால் பாரத்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது.



பெண்ணே நீ
சிரித்துக்கொண்டேயிரு
இந்த பூமியில் இனி மேல்
மின் வெட்டே
இல்லாதுபோகட்டும்.
உன் சிரிப்பு
ஒரு கோடி
நட்சத்திர
மின்னல்களாய்
என் மனதில்
ஒளி வெள்ளம்
பாய்ச்சுகிறது.
பெண்ணே... நீ
சிரித்துக்கொண்டே இரு
இந்த பிரபஞ்சம்
முழுவதற்கும் உன் புன்னகை
ஒளி கொடுக்கட்டும் ..."

"நீங்க நினைக்கிற மாதிரி நான் ஊமையில்ல ... நான் வந்தாறுமூலை கம்பசுக்கு போறன்... நாங்க கொழும்புக்கு போயிருந்ததில் வர தாமதமாகி விட்டது. நான் இப்ப தனியா மாமாவுடன் போறன். அதான் அங்க "ராக்கிங்க" நினைனச்சா பயத்தில அழுகை அழுகையா வருது"...அவள் அவன் கவிதைகளைக் கலைத்தாள்.

"ஓ அதுதான் அழுது கெண்டு வந்தனீங்களா மிஸ்....." பெயர் தெரியாமல் தடுமாறினான் ரதன். "என்னுடைய பெயர் நிவேதா"

"நிவேதா" மனசுக்குள் ஏதோ மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. ஆனால் இதயத்துள் துணி வைப்பதற்குத்தான் ஆளில்லை.

இலகுவில் கேட்க முடியாத பெயர். அந்த பெயரின் கவர்ச்சி அதை மீண்டும் மீண்டும் சத்தம் போட்டு சொல்லிப்பார்க்க வேண்டும் போன்ற உணர்வை ஏற்படுத்தியது..

"நிவேதா நீங்க என்ன பெக்கல்டி ?"

"ஆட்ஸ்" செய்யப் போறன்"

"ஆட்சில என்ன என்ன சப்ஜெட் எடுக்கப் போறீங்க ?"

'தமிழ். எக்கொனமிக்ஸ், பைன் ஆட்ஸ்

"ஓ பைன் ஆட்ஸ் எடுக்கப் போறீங்களா! அப்படி என்றால் ஆட்சில அதிக ஆர்வம் இருக்கும் போல"

"எனக்கு தமிழ் லிட்ரேச்சரில நல்ல ஈடுபாடு இருக்கு. அப்பப்ப சில புதுக் கவிதைகளும் எழுதி பேப்பரல வந்திருக்கு." அவள் பெருமையாக சொல்லிக் கொண்டாள்.

பெண்ணே நீயே ஒரு கவிதை. கவிதை கவிதை எழுதுவதா? ஓ கவிதைக்குள் ஒரு கவிதை. தன் மனசுக்குள் சொல்லிக்கொண்டான். சிறிது நேர சிந்தனையின் பின் ஜெயரதன் "ஒரு புதுக் கவிதை சொல்லுங்க பார்ப்பம்?" என்று அந்த அழகியுடன் கதையைத் தொடர்ந்தான். "எதைப்பற்றி" "எங்கட இலங்கை மண்ணைப் பற்றி பார்ப்பம். என்றான்." தண்ணீரின் நடுவே
அகதியாய் ஒரு படகு
ஓ....
இலங்கை

"பெண்டாஸ்டிக் அருமையா வந்திருக்கு. உண்மையில் இன்று இலங்கை அகதியாகத்தான் நிற்கிறது. சர்வதேச தெருக்களில் அதுவும் ஆயுதச் சந்தையில் ஒரு பிச்சைக்காரனைப் போல் ..... அவளது இலங்கை பற்றிய கவிதை அவனை வெகுவாக கவர்ந்தது. சமகால பிரச்சினையுடன் கூடிய அவளது பார்வையின் தீட்சண்ணியம் அவள் மீது ஒரு ஈடுபாட்டை ஏற்படுத்தியது

"உங்களுக்கும் கவிதையில் இன்ரஸ்ட்டா..?" அவள் கேட்டாள்.

"ஆம் ...எனக்கும் புதுக் கவிதைன்னா உயிர். பல் கவிதைகளும் எழுதி இருக்கிறேன் .."

அப்படியா பேப்பரில வந்திருக்கா ...?"

"ஆம் நிறையவே வந்திருக்கிறது."

"என்ன பெயரில எழுதி வர்ரீங்க..?"

'ரதன் என்ற பெயரில எழுதிறனான்..." அவன் சொல்லி முடிக்கவும் " ஆ ..ரதன் என்ற பேர்ல எழுதிறது நீங்கதானா? எனக்கு ரதன் கவிதைகள்னா உயிர். உங்கள்ட கவிதைகளின் கட்டிங்ஸ் கூட வைத்திருகிறேன் .நான் உங்களுக்கு பல கடிதங்கள் கூட போட்டிருக்கிறன். "ரசிகை' என்ற பெயரில்...... ஞாபகம் இருக்கிறதா ?'

**கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் காதல் காவியம்.**

அவள் சின்னக் குழந்தையைப்போல் ஆவலுடன் கேட்டாள். அந்தத் துடிப்பும் துள்ளலும் அவளுக்கு மேலும் அழகைக் கொடுத்தது.

இப்போதுதான் ரதனுக்கு ஞாபகம் வந்தது அவனது கவிதைகள் ஞாயிறு பத்திரிகைகளில் வெளி வந்த இரண்டு மூன்று தினங்களில் அழகிய முத்துப் போன்ற கையெழுத்தில் வாழ்த்துக்கடிதம் வரும். அதைக் கடிதம் என்று சொல்ல முடியாது. கவிதை என்றே சொல்ல வேண்டும். அழகிய வார்த்தைகளைத் தேடிப் பிடித்து வாழ்த்தியிருக்கும் அந்தக் கடிதம் கூட ஒரு கவிதையாகவே அமைந்திருக்கும். கடைசியில் 'உங்கள் ரசிகை' என்று சின்னதான கிறுக்கல். எத்தனையோ இரவுகள் அந்த கடிதங்களை வாசித்தபடி அவன் தூங்காமல் இருந்திருகிறான். அவனது கவிதைகளை விட மிகவும் எளிமையான வார்த்தைகளில் வாழ்த்தியிருக்கும் கடிதம்.

ரதன் தன்னுடைய கவிதைகளில் வார்த்தைகளை வலிந்து சேர்ப்பதில்லை. சொற்களைக் கொண்டு திணிப்பதுமில்லை. கவிதையில் பாவனை பண்ணுவதுமில்லை. இயல்பாக மனசு கனக்கின்ற நேரங்களில் வரும் வார்த்தைகளை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்து விடுவான். எளிமை என்பதற்காக வெறுமனே வார்த்தைகளை தெரிந்து எடுப்பதுமிலை. அவனைப் பொறுத்தவரையில் கவிதை என்பது இதுதான் என்று வரையறை செய்து சொல்பவர்களுக்கு ஓங்கி அறைய வேண்டும் போலிருக்கும். கவிதை என்பது கட்டுவதல்ல மனம் திறந்து கொட்டுவது என்ற நிலைப்பாடு உடையவன் அவன். கடைசியாக வெளி வந்த அவனது கவிதைக்கும் வாழ்த்துக் கடிதம் வந்தது. நிறையப்பேர் வாழ்த்தியும் கையொப்பம் கேட்டும் கடிதம் எழுதினாலும் அவனைக் கவர்ந்தது 'உங்கள் ரசிகை' என்ற பெயரில் வரும் அந்தக் கடிதம் தான் அதில் நிறைவான விமர்சனம் இருக்கும். கவிஞனுக்குத் தேவையானது விமர்சனம்.

மேவும்.. .. ..

## சந்தேகம் – சீரழிவு

குட்டிக்கதை

தீவ்யா, பிரகாஷ் இருவரும் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றி வந்தனர். இவர்கள் இருவருக்குமிடையில் காதல் மலர்ந்தது.

இவர்களது காதல் விவகாரம் இரு வீட்டாரின் சம்மதத்துடனும் நண்பர்களின் உதவியுடனும் திருமணத்தில் முடிவுற்றது. அதன் பின்னரான இருவரதும் இல்லற வாழ்க்கை சந்தோசமாக அமைந்தது. சந்தோசமாக இருந்த இவர்களது வாழ்க்கை மூன்று மாதங்கள் கழிந்த பின் பிரச்சனைகளை சந்திக்க ஆரம்பித்தது.

பிரகாஷிற்கு தன் மனைவி திவ்யாவின் மேல் சந்தேகம் எழுந்தது. ஏனெனில் அவள் மிக அழகானவள். ஆதலால் பிரகாஷ் தன் மனைவியை வேலையை விட்டு நிற்கும்படி கூறினான். தன் கணவனின் சொற்கேட்டு நடக்கும் மனைவியாக திவ்யா இருந்ததினால் தான் வேலைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டாள்.

இன்னும் சில நாட்களுக்கு அவர்களின் வாழ்க்கை எதுவித பிரச்சினைகளும் இன்றி சுமூகமாக இருந்தது. எனினும் திவ்யா மீது எழுந்த சந்தேகத்தை தவிர்த்து விடவோ தன் வேலையில் கவனமாய் இருக்கவோ பிரகாஷால் முடியவில்லை. தன் மனைவி வேறு யாருடனாவது கதைப்பாளோ அல்லது வேறேதும் தொடர்புகள் இருக்குமோ என்கின்ற சந்தேகம் இன்னும் அதிகரித்த வண்ணமே இருந்தது அவனுக்கு. வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் அவளை தன் கடும் வார்த்தைகளால் துன்புறுத்தி வந்தான். நடக்காத ஒன்றை நடந்ததாக கூறி அவள்மீது கை வைக்கும் அளவுக்கும் வந்து விட்டான்.

பொறுத்துப் பொறுத்திருந்து தன்னால் தாங்க முடியாத நிலைக்கு வந்த அன்று அவள் அவன் கூறிய அனைத்தையும் ஆம் என ஒத்துக்கொண்டாள். அவள் அவ்வாறு ஒத்துக் கொள்வாள் என எதிர்பார்த்திருக்காத அவன் உடைந்து போனான். மேற்கொண்டு எதுவும் கதைக்காமல் அவ் விடத்தை விட்டகன்றான்.

மறுநாள் விடியற் காலையிலேயே எழுந்து வேலைக்குச் சென்று விட்டான். இவள் அழுதழுது இயலாமல் சோபாவில் சாய்ந்திருந்து [illegible] தான் காதலித்து கைப்பிடித்த என் கணவன் ஏன் இப்படி இருக்கிறார் என எண்ணி வேதனை கொண்டாள்.

மாலை பிரகாஷ் வீட்டிற்கு வந்த போது கதவு உள்தாழ்ப்பால் போட்டிருந்ததை கண்ணுற்ற அவன் உள்ளே தன் மனைவியுடன் யாரோ இருக்கின்றான் என எண்ணியதால் மேலெழுந்த கோபத்தோடு ஒரே தள்ளில் திறந்தான் கதவை...

உள்ளே தன் அழகிய மனைவி வாயிலிருந்து நுரை தள்ளி சோபாவில் சரிந்து கிடந்தாள்.

தன்னுடைய மடத்தனத்தினால் தன் மனைவியையும், தன் சந்தோசமான வாழ்க்கையையும் தொலைத்து விட்டேன் என தன்னையே நொந்து கொண்டதுடன் இதற்கு தான் நிச்சயம் தண்டனை அனுபவிக்க வேண்டும் என எண்ணி சென்று காவல்துறையினரிடம் நடந்தவற்றைக் கூறி சரணடைந்தான்.

– ரீட்டா– வரோதயாநகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## வாழ்வு - 02

நித்தியம் பற்றிய
என் நம்பிக்கைகள் - உறுதியாகி
உறுதியாகி
மலையாய்
வளர்கின்றன!

காலம் வரையும்
ஒவ்வொரு நிமிடமும்
அழகுதான் -

அதிகாலை
வெளிர் பகல்
அந்திமாலை

அன்பு நண்பர்கள்
அயல் வரும்
பெண்கள் -
மனதின் அந்தகாரத்தில்
வந்து போகும்
நிர்வாணிகள்

கவனிக்கப் - படத்
தக்கனவாய்

ஒரு நகர்வு - அதுவே
வாழ்வாகி
கவனிக்கப்படுதல்
பாராட்டல்கள்
பணிவுகள் - பண்புகள்
பழிவாங்கல் திருப்திகள்
என
நகரும் வாழ்வின்

நித்தியத்துவம் - பற்றிய
நம்பிக்கைகளை
அழகான வாழ்வு
மலையாக்குகின்றது

அழகான இவ்
வாழ்வில் - ஏன்
ஆங்காங்கே கரும் புள்ளிகள்?

என் வயதொத்த
இளையோரின்
மரணம் ...

மலைகளைக் குடையச்
சிறு எறும்புகள் போதுமோ?

என் இரவுகளில்
எறும்புகள் பற்றிய
கனவுகள் - அச்சுறுத்துகின்றன ..

இரவின் வாழ்வு
எறும்புகளால் அழிகின்றது

விடியலில் - கூட
மேலும் சில
எறும்புகள் தின்று
தீர்த்தன - என்
நித்தியத்துவத்தை

அழகிழந்தன
காலம் வரையும்
நிமிடங்கள்!

மாயன்,
மலைமுரசு ஆசிரியர்

## அரசியல் வாதிகள் நிலை

பதவியை பறித்தெடுத்தாலும்
உதவியை நிறுத்தினாலும்
நிதமும் நெருக்கடிகளை
நிகழ்த்தினாலும்
சமூக நலனுக்காக
தலைமை தாங்கும் அரசியல்வாதி
ஒருபோதும்
தாழ்வடைவதில்லை!

சுய கௌரவத்தை
சுத்தமான அரசியல் கலாசாரத்தை
வியாபார மாக்காத
நியாயமான அரசியல்வாதி
ஒருபோதும்
துயருறுவதில்லை!

அதிகாரச் செல்வாக்கு
அமையாது போனாலும்
அரசியல் வாழ்க்கையில்
அமைதியும், மக்கள் செல்வாக்கும்
அமோகமாக இருக்கும்!

கவிக்குயிலன்,
சேனையூர்

## என் நிலை

உன் பெயரைச் சொன்னேன்
என்னைக்
கவிஞன் என்றார்கள்

உன் ஊரைச் சொன்னேன்
என்னைக்
கலைஞன் என்றார்கள்

நம் உறவைச் சொன்னேன்
என்னை
கீழ்ப்பாக்கம் செல்லச் சொன்னார்கள்

- சிஹரிஷ்சன் -
தரம் - II
கலைமகள் வித்தியாலயம்

## அறிவு

மனப் பிரயாணத்தில்
நித்தமும் மூழ்கி எழ

மகிழ்வெனும் பூக்களால்
பூச்சூட எண்ணி
ஆனது கனவுகளால்
மனமும் பூத்ததென்று

தினமும் அழுக்கில்
அழுகி நாறியது
தெரியாது வேதனைகளை
சுகமானதென சுமந்து

மனமென்னும் மாயையில்
அறிவுதனை மறந்து. . .

திருமலை சந்திரா

## பிரிவு

உடல்களுக்கிடையே
தொலைவை அதிகரித்து
மனங்களை நெருக்கமாக்கும்
ஒரு பாலம்

ராகவன்




## என்ன வேண்டும்?

பழைய மொந்தையாமோ? - அதிலே
புதிய கள்ளதாமோ?
விளைவு என்னவாமோ - வெறியோ?
வேறு யாதுமிலையோ?

படைகள் நீங்குமாமோ? - வருமோ,
பறித்தநிலங்கள் யாவும்?
வடகிழக்கிரண்டும் - ஒன்றாய்
வந்து சேருமாமோ?

ஏதிலியர் மீண்டும் - தமதில்
ஏறுவார்களாமோ?
ஆதிகாலம் போன்றே - ஈழம்
அமைதி காணுமாமோ?

நல்ல ஆட்சியானால் - நாடும்
நல்வளங்கள் பெற்றால்,
வெல்லும் மக்கள் வாழ்க்கை - ஆமாம்,
வேறு என்ன வேண்டும்?

தாமரைத் தீவான்
ஊச்சந்தீவு, கிண்ணியா.

# திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேஸ்வரம்

**வரலாற்றுப் பக்கம்**

கடந்தவாரத் தொடர்ச்சி.. ...

சம்பந்தர் தமது பதிகங்களில் கையாண்ட பொது மரபினையே கோணேஸ்வர பதிகத்திலும் கையாண்டள்ளார் என்பதற்கு திருஆலவாய் திருநீற்றுப் பதிகம் உதாரணமாகும்.

'இராவணன் மேலது நீறு' இரவின் (கரிய) வண்ணம் கொண்ட சிவபக்தன் இராவணன் தன் அங்கமெல்லாம் அணிவது திருநீறு என்று திருநீற்றின் பெருமை பாடிச்செல்லும் இப்பதிகம். சிவபக்தனான இராவணனைக் கொண்டாடுகிறது. அது போலவே கோணேஸ்வரப் பதிகமும்

பாடல் எண் : 8

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

(கயிலைமலையை வெட்டி எடுக்க நினைத்த இராவணனின் செருக்கைத் தம் திருப்பாத விரலினால் ஊன்றி அழித்தவர்





சிவபெருமான். இருந்தும் அவன் மனந்திருந்தி போற்றிப் பாடியதைக் கண்டு விருப்பத்துடன் வெற்றி வாளும், நீண்ட வாழ்நாளும் இராவணனுக்கு அருளியவர். செல்வத்தோடு கூடிய பிறப்பும், இறப்பும் அறியாதவர். சிவனை வணங்காது தக்கன் செய்த வேள்வியைத் தடுத்தவர். வனப்பு மிகுந்த உமாதேவியை ஒருபாகமாக கொண்டவர். உயிர்களிடத்துக் கருணைகொண்டு தன்னருட் பெருமையும், வாழ்வும் கொடுத்தவர். இத்தகைய பெரும்புகழையுடைய சிவபெருமான் கோணமலையில் வீற்றிருக்கிறார்.)

இராவணேஸ்வரனின் செருக்கினை அழித்துப்பின் அவனது சிவபக்தியினை மெச்சி, வேண்டும் வரங்களைக் கொடுத்த கோணமலையான் என்று பாடுகிறார் சம்பந்தர். திருக்கோணேஸ்வரமும் அதனுடன் தொடர்புகளைப் பலமாகக் கொண்ட இராவணேஸ்வரனும் இனிய இசையுடன் கூடிய பாடல் வடிவமாக உலகமெலாம் உள்ள சிவபக்தர்களிடம் சென்று அவர்கள் மனத்தினை இறுகப் பற்றிக்கொள்ள வழியமைக்கிறார் ஞானசம்பந்தர்.

இதில் மற்றொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்தின் ஒன்பதாவது பாடல்களில் பிரமா, விஷ்ணு ஆகிய தெய்வங்கள் அடிமுடி தேடிய கதையினைச் சொல்லும் வழமையைக் கொண்டவராகக் காணப்படுகிறார். அவர் பிரம்மா, விஷ்ணு முதலிய தெய்வங்களுக்கு முன்பாக எட்டாவது பதிகத்தில் இராவணனைப் பாடுவதன் மூலம் இராவணேஸ்வரனுக்கு முக்கியத்துவம் கொடுக்க முனைந்திருக்கிறார் என்றே கருதவேண்டியுள்ளது.

தொடரும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு முனைப் பயணத்தில் தமிழர் அரசியல்

## சுதந்திர தினம்-சுமந்திரன் பயணம்- இனக்கொலைத் தீர்மானம்-கிழக்கின் ஆட்சியில் பங்கேற்பு

**நிகழ்வு 01.**

67 வது சுதந்திர தினம் ஈழத்தமிழர்களை இரு கூராக்கிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

1972ம் ஆண்டின் பின்னர் எந்தவொரு தேசிய நிகழ்விலும் கலந்து கொள்ளாத இலங்கையில் தமிழர் தரப்பு திடீரென அறுபத்தியேழாவது சுதந்திர தினத்தில் கலந்துகொண்டதை அடுத்தே இந்த நிலை தோன்றியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களும், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இவ்விழாவில் கலந்துகொண்டதை அடுத்து கடும் வாதிப்பிரதிவாதங்களும் அறிக்கைகளும் வெளியாகின.

மாவை மற்றும் சுரெஸ் ஆகியோர் இவ்வாறு கலந்துகொண்டது அவர்களது தனிப்பட்ட தீர்மானம் எனத் தெரிவித்திருக்கின்ற அதேவேளை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் விடுத்துள்ள காட்டமான அறிக்கையில் இவ்வாறு கலந்துகொண்டமை ஒரு தன்னிச்சை-யான முடிவு என்றும் தமிழர்களுக்கு எதிரான போக்கு என்றும் தெளிவு-படுத்தியிருந்தார்.

**நிகழ்வு 02.**

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனிதஉரிமைக் கூட்டத் தொடரில் இலங்கையில் நடை-பெற்றதாகக் கூறப்படுகின்ற இனப்படுகொலை தொடர்பாக மனித உரிமை ஆணையாளரால் நியமிக்கப்பட்ட சர்வதேசக் குழவினர் மேற்கொண்ட விசாரணைகளின் எழுத்து மூலமான அறிக்கை வெளிப்படுத்தப் படவுள்ளது.

அவ்வாறு வெளிப்படுத்தப்படுவதை தற்போதைய இலங்கையின் புதிய அரசு பின்தள்ளிப்போடுவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளது.

எனினும் அவ்வாறு அறிக்கை பின்தள்ளப்படுவதை தமிழத் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை. அத்துடன் அறிக்கை வெளிப்படுத்தப்படுவதை வலுப்படுத்துவதற்காக தமது பிரதிநிதியாகச் சுமந்திரனை சர்வதேசம் நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்பியுள்ளது.

**நிகழ்வு 03.**

வடக்கு மாகாண சபையில் சிலமாதங்களுக்கு முன் உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்களால் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது. அப்பிரேரணையானது வடக்கில் தமிழ் மக்களை விடுவிப்பதற்கான போர் என்ற போர்வையின் இனவழிப்பே நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே அந்தப் பிரேரணையாக இருந்தது.

அக்காலத்தில் அந்தப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் கூட ஆதரிக்காத நிலையில் அப்பிரேரணையைச் சபையில் முன்மொழிவதை தவிசாளர் தடுத்ததுடன் முதலமைச்சரும் ஆதரவளிக்காத நிலை காணப்பட்டது. இதனையடுத்து வடக்கின் செங்கோலை சிவாஜிலிங்கம் தரப்பினர் எடுத்துச் செல்ல முற்பட்டதும் நடைபெற்றது.

ஆனால் கடந்த வாரம் கூடிய வடமாகாண சபையில் குறித்த பிரேரணை திடீரென விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு அதனை விசாரித்து அறிவதற்கு சர்வதெச விசாரணையே பொருத்தமானது என்றும், சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்றும் பிரேரணையுடன் கூடிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நிகழ்வு 04.**

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பதற்காக சுதந்திரக் கட்சியுடன் இணைந்து பெரும்பான்மையை நிருபித்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் தேசிய ஆட்சியொன்றை அமைக்க வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்துள்ளது. அவ்வழைப்பைச் சதகமான முறையில் பரிசீலித்து ஓரிரண்டு அமைச்சர் பதவிகளையும் பிரதித் தவிசாளர் பதவியையும் பெற்றுக்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்து உள்ளதாக நம்பககரமாகத் தெரிகின்றது.

**ஆய்வு**

கடந்த இரு வாரங்களுக்குள் நிகழ்ந்துள்ள இந்த நான்கு அரசியல் நிகழ்வுகளையும் ஆய்வுக்குட்படுத்தினால் தமிழரின் அரசியல் போக்கானது இன்று இருமுனைகளில் நகரத் தலைப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

அதனடிப்படையில் முதலாவதும் நான்காவதுமான நிகழ்வுகள் ஒத்து ஒரு முனை நோக்கியும், இரண்டாவதும் மூன்றாவதுமான நிகழ்வுகள் ஒத்து எதிர்முனை நோக்கியும் நகர்வை வெளிப்படுத்துகின்றன.

சுதந்திர தினத்தில் தலைவரும் சகபாடியும் பங்கேற்றமையானது வரலாற்றில் ஓர் திருப்பமாக அமைந்திருக்கின்றது.

சிங்கள இனவாத ஆட்சிகள் தமிழரின் தனித்துவத்தைச் சிதைத்து ஒரே ஆட்சிக்குள் அவர்களை இழுத்துச் செல்ல முயல்வதால் அவ்வரசினால் பிரகடனப்படுத்தப்படும் தேசிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவைப் பல்லாண்டுகளுக்கு முன்னரே தமிழ்த் தலைமைகள் எடுத்திருந்தன.

ஆங்கிலேய ஆட்சிக்கு முன்னர் எவ்வாறு சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கையில் "ஒரு நாடு- இரு தேசம்" என்றிருந்ததோ அதனையே தமிழர்களின் தீர்வாகப் பெற்றுக்கொள்ளவே தமிழர்கள் அகிம்சை-ஆயுதம்-அகிம்சை என்ற போராட்ட வழிகளில் பெற்றுக்கொள்ள முயன்று வருகின்றார்கள்.

எனினும் பூகோளமயமாதல் தாக்கத்தினால் உலகின் போக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய ஒழுங்குகளில் போராட்டங்கள் என்பதை வல்லரசுகள் தப்பார்ப்பிதம் செய்யத் தலைப்பட்டு விட்டன. உலகில் நடைபெறும் போராட்டங்களை தமது நலன்களைப் பாதிக்காத வகையில் ஆதரிக்கவும் எதிர்க்கவும் தலைப்பட்டுள்ள சர்வதேசத்தின் கண் தமிழர்களின் போராட்டம் ஒடுக்கப்படவேண்டிய-தொன்றாகப் பரிணமித்தமை வரலாற்றின் சோகமே!

அதனை சர்வதேச அனுசரணையில் மிகச் சாதுரியமாக நிறைவேற்றியுள்ள முன்னாள் இனவாத இலங்கை அரசுகள் தற்போது தமிழர்களின் ஒருமித்த அமைப்பைச் சிபைப்பதற்காக உள்நாட்டில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை வெளிநாடுகளில் அவ்வமைப்பை சமாதானத்திற்கு நகராத ஒரு ஆயதப்போராட்ட அமைப்பின் எச்சமாகக் காட்ட முற்பட்டு வருகின்றன.

அதனைத் தகர்க்கும் உரு முயற்சியாகவும், புதிய அரசிற்கான நல்லெண்ணச் சமிக்ஞையாகவும் சுதந்திர தினத்தில் பங்குகொள்ளும் முடிவு எட்டப்பட்டிருக்கலாம். எனினும் பங்குபற்ற முடியும் என்ற தமிழரின் வரலாற்றுத் தீர்மானத்தை உடைக்கும் இந்த முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சுயமாகச் சிந்தித்து எடுத்திருப்பாரா? என்பது சந்தேகமே! அதற்கான ஒரு பேரம் பேசல் ஏதோவொரு நிலையில் நடைபெற்றிருக்கும் என்பதுடன் அதற்காகவொரு ஆதரவுத் திரட்டலும் நிகழ்ந்திருக்கும்.

எனினும் இவ்வாறு அவர் சுதந்திர தினத்தில் பங்கேற்றமையால் சிங்கள ஊடகங்கள் பலவும் அன்றைய நாளில் புதிய அரசின் சுதந்திர தின உரைகளையும் செய்திகளையும் பின்னிலைப்படுத்தி விட்டு இப்பங்கேற்றலுக்கே முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தன. அதனூடக ஒரு செய்தி அல்லது அதிர்வு சிங்கள் மக்களிடம் உருவாகியமை உண்மையே.

ஆனால் இந்த முடிவானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கலந்தாராயப் படவில்லை என்பதே உண்மையாகும்.

தம்மீதான பயங்கரவாதத் தோற்றத்தை முற்றுமுழுதாக இல்லாதொழிக்க இந்தப் பங்குபற்றலைப் பாவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அடுத்த எதிர்பாராத நடவடிக்கையாக கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைத்துள்ள முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சிக் கட்டில் அமர முயற்சிக்கின்றது.

இவ்வாறு ஆட்சிக்கட்டில் முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி ஆகியோருடன் தோள்போட்டு ஆட்சி அமைக்கும் முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருப்பதன் ஊடாக தேசிய அரசியலில் தனது வரவை தெளிவாக தெரிவிக்க அத்தரப்பு முயல்வதாகவே தெரிகின்றது. கிழக்கில் சேர்ந்தியங்கும் பண்பை வெளிப்படுத்தி மத்தியிலும் அதற்கானதோர் அடித்தளத்தை இடவே இம்முயற்சி உதவும் என்பதுடன் ஆத்திர அரசியலைக் கைவிட்டு அனுசரித்துச் செல்லும்போக்கிற்குத் தமது அரசியல் முனையின் ஒரு பக்கத்தைத்திருப்ப தமிழரசியல் முனைகின்றது.

இதற்கு எதிரான பக்கத்தில் நடைபெற்ற மனிதக் கொலைகள் தொடர்பான உண்மைச் சம்பவங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதையிட்டு சர்வதேசத்துடனும், இலங்கை அரசுடனும் விட்டுக் கொடுப்புக்களுக்கு முன்வரப்போவதில்லை என்பதைத் தனது புதிய அரசியல் முனையை தமிழரசியல் திறப்பதாகவே தெரிகின்றது.

ஜெனீவாவிற்குச் சென்ற சுமந்திரன் தனது பயணத்தில் பல தரப்புக்களுடன் பேசி ஒரு இணக்கபாட்டை எட்டிக்கொள்ள முயற்சித்திருந்தார். மனித உரிமை ஆணையகத்தால் நியமிக்கப்பட்ட குழவால் மேற்கொள்ளப்பட்ட எழுத்து மூலமான விசாரணை அறிக்கையை வெளிப்படுத்துதல் என்ற இணக்கப்பாட்டைப் பெறுவதற்கே அவர் முயற்சிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் அந்த இணக்கப்பாட்டை எட்டுவதற்கு போதுமான. அளவு அழுத்தம் தமிழர் பக்கத்திலிருந்து போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்திலேயே டமாகாண சபையில் ஏகோபித்த குரலில் இனப்படுகொலை முன்மொழிவும் , அதனையொட்டி சர்வதேச விசாரணை தேவையென்ற வேண்டுகொளுடன் கூடிய பிரேரணையும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கிடப்பில் போடப்பட்டதொரு பிரேரணை உடனடியாக நிறைவேற்றப்பட்டதற்கு வேறு காரணங்கள் இருக்கும் என்பது சந்தேகமே. அத்துடன் இப்பிரேரணை தனியே வடமாகாண சபையின் தமிழ்த் தலைமைகளால் முன்கொண்டு வரப்பட்டுள்ளது என்பதும் பொய்யானதே. தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட முக்கியஸ்தர்கள் இத் தீர்மானத்தை முன்னரே அறிந்திருந்ததுடன் சர்வதேசத்தின் தேவை கருதி அதனை அவர்களே ஊக்குவித்திருக்கவும் வாய்ப்புள்ளது.

அந்த இணக்கப்பாடு என்ன என்பதை அவர்கள் எப்போதுமே வெளிப்படுத்தப் போவதில்லை.

எதிர்ப்பும் ஆதரவுமாக இருமுனை நகார்வுகளில் தமிழரின் அரசியல் போக்கினை எடுத்துச் செல்லவதால் எழும் பெறுபேறுகளைத் தீர்மானிப்பவர்களாகத் தமிழர்கள் இருக்கப்போவதில்லை. அந்தப் பெறுபேறுகளை அனுபவிப்பவர்களாகவே தமிழர்கள் இருக்கப்போகின்றார்கள் என்பதே உண்மை!.

**வெட்டியான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## போன் கொள்ளை வீழ்ச்சி

ஸ்மார்ட் போன்கள் கொள்ளையிடப்படும் பட்சத்தில், இவற்றை கணனி மூலம் செயலிழக்கச் செய்யும் வசதிகள் பிரித்தானியாவில் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

Apple நிறுவனம் 2013ம் ஆண்டு Find My iPhone என்ற பிரயோக வசதியை அறிமுகம் செய்தது.




இந்த வசதியை பயன்படுத்தும் ஒருவர், இணையத்தின் ஊடாக தமது ஸ்மாட்போனை செயலிழக்கச் செய்ய வைக்க முடியும்.


## வயர்லெஸ் சார்ஜர்



மைக்ரோசொப்ட் நிறுவனம் ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கான வயர்லெஸ் சார்ஜரினை இந்த வாரம் அறிமுகம் செய்துள்ளது.

பல வர்ணங்களில் வடிவமைத்து அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த சார்ஜரினை 59 டொலர்கள் பெறுமதியில் மைக்ரோசொப்ட் ஸ்டோரிலிருந்து கொள்வனவு செய்ய முடியும்.


## வேகம் அதிகம் தேவையா



கணனியில் தரவுப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு பென்டிரைவ் இன்று முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்வாறு பயன்படுத்தப்படும் பென்டிரைவ்கள் சில சமயங்களில் வேகம் குறைவாக இயங்கும். இச்சந்தர்ப்பங்களில் வேகத்தை அதிகரிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1. பென்டிரைவ் ஆனது எப்போதும் NTFS போர்மட்டில் கோப்புக்களை சேமிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். இதற்கு பென்டிரைவினை போர்மட் செய்யும் போது NTFS கோப்பு வகையினை தெரிசெய்து, Quick Format என்பதை நீக்க வேண்டும்.
2. பென்டிரைவின் ஐகானில் Right Click செய்து Properties சென்று Tools டேப்பில் "Check Now" என்பதன் ஊடாக பென்டிரைவில் உள்ள வழுக்களை நீக்க வேண்டும்.
3. Properties சென்று "Hardware" டேப்பில் உள்ள Device policy மாற்றியமைத்தல்.
4. நீண்ட காலப் பயன்பாட்டிற்கு பின்னர் Format செய்து மீண்டும் பயன்படத்துதல்.

## சம்சுங் டிவி பாவிப்பவர்களுக்கு எச்சரிக்கை




சம்சுங் நிறுவனம் தமது ஸ்மார்ட் தொலைக்காட்சியினைப் பயன்படுத்துபவர்களுக்கு எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதாவது குரல் வழி செயன்முறை மூலம் தொலைக்காட்சியை கட்டுப்படுத்துபவர்கள் தொலைக்காட்சியின் முன் எந்தவிதமான தனிப்பட்ட கருத்துக்களையும் பகிர வேண்டாம் என எச்சரித்துள்ளது.

இத்தொலைக்காட்சிகள் குரல்களை பதிவு செய்யும் ஆற்றலைக் கொண்டிருப்பதனால் தனிப்பட்ட தகவல்கள் அவை ஒன்லைனில் இருக்கும் போது பகிரப்படலாம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


## மடிக்கக்கூடிய சைக்கிள்

YikeBike எனும் நிறுவனம் முதன் முறையாக 2009ம் ஆண்டு இலத்திரனியல் சைக்கிளை அறிமுகம் செய்திருந்தது. எனினும் புதிய தொழில்நுட்பங்களினை உள்ளடக்கி அதனை மேலும் மெருகூட்டி மடித்து எடுத்துச் செல்லக்கூடிய வகையில் மாற்றியமைத்துள்ளது.



இதன்படி Model C மற்றும் Model V எனும் இருவகை புதிய வடிவமைப்புக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

## நோய்களை கண்டறியும் கருவி



உயிர்க்கொல்லி நோய்களை 15 நிமிடத்தில் கண்டறியும் வகையில் புதிய ஆப் ஒன்று அறிமுகமாகியுள்ளது. சிறிய வடிவிலான ஹுழைபெறு மையை, ஸ்மார்ட்போன் மற்றும் கம்ப்யூட்டரில் ஒரு டிவைசாக மாற்றிக் கொள்ளலாம். இந்த கருவியின் மேற்புறத்தில் கட்டை விரலை வைத்தவுடன், அது தானாகவே கட்டை விரலில் இருந்து ரத்த மாதிரியை எடுத்துக்கொள்ளும். பின்னர் ரத்த மாதிரியை பரிசோதித்து 15 நிமிடங்களில் எச்.ஐ.வி நோய் இருக்கிறதா என்பதை உடனடியாக கண்டு பிடித்துவிடும்.

OTHER

## நாய் ரோபோ



இணையதளம் முதல் கைபேசி வரை பல தொழில்நுட்பங்களில் முன்னணியில் திகழும் கூகுள் நிறுவனம், ரோபோடிக்ஸ் துறையிலும் காலடி பதித்தது. எதிர்காலத்தில் ரோபோக்களின் பங்கு முக்கியமாக இருக்கப் போவதை உணர்ந்த கூகுள், "போஸ்டன் டைனமிக்ஸ்" எனும் ரோபோ நிறுவனத்தை கடந்த ஆண்டு விலைக்கு வாங்கியது. நான்கு கால்களில் மேடுபள்ளங்கள் நிறைந்த கடினமான பகுதிகளில் கூட நடந்து செல்லகூடிய திறன் படைத்ததாக இந்த ரோபோ நாய் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோ நாயின் பெயர் எல்.எஸ் 3 . அதாவது லெக்ட் ஸ்குவாட் சப்போர்ட் சிஸ்டம் (Legged Squad Support System) என்பதன் சுருக்கம்.

## விண்வெளிக்கு செல்லும் நீர்மூழ்கிக் கப்பல்



பெருங்கடல்களை ஆராய்வதற்காக நீர்மூழ்கி கப்பலை விண்வெளிக்கு அனுப்ப நாசா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சூரியக் குடும்பத்தில் தனிப்பட்ட கிரகமாக உள்ளது டைட்டன், ஏனெனில் அதன் மேற்பரப்பில் மட்டுமே திரவ ஏரிகள் மற்றும் கடல்கள் உள்ளது. கடல்களில் திரவ ஹைட்ரோகார்பன்கள் இருப்பதால், டைட்டானியன் கடல்கள் என்கின்றனர்.

இந்நிலையில் தற்போது கடலின் கீழே என்ன உள்ளது என்பதை கண்டுபிடிக்க விண்ணியல் ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். குறிப்பாக டைட்டானின் மிகப்பெரிய வடக்கு கடலுக்கு அதாவது "கிரேக்கன் மேர்"-க்கு 2040ம் ஆண்டில் நீர்மூழ்கி கப்பல் ஒன்றை அனுப்ப திட்டமிட்டுள்ளனர்.

## கூகுளினால் பிரசவம்

அயர்லாந்தில் மொழி தெரியாத பெண் ஒருவருக்கு கூகுள் டிரான்ஸ்லேட்டர் மூலம் பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது. அயர்லாந்தில் வசிக்கும் காங்கோ நாட்டை சேர்ந்த பெண் ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. உடனே ஆம்புலன்சில் பயணம் செய்த தாதியர்களுக்கு ஆங்கிலம் மட்டுமே தெரியும், ஆனால் கர்ப்பிணி பெண்ணுக்கோ ஸ்வாகிலி மொழி மட்டுமே தெரியும்.

உடனடியாக பிரசவம் பார்த்தால் மட்டுமே தாய்க்கும், சேய்க்கும் நலம் என்ற நிலை, அப்பெண் பேசுவது செவிலியர்களுக்கு புரியவில்லை. உடனே தனது போனில் கூகுள் டிரான்ஸ்லேட்டர் உதவியுடன் ஸ்வாகிலி மொழியை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்து அப்பெண்ணுடன் பேசி பிரசவம் பார்த்தனர்.

# குறுக்கெழுத்து புதிர் 048

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ரு | 17 | | ■ | ■ | 2 | | 16 |
| | ■ | 3 | | 18 ஸ் | | | | |
| 4 | 19 | 5 | | | 20 | | | ■ |
| 6 | | | ■ | | லை | ■ | 7 | |
| | | பூ | 8 | | | | ம் | 21 |
| 9 | | | ■ | 10 | 22 | | | |
| | ம் | 23 | ■ | 11 | | வா | | |
| 12 | | | | வு | 13 | | | |
| 14 | | | 15 | | | | ■ | ■ |

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :***
***மலைமுரசு. இல - 159ஏ.***
***கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## இடமிருந்து வலமாக

1. பானுடன் எப்போதும் விரும்பிச் சாப்பிடும் கறி
2. அவுஸ்திரேலியா செல்லப் பயன்படுவது
3. மேளத்துடன் இணையும் இசைக்கருவி
4. ஊதுவது - குழம்பியுள்ளது
5. இப்பத்திரிகையின் தலைமை ஆசிரியரே லசந்த விக்ரமதுங்க
6. தூரத்தைக் குறிக்கும் சொல்
7. குழந்தைகள் விரும்பிக் கேட்பது
8. சிவனின் வடிவங்களில் ஒன்று
9. யுத்தத்தைக் குறிக்கும் சொல்
10. வியாபாரத்தில் பகுதி முதலிட்டவர்
11. இவர் கண் திறந்தால் யோகம் தான்
12. இதன் அறுபது மணித்தியாலமொன்று ஆகும்
13. ஜூராசிக் பார்க் படத்தின் கதாநாயகன்
14. இங்கு தான் சிவன் நடனம் ஆடினாராம்
15. குறும்புகள் பல செய்பவன்

## மேலிருந்து கீழாக

1. பனை மரத்தின் காய்
5. கிழக்கில் அனல் மின் நிலையம் நிறுவப்படவுள்ள பிரதேசம்
7. இப் பறவை கறுப்பு குழம்பியுள்ளது
9. முருகனின் ஆலயம் அமைந்துள்ள செல்வத்துடன் கூடிய இடத்தின் பெயர்
12. பணப்பெருக்கைக் குறிக்கும்
16. நிறைக்கு எதிர்ச்சொல்
17. அழிவைக் குறிக்கும் சொல்
18. இங்கிலாந்தின் நாணயம்
19. மனிதக் கழிவகற்றும் உறுப்புக்களில் ஒன்று
20. கண்ணன் செய்வது
21. பலர் கூடியிருக்கும் இடம்
22. தாயக்கட்டைக்கு ஒத்த சொல்
23. அவலும் இதுவும் கடவுளுக்கு விருப்பம்

## புதிர் 047 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வா | ணி | 12 ப | ம் | ■ | 13 வா | 2 வ | 14 ச | ம் |
| ச | ■ | 3 த | ன் | மா | ன | ம் | கு | ■ |
| னை | ■ | வி | ■ | ■ | ம் | 4 பு | னி | ல் |
| 5 மு | த | 15 சு | ர | பி | 16 அ | ■ | 6 கு | டா |
| 7 க | டு | வ | ன் | 17 வெ | ட் | டி | ள | 18 அ |
| லா | 19 சூ | ர் | ■ | ண் | டை | 20 தா | ன் | ட் |
| ய | ட | க் | ■ | க | ■ | ய் | வா | ச |
| ர் | ல் | க | ■ | ட் | ■ | 8 ம | ம | தை |
| 9 க | ட | ம் | 10 த | டி | 11 க | ண் | ண | ன் |

*பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:*

*செல்வி.த.கயல்,*
*பெருந்தெரு, திருகோணமலை*

*திரு.எஸ். மாணிக்கதுரை*
*மத்தியவீதி, திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

# “என்னை அறிந்தால்”

## இயக்குனர் கௌதம் மேனனின் அஜித், திரிஷா, அனுஷ்கா நடிக்கும்



கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக காத்திருந்த அஜித் ரசிகர்களுக்கு செம்ம விருந்தாக வந்துள்ளது என்னை அறிந்தால். போலிஸ் படம் என்றாலே பழிவாங்குதல் இல்லை என்றால் எப்படி, அதே கதை களத்தை தான் கௌதம் கையில் எடுத்திருக்கிறார். படத்தின் ஆரம்பத்திலேயே அனுஷ்காவை விமானத்தில் வைத்து பார்க்கும் அஜித், அதன் பின் காபி ஷாப்பில் சந்திக்க, அங்கு அருண் விஜய் கும்பல் அவரை கொலை செய்ய வருகிறது. அங்கு கத்தி குத்துடன் தப்பிக்கும் அஜித், மருத்துவமனையில் தன் பிளாஸ் பேக் காட்சிகளை நினைத்து பார்க்கிறார்.

துடிப்பான போலிஸ் அதிகாரி, நேர்மையாக வாழ்கிறார். அப்படி இருந்தாலே பிரச்சனை வரும் என்பது தமிழ் சினிமாவின் எழுதப்படாத விதி. இதற்கிடையில் அஜித் ஒரு கேங்ஸ்டர் கும்பலை பிடிக்க அருண் விஜய்யுடன் நட்பாகி அவர்களை கொல்கிறார். அந்த நேரம் அருண் விஜய் பார்வை அஜித் பக்கம் திரும்புகிறது. பின் த்ரிஷாவை ஒரு கட்டத்தில் பார்க்க அவர் ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தையுடன் இருக்கிறார். ஆனால், விவாகரத்து ஆனவர். வழக்கம் போல் அவருடன் காதல், திருமணமாக அரங்கேறும் நேரத்தில் த்ரிஷா கொலை செய்யப்படுகிறார். இதை தொடர்ந்து அந்த கொலையை யார் செய்தார்கள் என்று அஜித் தேடி போக நினைத்தாலும் த்ரிஷா மகள் நலனுக்காக இந்த வேலையை விட்டு ஒதுங்குகிறார். ஆனால் மீண்டும் ஒரு கட்டத்தில் நண்பருக்காக காக்கிசட்டையை போட, மீண்டும் அருண் விஜய் இந்த முறை அனுஷ்காவிற்காக வருகிறார்.



அவரை ஏன் அருண் விஜய் பின் தொடர வேண்டும், அஜித் இதை முறியடித்தாரா . என்பதே மீதிக்கதை.

அஜித் வழக்கம் போல் ஒன் மேன் ஷோ தான், ஒவ்வொரு காட்சியிலும் பின்னுகிறார். இரண்டாம் பாதியில் அருண் விஜய்யுடன் சேசிங் காட்சி படத்தின் ஹைலைட். அனைவரும் அழகான அளவான நடிப்பை தந்துள்ளனர். மொத்தத்தில் காக்கிசட்டையை அஜித் அணிந்து கொண்டு எதிரிகளை அடித்து நொறுக்குகிறார்.



## “அனேகன்” என் மைல் கல்

தமிழ் சினிமா தாண்டி இந்திய சினிமா அளவில் முன்னணி நடிகராகிவிட்டார் தனுஷ். இவர் நடிப்பில் கடந்த வாரம் வெளிவந்த ஷமிதாப் படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. இந்நிலையில் இந்த வாரம் இவரின் அனேகன் படம் வரவிருக்கிறது. இப்படம் தான் தனுஷ் திரைப்பயணத்தில் அதிக பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட மேலும், அதிக திரையரங்குகளில் ரிலிஸாகும் இந்த படம் தனுஷின் திரைப்பயணத்தில் ஒரு மைல் கல்லாக அமையும் என கோலிவுட் வட்டாரங்கள் கூறுகின்றது.

## இடுப்பை கிள்ளியவருக்கு தர்ம அடி

சிசிஎல்5 நட்சத்திர கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி, நடிகர் ஜீவா தலைமையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெலுங்கு வாரியர்ஸ் அணி வெற்றி பெற்றது. இதையடுத்து, நட்சத்திர கிரிக்கெட் குழுவினர் ஹைதராபாத் நட்சத்திர ஓட்டலில் விருந்துக்கு ஏற்பாடு செய்து இருந்தனர்.

இந்த விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நடிகை சார்மி சென்றிருந்தார். அங்கு 18 வயதுடைய ரசிகர் ஒருவர் சார்மியை அணுகி ஒரு போட்டோ எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். சார்மியும் சம்மதித்து போஸ் கொடுத்துள்ளார். அப்போது அந்த ரசிகர் திடீரென சார்மியின் இடுப்பை கிள்ளியதால் அதிர்ச்சி அடைந்தோடு, ஆவேச சத்தத்துடன் ரசிகர்களை தள்ளிவிட்டுள்ளார். சார்மியின் அலறலை கேட்டு விருந்தில் கலந்துகொண்ட சிலர், அந்த ரசிகருக்கு தர்மஅடி கொடுத்து விரட்டி அடித்துள்ளனர்.



## புலிக்குப் பிறந்தது பூனையா?

இசையமைப்பாளர், பாடகி, நடிகை என அனைத்து துறைகளிலும் தன் திறமையை நிஷரூபித்த ஸ்ருதி, அடுத்து இயக்குனர் அவதாரம் எடுக்கவுள்ளார்.இதற்காக கதை மற்றும் திரைக்கதை அமைக்கும் பணியில் தற்போது உள்ளாராம். முதலில் குறும்படம் பின்பு வெள்ளித்திரை படம் என களம் இறங்கவுள்ளாராம்.

## “காதலிக்க நேரமில்லை”

கதாநாயகிகளின் காதல் பற்றி கிசுகிசுக்கள் வருகின்றன. ஆனால் தமன்னா மட்டும் இதுபோன்ற எந்த கிசுகிசுவிலும் சிக்கவில்லை. சக நடிகர்கள் மீது காதல் வயப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வரவில்லை. இதுகுறித்து தமன்னா கூறும்போது, காதலிப்பதற்கு எனக்கு நேரமே இல்லை. ஒரு நடிகை என்ற முறையில் எனக்கு சினிமாவுக்கு சம்மந்தம் இல்லாத வெளி ஆட்களை சந்திப்பதற்கு நேரமே இல்லை. என்னால் சினிமாவை பற்றியே எப்போதும் சிந்திக்கவும் பேசவும் முடிகிறது. இதைத்தவிர காதலிப்பது பற்றியெல்லாம் சிந்திக்க எனக்கு நேரமே கிடைப்பதில்லை என்கிறார்.



## இனி அமோக விற்பனை தான்



நடிகை சமந்தா, உள்ளாடை விளம்பரத்தில் நடிக்க உள்ளதாகவும் இதற்காக அவருக்கு 6 கோடி இந்திய 'ரூபாய் சம்பளம் வழங்கப்பட உள்ளதாகவும் செய்தி வெளியாகியுள்ளது. அவர் ஏற்கெனவே நகை விளம்பரங்களில் நடிப்பதுடன் குளிர்பான விளம்பரங்களிலும் நடித்து வருகிறார். இதையடுத்து தற்போது பிரபல உள்ளாடைகள் தயாரிப்பு நிறுவனம், சமந்தாவை தங்கள் நிறுவனத்தின் விளம்பர தூதுவராக நியமித்துள்ளதாக கூறப்படுகிறது.

## மீண்டும் கலக்க வரும் ஜோடி

தமிழில் வெளிவந்த சூப்பர் ஹிட் படமான முதல்வன் படத்தில் ஜோடி சேர்ந்த அர்ஜுன் மற்றும் மனீஷா கொய்ராலா மீண்டும் ஜோடி சேர உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தன்னுடன் ஜோடியாக நடிப்பதற்காக அர்ஜுன் பாலிவுட் நடிகை மனிஷா கொய்ராலாவை படக்குழுவினருக்கு பரித்துரைத்துள்ளதாக செய்திகள் வெளிவந்தது.

## வதந்தியால் வாடினார்

## ஏன் எனக்கு மட்டும்!



இரண்டு பாகங்களாக எடுக்கப்பட்டுள்ள பாகுபலி திரைப்படத்தின் முதல் பாகத்தில் அனுஷ்கா இடம் பெற மாட்டார், இரண்டாவது பாகத்தில்தான்அனுஷ்கா வருகிறார் என்று தகவல் பரவியது. ஆனால், இப்படிப்பட்ட வதந்தியை திரைப்படத்தின் நெருங்கிய வட்டாரங்கள் மறுத்துள்ளன.

பரவி வரும் வதந்தி உண்மையல்ல என்று தெரிவித்திருக்கிறார்களாம். அனுஷ்காவை சுற்றி மட்டுமே கடந்த சில காலமாக ஏன் இப்படிப்பட்ட செய்தி பரவி வருகிறது என்பது புரியாத புதிராக உள்ளது என அவருக்கு

## வேட்டையனாக விஷால்

விஷால் நடிப்பில் வெளிவந்த பாண்டிய நாடு அவரின் திரைப்பயணத்தில் பெரிய மாற்றத்தை தந்தது. இதைத் தொடர்ந்து மீண்டும் சுசீந்திரன் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார். இப்படத்திற்கு தற்போதைக்கு வேட்டையன் என்று தலைப்பு வைத்திருப்பதாக கூறப்படுகிறது. இந்த டைடிட்லை பி.வாசு அவர்களிடம் இருந்து உரிமை பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

## படமாயினும் இப்படியா?



இந்திய சினிமாவின் கவர்ச்சி புயல் என்றால் சன்னி லியோன் தான். சன்னி லியோன் தற்போது நடித்து வரும் லீலா படத்தில் 100 லிட்டர் பாலில் குளிப்பது போல் ஒரு காட்சியாம். இதை ராஜஸ்தானில் உள்ள ஒரு அரண்மனையில் படமாக்கியுள்ளனர். இதை கேள்விப்பட்ட பலரும் என்ன தான் படம் என்றாலும் இப்படியா செலவு செய்வார்கள் என்று அசந்து தான் போய் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் 40

# விஞ்ஞானம் எதனைத் தேடுகின்றது



வெளிப்பார்வைக்கு விஞ்ஞானம் வசதிகளை தேடுவது போல தோற்றமளிக்கின்றது. அது உண்மையல்ல! பதிலுக்கு விஞ்ஞானம் உலகில் விடுவிக்கப்படாதிருக்கும் புதிர்களுக்கான விடையையே தேடுகின்றது. முதலில் இந்த பிரபஞ்சத்தை நோக்குவோமாயின் அதன் தோற்றம், பொருண்மை, விஷ்தீரணம், பற்றி கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. எத்தனை இலட்சம் விண்மீன்கள், கோள்கள், உபகோள்கள், தூம கேதுக்கள் இந்த பிரபஞ்சத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பிரபஞ்சத்தை தாங்கிநிற்கும் அண்டவெளியை சிறிது எண்ணிப்பாருங்கள். கற்பனையிலாவது அதற்கு ஒரு எல்லையை வகுக்ககூடியதாக இருக்கின்றதா? விரிந்து கொண்டே போகும் பிரபஞ்சத்தையே எம்மால் கற்பனை பண்ணமுடியும். அப்படி இல்லை என ஒரு எல்லையை வைத்தால் கூட எமது மனம் அதற்கு அப்பால்? என்று கேட்டு அதன் எல்லையை தாண்டி குதிக்கும்.

இனி காலத்தை எடுங்கள். அதற்கும் கூட எல்லை இல்லை. இறந்த காலத்தை எண்ணினால் அது முடிவற்று நீண்டு செல்கின்றது. அதே போல் எதிர்காலத்தை எண்ணினால் அதற்கும் ஒரு தரிப்பிடம் இல்லை.

இனி இப்பிரபஞ்சம் எப்படி தோன்றியது? இதன் சிருஷ்டிகர்த்தா யார்? உயிரினம் எப்படி தோன்றியது? அப்படி தோன்றிய உயிரினம் சொகுசாக வாழமுடியாமைக்கான காரணம் என்ன? மனித வாழ்வு குறுகியதோர் காலத்தில் ஏன் முடிகின்றது? இன்னும் சிந்தித்தால். இந்த அகண்ட பிரபஞ்சத்தில் நாம் வாழும் பூமி தவிர்ந்த உயிரினம் வாழும் வேறு கிரகங்கள் இருக்கின்றனவா? அல்லது நாம் மட்டும் இப்பிரபஞ்சத்தில் தனித்து அநாதைகளாக விடப்பட்டுள்ளோமா?


கோள்களும் பிறவும் தமக்கான பாதையில் ஒருநிமிடம் கூட தரிக்காமல் வேகத்துடன் விரைந்துகொண்டிருக்கின்றனவே. அதற்கான சக்தி எங்கிருந்து கிடைக்கின்றது. மொத்தத்தில் சிருஷ்டியின் நோக்கம் என்ன? இவற்றைத்தான் விஞ்ஞானம் தேடுகின்றது. நாம் வாழும் பூமியை அண்மித்த கோள்களில் உயிரினம் இருக்கின்றதா? என்பதை நாசா சல்லடை போட்டு தேடுகின்றது. நிலவில் மனிதன் காலடி பதித்து அரைநூற்றாண்டு காலமளவில் ஆகின்றது. நாசா முதல் இந்தியாவரை பல நாடுகள் செவ்வாய் கிரகத்தை நுணுகி ஆராய்ந்து வருகின்றன. செவ்வாய் கிரகத்தில் நீர் இருந்ததற்கான ஆதாரங்கள் எட்டுகின்றன. இந்த ஆராய்ச்சிகள் மற்றொரு கிரகத்தில் மனிதன் குடியேறி வசிக்ககூடிய சாத்தியக் கூறுகளையும் அலசி ஆராய்கின்றன.

இந்த பிரபஞ்சமோ மிக மிக விசாலமானது. மனிதனின் வாழ்நாளோ குறுகியது. அதைக் காட்டிலும் மனிதன் உயிர்வாழ்வதற்கு பிராணவாயுவும் நீரும் ஆகாரமும் தொடர்ச்சியாக தேவைப்படுகின்றது. எமது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் இருக்கக் கூடிய எந்த ஒரு கோளிலாவது உயரினம் இருந்தால் கூட அந்த கோளை நெருங்குவதற்கு பாதகமான காரணிகளே மேலே கூறப்பட்டன. அதைக் காட்டிலும் நாம் பயணம் செய்ய முயற்சிக்கும் விண்வெளி விமானத்துக்கான எரி பொருளை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எடுத்துச் செல்ல முடியாது. எனவே எல்லையற்ற இந்த பிரபஞ்சத்தில் ஏதாவது ஒரு கோளில் எம்மைவிட நாகரீகம் படைத்த சமூகம் வாழ்ந்து கொண்டிருந்தால் கூட அவர்களை நெருங்கும் ஆற்றல் எம்மிடம் இல்லை. எனவே அவர்களிடமிருந்து. நாம் இப்போ தெரிந்து கொண்டிருக்கும் அறிவைக்காட்டிலும் மேலதிகமாக எதையும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு நிராகரிக்கப்படுகின்றது.

இருப்பினும் விஞ்ஞானிகள் பூலோகத்தில் எமது இருப்பைப்பற்றி இப்பிரபஞ்சத்தில் எங்காவது வாழ்ந்து கொண்டிருக்ககூடிய மிகவும் நாகரீகம் படைத்த உயிரினத்துக்கு எட்டக்கூடியவாறு தொடர்ந்து செய்திகளை அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். அதேசமயம் தொலை தூரத்தில் வாழ்பவர்களிடமிருந்து எமக்கு ஏதாவது 'சிக்னல்' கிடைக்கின்றதா என்பதையும் விழிப்புடன் அவதானிக்கின்றார்கள்.

அதே போன்று வான்வெளியில் தொலைதூரத்துக்கு பயணம் செய்வதற்கு எமக்கு தடையாக உள்ள காரணிகள் இல்லாத அல்லது வெற்றிகொள்ளகூடிய ஒரு நாகரீகம் மிக்க உயிரினம் முடிந்தால் ஒரு நாள் எமது கோளில் தடத்தை பதிக்க கூடியதாகவும் இருக்கலாம்.

**(வி. என். சந்திரகாந்தி)**



அப்படி நேருமாயின் அன்று மனித இனமானது பதில் காண முடியாதுள்ள பல புதிர்களுக்கு விடை காண்பதன் மூலம் தன் வாழ்கை பயணத்தில் ஒரு நீண்ட இராட்சத தடத்தை பதிக்ககூடியதாகவும் இருக்கலாம்!

இதனை ஒரு உதாரணம் மூலம் விளக்கமுயல்வோம். இங்கு நாமும் பிரபஞ்சமும் மூன்று அளவுக்கூற்றுக்குள் உட்பட்டிருக்கின்றோம். எமது அறிவின் பிராகாரம் காணுபவை எல்லாம் நீளத்தையும் அகலத்தையும் உயரத்தையும் கொண்டு அமைந்துள்ளன. நாம் வேற்று கோள் ஒன்றுக்கு செல்கின்றோம். அங்கு வாழும் மக்கள் இரு அளவுக்கூறுக்குள் வாழ்பவர்கள். அதாவது நீளம் அகலம் ஆகிய இரண்டு அளவுக்கூறே அங்கு உள்ளது. அங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் இருஅளவுக்கூறுக்கு உட்பட்டவர்கள் சிறையில் இருந்து தப்பிக்க முடியாது. ஆனால் நாம் அந்த மனிதனை சிறையிலிருந்து மீட்க வேண்டுமாயின் மேலால் கையை விட்டு எடுத்து விடலாம்.

அதேபோன்று அந்த இரு அளவுக்கூற்று மனிதனுக்கு ஒரு சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வேண்டி உள்ளது. அவனுக்கு எந்த ஒரு காயமும் ஏற்படாமல் நாம் மேலால் கையை வைத்து அந்த பாதிக்கப்பட்ட உறுப்பை சீர் செய்ய முடியும். அது அந்த இரு அளவுக்கூற்று மனிதனுக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும். அவன் எங்களுக்கு தனது நன்றியறிதலையும் தெரிவிப்பான்.

எம் மீது பொருத்தி பார்த்த இந்த உதாரணத்தை மறுபக்கமாக பார்ப்போம். வேற்று கிரகத்தில் இருந்து மூன்று அளவுக்கூறுக்கு பதிலாக நான்கு அளவுக்கூறுகளுக்கு உட்பட்ட ஜீவராசிகள் எமது பூலோகத்துக்கு வருகின்றார்கள். எமது சிறைகளில் பல கைதிகள் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் வெளியே வரவேண்டியிருந்தால் சிறை அதிகாரி கதவை திறந்து விடவேண்டும். ஆனால் வருகை தந்திருக்கும நான்கு அளவுக்கூற்று ஜீவராசிகளால் கதவை திறக்காமலே கைதிகளை வெளியே எடுத்து தப்பித்து செல்ல அனுமதிக்கமுடியும்.

அதே போன்று எம்மில் எவருக்காவது சத்திரசிகிச்சை செய்ய வேண்டி உள்ளதாக கருதுவோம். அந்த நாலு அளவுக்கூற்று ஜீவராசி எமது உடலைக் காயப்படுத்தாமலே உள்ளுறுப்பை சீர்செய்து விடலாம். நாமும் அவனை பாராட்டி நன்றி தெரிவிப்போம்!

எமது விஞ்ஞானிகள் இலேசுப்பட்டவர்கள் அல்லர். இறைவன் சிருஷ்டியில் பூலோகம் தவிர்ந்த பிற கோள் ஒன்றிலாவது உயிரினம் இல்லாவிடாலும் கூட நாமாயினும் எமது பிற கோள் ஒன்றில் மனிதனை குடியேற்றுவோம் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். ஒரு சமயம் விபத்தொன்றில் பூலோகம் முற்றாக அழிந்தாலும் மனித இனம் மற்றொரு கோளில் வாழ்ந்துகொண்டிருக்குமல்லவா?

சரி... அவையனைத்தையும் தான் விடுவோம். மனிதனுக்கு மறுபிறப்பு என்பதுண்டா என்ற கேள்விக்கு இதுவரை அதாரபூர்வமான விடையை எந்த விஞ்ஞானியிலாவது உறுதியாக கூற முடிந்ததா? இல்லவே இல்லை! உலகில் இரகசியங்களாக பேணப்படுவனவற்றை விடுவிக்க முடியாதிருப்பதுதான் இந்த பிரபஞ்சத்தின் நீட்ச்சிக்கு அத்திவாரமாக உள்ளது. மறு பிறப்பு உண்டு என்று உறுதிசெய்யப்பட்டால் மனிதன் சும்மா இருப்பானா? வயோதிபம் என்பது கூட இயற்கை எமக்கு வழங்கியுள்ள ஒரு சுவாரசியமான வாழ்கை அனுபவம் என்பதை மறந்து மறு பிறப்புக்காக எதையும் செய்ய துணிவான்.

இவையெல்லாம் பிரபஞ்சத்தின் புதிர்கள். இப்புதிர்களை விடுவிக்கும் முயற்சியில் இதுவரை விஞ்ஞானம் எவ்வளவு தூரம் வெற்றியீட்டியுள்ளது என்பது கேள்விக்குறிதான்!

# வறுமையின் கொடுமையில் ...

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

அன்றைய தினம் காலையிலேயே எழுந்து விட்டேன். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரின் தேர்த் திருவிழாவினை காண்பதற்ககாவும், கொக்கட்டிச்சோலைக்கு சற்றுத் தொலைவில் வாழும் ஒரு முன்னாள் போராளியைச் சந்திப்பதாகவும் திட்டமிட்டிருந்தோம். மோட்டார்சைக்கில் மண்முனைக் கரையில் நிறுத்தப்பட்ட போது நேரம் 10 மணியிருக்கும். வாவியைக் கடப்பதற்கு உதவும் மிதப்புப் பாதைகள் வந்து கொண்டிருந்தன. பாதை கரைக்கு வந்ததும் நாமும் ஏறிக்கொண்டோம். நான் பயந்திருந்தபடி அசம்பாவிதங்கள் ஏதும் இன்றி பாதை எம்மை மறுகரையில் இறக்கிவிட்டது.

வீரமும் சோகமும் விளைந்த கொக்கட்டிச்சோலைக்குள் நாம் நுழைந்த போது எமது மோட்டார்சைக்கிலை மேலே செல்ல அனுமதிக்க முடியாது என்றார்கள் திருவிழாவின் வாகனங்களை கட்டுப்படுத்தும் இளைஞர் கோஸ்டியினர். அப்போது எனது வழிகாட்டி நண்பர் வாயில் விரலை வைத்து விசில் அடிக்க, அருகில் இருந்த ஒருவர் "அண்ணை நீங்களா" என்ற படியே அருகில் வந்தார். அடுத்த நிமிடம் எமக்கு தொடர்ந்து செல்ல அனுமதி கிடைத்தது.

எனது வழிகாட்டி நண்பருக்கு எங்கு சென்றாலும் எல்லோரையும் தெரிந்திருந்தது. சேவை நோக்கம் கொண்ட அவரை ஊர் பெருசுகள் எல்லோரும் பலரும் அறிந்திருந்தனர்.

படுவாங்கரை கடந்து சிறிது நேரத்தில் நாம் ஒரு சிறு கிராமத்தினுள் நின்றிருந்த போது எனது நண்பர் தொலைபேசியூடாக நாம் இன்று சந்திக்கவிருப்பவருடன் தொடர்புகொண்டு இடத்தை நிட்சயப்படுத்திய பின்னர் ஒரு சிறு ஒழுங்கையினூடாகச் சென்று ஒரு வீட்டின் முன் மோட்டார்சைக்கிலை நிறுத்தினார். எம்மை நோக்கி ஒரு சிறுவன் ஓடி வந்தான். அவனின் பின்னே அவனின் தாயார் வந்தார். உள்ளே செல்லமுடியாத அளவிலான ஒரு குடிசை. வெளியே கிணற்றிற்கு அருகே மரநிழலில் அமர்ந்து கொண்டோம். எம்மருகிலேயே அமர்ந்து கொண்டார் அந்தப் பெண்ணும்.

அவரின் ஒரு கை சிதைந்திருந்தது. தோள்மூட்டுக்கும் முழங்கையுக்குமான இடைவெளி மிகவும் சிறிதாக இருந்தது. நான் அதை கவனிப்பதை கண்ட அவர், 2008ம் ஆண்டு இறுதியில் முழுமாதக் கர்ப்பிணியாக இருந்த போது செல் பட்டு தனது கை முறிந்த போது அதை மருத்துவர்கள் தகடுகள் வைத்து காப்பாற்றியதாகவும், அப்போது தோள்மூட்டுக்கும் முழங்கையுக்குமான எலும்பில் பெரும்பகுதி அகற்றப் பட்டதாகவும் கூறினார். அந்தக் கையினால் எதுவித வேலைகளையும் செய்ய வேண்டாம் என்று கூறப்பட்ட தாகவும், எனினும் கணவரை முள்ளிவாய்க்காலில் இழந்தபின் கைக்குழந்தையை பராமரிப்பதற்காக அந்தக் கையை பாவித்ததனால் கையினுள் இருந்த தகடுகளும் ஆணிகளும் இடம்பெயர்ந்து பலத்த சிரமத்தை தந்த போது மீண்டும் வைத்தியர்களை அணுகியிருக்கிறார். அதில் ஒரு வைத்தியரிடம் சென்ற போது அவர் இந்தக் கையை காப்பாற்றுவது மிகக் கடினம் ஆனால் முயற்சிக்கிறேன் என்று முயற்சித்திருக்கிறார். ஆனால் அந்தக் கையால் எதுவித பாரத்தையும் தூக்கினால் கையை அகற்றவேண்டி வரும் என்னும் செய்தியும் கூறப்பட்டிருக்கிறது அவருக்கு.

அவர் வீட்டில் நான் தங்கியிருந்த போது அவர் கிணற்றில் நீர் அள்ளும் முறையைக் கண்ணுற்றேன். "கப்பியில் இருந்து வரும் கயிற்றை ஒரு கையால் இழுத்து பின்பு குனிந்து இழுத்த கயிறை வாயினால் கவ்வி மீண்டும் கயிற்றை இழுத்து" இவ்வாறு நீரை அள்ளுகிறார். இவரை இவரது வயதான தகப்பனாரே கவனித்துவருகிறார். ஆனால் அவர் தொழில் தேடிச் செல்லும் போது இவர் தனியேயே வாழ்க்கையை நடாத்துகிறார்.

தன்னால் தலை சீவி முடிகட்டவோ, உடைகளை மாற்றிக்கொள்ளவோ முடிவதில்லை. குழந்தையை ஒரு கையால் பராமரிக்க மிகவும் சிரமப்படுகிறார். அவரின் உறவினர் ஒருவரின் உதவி கிடைக்கிறது என்பதனால் சமாளிக்கமுடிகிறது என்றார்.

அவரது உடலெங்கும் காயங்கள். ஒரு காலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. 2008ம் ஆண்டு இறுதியில் காயப்பட்ட பின்னர் பிரசவம் நடந்திருக்கிறது. அதன் பின்பும் 2009ம் ஆண்டு மீண்டும் காயப்பட்டிருக்கிறார். காயங்களின் வலியும், சூழ்நிலைகளும் மன அழுத்ததை கொடுத்திருக்கின்றன. அந்நாட்களில் கணவரும் கொல்லப்பட மனம்பேதலித்து சில காலம் இருந்ததாயும், குழந்தையையும் தூக்கியபடியே பங்கருக்கு வெளியில் நின்றிருந்த நேரங்களில் அருகில் இருந்தவர்கள் இவரை பல முறை பங்கரின் உள்ளே இழுத்து காப்பாற்றிய தாகவும் கூறினார். அப்படி அவர் செல் மழைபோல் கொட்டிய நேரங்களில் வெளியே நின்றும் தனக்கு மரணம் வரவில்லையே என்று கூறியழுதார். முள்ளிவாய்க்கால் நாட்களின் பின் வருமானமின்றி, குழந்தைக்கான உணவுகளின்றி வாழ்ந்திருந்த நாட்களில் இரு தடவைகள் குழந்தையுடன் தற்கொலைக்கு முயன்று தோற்றிருக்கிறார்.

இவருடன் பேசிக்கொண்டிருந்த போது அவரின் படலைக்கருகே வந்த ஒருவருடன் உரையாடிவிட்டு வந்தார். அவர் கண் கலங்கியிருந்தது. ஏதும் பிரச்சனையா என்றார் எனது நண்பர்.

அண்மையில் கையை இரண்டாம் தரம் சத்திரசிகிச்சை செய்வதற்காக பணம் தேவைப்பட்டிருக்கிறது. உள்ளூரில் 20,000ரூபா வட்டிக்கு எடுத்திருக்கிறார். மாதாந்தம் வட்டியாக 1200 ருபாய் கொடுத்து வந்திருக்கிறார். ஏறத்தாழ ஒரு வருடத்தின் பின்பும் கடன் வாங்கிய தொகை குறையவில்லை. வட்டியை மட்டுமே கொடுத்திருக்கிறார். தற்போது வாங்கிய தொகை மீளச் செலுத்தமாறு கேட்டுப்போகிறார் வட்டிக்குப் பணம் வழங்கியவர்.

20000ரூபாவுக்கு 1200ரூபா வட்டி என்பது எனக்குப் நம்ப முடியாத தொகையாக இருந்ததால் இரு தடவை அது பற்றி மீண்டும் மீண்டும் விசாரித்தேன். அருகில் இருந்த நண்பர் ஆம் இது ஊர் வட்டி. அவர் சொல்வது உண்மைதான் என்றார். என்னால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்கமுடியவில்லை.

எவ்வாறு இந்த வட்டிக்கான பணத்தைக் கொடுத்தீர்கள் என்று கேட்டேன். ஒரு உதவி நிறுவனம் தனக்கு தரும் 2000ரூபாவில் இந்தத் தொகையை செலுத்துவதாகவும் மிகுதியிருக்கும் 800 ருபாயில் மாதச் செலவை கவனிப்பதாயும் கூறினார். சில நிமிடங்கள் பெருத்த மௌனமொன்று எம்மிடையே நிலவிற்று.

போராட்டத்திற்காக வாழ்வினை அர்ப்பணித்தவர்களின் வாழ்வு இத்தனை கொடியதாக இருக்கும் என்று நான் கற்பனையிலும் நினைத்ததில்லை. கற்பனைக்கும் அப்பாற்பட்ட வேதனைகளையும் சோதனைகளையும் கொண்டிருக்கிறது அவர்களது வாழ்வு.

அங்கிருந்தபடியே நண்பர் ஒருவரை தொலைபேசியில் அழைத்து இவருக்கு உதவ முடியுமா என்றேன். மிக விரைவிலேயே இந்தப் போராளியின் கடனை அடைப்பதற்கான பணத்தை அனுப்புவதாகப் பதில் அனுப்பியிருந்தார், நண்பர். அன்று மாலையே எனது வழிகாட்டி நண்பர் வட்டிக்கு கொடுத்தவரிடம் சென்று இந்தப் போராளியின் கடனை அடைத்தார். இதற்குப் பின்னான நாட்களில் இவரின் வேறுசில கடன்களையும் இன்னொரு நண்பர் செலுத்தி அவரின் காணிக்கான உறுதியையும் பெற்றுக்கொடுத்தார். இவர்களை விட வேறுசிலரும் இவருக்கு தற்போது உதவுகிறார்கள்.

அன்று மாலை மட்டக்களப்பில் ஒரு உணவகத்தில் மாலையுணவின் விலை 800ருபா என்ற போது உணவின் ருசியை மனச்சாட்சி தின்றிருந்தது.

**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# இருட்டில் அடங்கிப்போன மர்மங்கள்

எமது நாட்டில் கடந்த சில முக்கிய வருடங்களை மறந்துவிட முடியாது. அவ்விதம் நாம் மறக்க முயற்சி செய்தாலும் அவை எம் கண்களுக்கு எதிரே வந்து நடந்தவற்றை மீண்டும் நினைவு படுத்திக் கொண்டே இருக்கும். அவற்றில் நல்லவைகளும் உண்டு அவ்வாறே தீயவைகளும் உண்டு.

சிறுபான்மையினரான தமிழர்களை பொறுத்த வரையில் அனேகமான வருடங்கள் தீய சம்பவங்களை நினைவுபடுத்தும் வருடங்களாகவே உள்ளன. சில மாதங்களைக் கூட மறந்துவிட முடியாது. கறுப்பு யூலை என்பதை என்றுமே தமிழ் மக்களால் மறந்துவிட முடியாத ஒன்றாகும்.

தமிழ் மாவட்டமொன்றில் தொடரூந்து பாதைக்கு குறுக்கே கிடந்த ஓர் ஆணின் சடலம் அப்பகுதியில் 1990ம் ஆண்டு பெரும் அமளி துமளியை அங்கு ஏற்படுத்தியது. அந்த ஒரே ஒரு மர்மக் கொலையை அடிப்படையாகக் கொண்டு அன்று சுமார் பதினொருபேர் காணாமல் போயிருந்தனர். மேலதிக விசாரணைக்காக படையினரால் கொண்டு செல்லப்பட்ட அந்த பதினொரு பேரும் இதுவரை வீடு திரும்பவில்லை.

மேலும் அந்த அப்பாவி பதினொரு தமிழ் இளைஞர்களும் விவாகமானவர்கள். பலருக்கு குழந்தைகளும் உண்டு. அவர்கள் வளர்ந்து திருமணமாகி இன்று அவர்களுக்கும் குழந்தைகள் உண்டு. 1990ம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட அந்த ஆணின் சடலம் முஸ்லீம் இளைஞன் ஒருவரினது ஆகும். சொந்த கோப தாபத்தின் பேரிலே அந்த கொலை இடம்பெற்றதென அதன் பின்னர் இடம்பெற்ற புலன் விசாரணையிலிருந்து தெரிய வந்தாலும் அன்று எடுக்கப்பட்ட இனத்துவேஷமான திடீர் முடிவால் அப்பாவிகளான அந்த பதினொரு இளைஞர்களின் உயிர்கள் வீணே இரையாகின.

1990ம் ஆண்டு அவசரகால சட்டமும் ஊரடங்குச் சட்டமும் ஒன்றாக கைகோர்த்து செயல்பட்ட காலம் அது ஒவ்வொரு பிரதேசத்தின் ஒவ்வொரு பகுதியும் படையினரின் தனிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தன. பல நீதவான்கள் கூட பயணங்களின் போது தம்மை தாமே அடையாளப் படுத்தினாலும் வாகனங்களிலிருந்து கீழ் இறக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்ட காலம் 1990ம் ஆண்டு காலப்பகுதியாகும். குறித்த அந்த ஆணின் சடலத்தை பொதுமக்கள் சுற்றிவர நின்று பார்த்துக் கொண்டிருந்த பொழுது அப்பகுதியில் ரோந்து வந்த படையினர், அச்சம்பவத்தை அவதானித்துவிட்டு குழுமியிருந்தோரை அகற்றியபின் சடலம் கிடந்த இடத்திற்கு காவல் துறையினரை அழைத்திருந்தனர்.



மேலும் அங்கு நின்று கொண்டிருந்த பலரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டதையடுத்தே அப்பகுதிக்கு அப்பாலுள்ள தமிழ் பிரதேச மொன்றிற்குச் சென்று அந்த பதினொரு தமிழ் இளைஞர்களை கடற்படையினர் முகாமிற்கு கூட்டிக் கொண்டு சென்றிருந்தார்கள்.

உண்மையில் அங்கு இடம்பெற்றிருந்த அந்த படுகொலைக்கும், கைது செய்யப்பட்ட பதினொரு இளைஞர்களுக்கும் எந்தவித தொடர்பும் இருக்கவில்லை. அங்கு கொலை செய்யப்பட்ட நிலையில் கிடந்த அந்த முஸ்லீம் ஆணின் உறவினர்கள் அச்சம்பவத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டனர். அங்கு இறந்து கிடந்தவருக்கும் அப்பகுதியில் இன்னும் சில முஸ்லீம் நபர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக சொந்தப் பிரச்சினைகள் தொடர்பாக விரோதங்கள் இருந்து வந்தன. அந்த விரோதங்களே இறுதியில் கொலையில் முடிவு பெற்றிருந்தது குறித்த நபரை கொலை செய்தவர்கள் யார் என்பது ஊராருக்கு தெரிந்திருந்தும் தம் ஒரே இனத்தவர்களை காவல்துறையினருக்கு காட்டிக் கொடுக்க எவரும் முன் வரவில்லை.

அந்தப் பழியை தருணத்திற்கேற்ற வாறு அப்பகுதி அயல் கிராமத்து தமிழ் இளைஞர்கள் மீது திசை திருப்பியதால் கொலைக்கு உடந்தையாக இருந்த முஸ்லீம் இளைஞர்கள் தப்பித்துக் கொண்டனர். புலிவேட்டை என்ற நடவடிக்கையில் அவ்விதம் அன்று அகப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலர் இன்று கூட வெளியில் வரமுடியாது சிறைக்கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

எமது புதிய ஜனாதிபதி சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள் மீது கருணை கொண்டு கூடிய விரைவில் விடுவிக்க கோரி பல அமைப்புக்கள் இன்று கோரிக்கை விடுத்து வருகின்றன. அதற்கான சட்ட நடவடிக்கையும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஆனால் அன்று அக்கொலை தொடர்பில் சுற்றி வளைக்கப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட பதினொரு தமிழ் இளைஞர்களின் மனைவிமார் இன்று விதவைகளாக வாழ்ந்தாலும் பலர் மறுதிருமணம் புரிந்து மிக சிறப்பாக தத்தமது குழந்தைச் செல்வங்களுடன் சகல சௌபாக்கியங் களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அன்று அந்தக் கொலைக்கும் கைது செய்யப்பட்டவர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என பாதுகாப்பு படையின் தலைமையகம் தெளிவாக தெரிந்திருந்து அவர்களை விடுவிக்க உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால் குறித்த உத்தரவு கிடைக்குமுன் அவ் அப்பாவி இளைஞர்கள் காணாமல் போய் கொல்லப்பட்டனர்.

சில பாதுகாப்பு படையினரிடம் உள்ள அவாக்களில் பெரிய அவா தம் பதவியை உயர்த்திக் கொள்ளுதலாகும். அதற்காக அந்த அதிகாரிகள் எதையும் செய்யத் துணிவார்கள். அன்று அந்த அப்பாவி இளைஞர்களின் கொலை தொடர்பில் எந்தவித விசாரணைகளோ, புலனாய்வுகளோ இடம்பெற வில்லை. சகலதும் காதும் காதும் வைத்தாற் போல் நிறைவேற்றி முடிக்கப்பட்டது.

சியாமளா அன்று இடம்பெற்ற அசம்பாவிதத்தினால் விதவையாக்கப்படவர்களில் ஒருத்தி. அவளும் கணவனை கடற்படையினர் 1990ம் ஆண்டு கைது செய்து வெள்ளை வேனில் ஏற்றிக்கொண்டு போகும் பொழுது ஏனைய பெண்களுடன் சேர்ந்து அவளும் அவளது ஐந்து வயது பெண் குழந்தையும் கதறி அழுதனர்.

சியாமளாவின் அத்திருமணம் காதல் திருமணமாக இருந்தாலும் அவர்களை அவளின் பெற்றோர் ஏற்றுக்கொண்டி ருந்தனர். கடந்த ஒரு மாத காலமாகத் தான் அவளின் பெற்றோர் வழங்கிய வீட்டில் சந்தோசமாக வாழத் தொடங்கினர். அதற்குள்ளேயே எல்லாம் முடிந்து விட்டது. அவளும், அவளது ஐந்து வயது குழந்தையும் தனித்து விட்டனர். அவளது கணவன் அரச நிறுவனமொன்றில் தற்காலிக அடிப்படையில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் கைது செய்யப்பட்ட மாதத்திலேயே நிரந்தமும், ஓய்வூதியமும் கொண்ட பதவிக்கு உயர்த்தப்படவிருந்தான்.

தனித்துவிட்ட சியாமளா தனியார் வீடியோ கடையொன்றில் வேலை செய்து வந்தாள். எனவே அவளுக்கு பொருளாதாரக் கஷ்டம் இருக்கவில்லை. அவளது சகோதரர்கள் பலர் வெளிநாடுகளில் வசிப்பதால் அவளையும் அவளது குழந்தையையும் நன்கு கவனித்து வந்தனர்.

தனது கணவனை இழந்த நினைவிலிருந்து வெளிவரவேண்டும் என்பதற் காகவே அவள் அந்த வீடியோ கடையில் வேலை செய்தாள். அங்கு வேலை செய்யும் பொழுது அவளுக்கும், பக்கத்து கடையில் வேலை செய்யும் சுதாகரனுக்கும் நெருக்கம் ஏற்பட்டது.

அவளும் எத்தனை காலத்திற்குத் தான் அவ்விதம் விதவையாக சமூகத்தில் வாழ்வது? தனக்கென்று ஒரு துணையை தேடிக் கொள்வதில் ஒன்றும் தவறில்லையே!

சுதாகரன் அவனது பெற்றோருடன் வளரவில்லை. அவன் வளந்தது அவனது சிற்றன்னையுடனே. சிற்றன்னையும் இவனுக்கு ஓர் நல்ல பெண்ணை திருமணம் செய்து கொடுப்பதற்காக தேடிக்கொண்டிருந்தாள். ஆனால் சுதாகரனின் காதல் விவகாரம் தெரிய வந்ததும் குடும்பத்தில் பல சிக்கல்கள் உருவானது. சுதாகரன் தனது பெற்றோரையும் தன் சிற்றப்பா, சின்னம்மாவையும் எதிர்த்து நின்று சியாமளாவை திருமணம் செய்து கொண்டான். கணவனை இழந்த சியாமளாவுக்கும் அவள் குழந்தைக்கும் வாழ்வு கொடுக்க சுதாகரன் முன்வந்ததை அப்பிரதேசத்தில் பாராட்டாதவர்கள் எவருமே இல்லை.

சியாமளாவின் சகோதரர்கள் அவனை வெளிநாட்டுக்கு அழைத்து அவனுக்கு ஒரு வியாபார நிலையம் ஒன்றையும் அங்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். வெகுவிரைவில் தனது குடும்பத்தினரையும் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல தேவையான நடவடிக்கைகளை அவன் மேற்கொண்டு வருகின்றான்.

**- பாலையூற்றான் -**

இப்படியும் நடக்கலாம்

## எப்படித்தான் முடிந்ததோ?

பிரித்தானியாவின் பர்மிங்ஹாம் நகரிலுள்ள மருத்துவமனை ஒன்றின் அவசர உதவிப் பிரிவுக்கு வெளியே மாரடைப்பு வந்த நபர் ஒருவருக்கு உதவாமல் கால்சட்டைப் பைக்குள் கைவிட்டபடி நின்று வேடிக்கை பார்த்த மருத்துவ மனை ஊழியரின் செயல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தகுந்த நேரத்தில் சிகிச்சை பெற முடியாமல் இறந்த நபருக்கு உதவத் தவறிய மருத்துவமனை ஊழியர் மீது தொடரப்பட்ட வழக்கில், அவருக்கு எட்டு மாத கால சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தலைவரின் மகள் சிறையில்



கொரியன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்தின் தலைவர் சோ யாங் ஹோ மகள் ஹீதர் சோ விற்கு விமானப் பணிப்பெண், பாக்கெட் ஒன்றில் மெகாடமியா பருப்பு (வேர்க்கடலை) இனை வழங்கியுள்ளார். அதனை தனக்கு ஒரு கிண்ணத்தில் வழங்காததால் ஆத்திரமடைந்த அவர், விமான பணிப் பெண்களை வெளியேறு மாறு கூறியதுடன் தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு விமான பணிப்பெண்களிடம் மிருகத்தனமாக நடந்து கொண்ட அப்பெண்ணுக்கு ஓராண்டு காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## தூக்குக் கயிறு ஏலத்தில்



பண்ணை வீட்டில் பதுங்கு குழியில் பதுங்கியிருந்த சதாம் உசைனை அமெரிக்க இராணுவம் கைது செய்து. 3 ஆண்டுகள் விசாரணைக்கு பிறகு 2006 டிசம்பர் 30ஆம் திகதி அவர் தூக்கிலிடப்பட்டார். சதாம் உசைனை தூக்கிலிட்ட கயிறு ஏலத்தில் விடப்பட்டதையடுத்து தற்போது வரை 92 கோடியே 96 இலட்சம் ரூபா வரை [illegible] மேலும் ஏலத்தொகை அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

- மைக்கேல் வாக்னர்- ஜோஹனே என்ற கனடிய தம்பதியினர், வியட்நாமில் மோசமான உடல்நலத்துடன் அனாதை விடுதியில் இருந்த 18 மாத இரட்டை பெண் குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வந்துள்ளனர். குழந்தைகளுடைய மரபணு கோளாறு உடல் உறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனால் கல்லீரல் செயல்பாடு மிகவும் மோசமானதையடுத்து, அவர்களுக்கு மாற்று உடல் உறுப்புகள் பொருத்துவதன் மூலமே அவர்களுடைய உயிரை காப்பாற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டது.
குழந்தையை உயிர்பிழைக்க வைக்க தந்தை தன் கல்லீரலை கொடுத்துள்ளார். மற்றைய குழந்தையும் 3 வயதை தாண்டும் வரை தான் பொறுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.
- இத்தாலி கடலில் பயணித்த கோஸ்டா கன்கார்டியா என்ற சொகுசு கப்பலில் மொத்தம் 4262 பயணிகள் இருந்துள்ளனர். இந்நிலையில் கப்பல் நடுக்கடலில் சென்றபோது பாறை ஒன்றின் மீது மோதியதில், கடலில் மூழ்கத் தொடங்கியுள்ளது. விரைந்து சென்ற மீட்பு படையினர், கப்பல் ஊழியர்கள் உட்பட 4229 பயணிகளை மீட்டுள்ளனர்.
- பிரித்தானியாவில் பறவைகளின் இறக்கைகள் போல் முதுகில் ராட்சத மச்சத்துடன் குழந்தை ஒன்று வாழ்ந்து வருவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# வடகிழக்கில் இராணுவ மயத்திற்கான அவசியம்

இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிடுகிறது. புதிய அரசாங்கம்கூட இந்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து முடித்த பின்னரும் வட கிழக்கில் இராணுவத்தை நிலை நிறுத்த தீர்மானிப்பது ஏன்? புலிகளை அழிக்க வட கிழக்கில் இராணுவம் செறிவாக்கப்பட்டது எனில் தொடர்ந்தும் வடகிழக்கில் இராணுவ மயத்தை பேணுவதன் மூலம் தமிழ்மக்களை ஒடுக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறதா?

தமிழ் மக்களின் வாழ்க்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசியல் செயற்பாடுகளை ஒடுக்கும் நோக்கில் தொடர்ந்தும் இராணுவ மயத்தை செறிவாக்க முன்னைய அரசு தீர்மானித்தது. தமிழ் மக்கள் ஓர் சிவில் கட்டமைப்புக்குள் வாழக் கூடாது என்பதில் அந்த அரசு குறியாக இருந்தது. தமிழ் மக்களின் வாழ்விலிருந்து அரசியல் செயற்பாடுவரை இராணுவத்தால் கட்டுப்படுத்தும் செயற்பாடு என்பது நன்கு திட்டமிட்ட மிகப் பெரும் அடக்குமுறையின், ஒடுக்குமுறையின் வெளிப்பாடாகும்.

புதிய அரசு இராணுவ மயத்தை நீக்கும் என்று தமிழ் மக்களால் எதிர்பார்க்கப்பட்டது. குறைந்த பட்சம் இராணுவக் குறைப்புக்காவது இணங்கும் என்றே தமிழ் அரசியல் தலைமைகள் நம்பியிருந்தன. அண்மையில் யாழ்ப்பாணம் வந்த இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வடக்கில் இராணுவக் குறைப்புக்கு இடமில்லை என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தமிழ் மக்களின் மனங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் இயல்பான வாழ்வுக்கு குந்தகமாக அமையும் இராணுவ மயத்தை நீக்க வேண்டும் என்பதுவே தமிழ் மக்களின் இன்றைய முக்கியமான பிரச்சினையாகும். இதுவே நீண்டகாலமாக நிலவிவந்த எதிர்காலம் குறித்த பிரச்சினை என்பதும் இங்கு முக்கியமானது. இராணுவ மய நீக்கம் ஏன் அவசியமானது? இலங்கைத் தீவில் வடக்கு கிழக்கில் மாத்திரம் இராணுவச் செறிவை அமுல்படுத்தி இலங்கை அரசே பிரித்தாளுகிறதா?

தமிழ் மக்களின் காணிகள் உயர்பாதுகாப்பு வலயங்களாகவும் பாதுகாப்புத் தேவைக்கான சுவீகரிப்பு என்ற பெயரிலும் அபகரிக்கப்பட்டு அங்கு இராணுவ முகாங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த நிலங்களைச் சேர்ந்த மக்கள் அகதிமுகாங்களிலும் தெருக்களிலுமாக அலைகின்றனர். தம்மை தமது பூர்வீக நிலங்களில் குடியேற்றுமாறு அந்த மக்கள் போராடி வருகின்றனர். அந்த மக்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்ப வேண்டும் எனில் உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு இராணுவமுகாங்கள் அகற்றப்பட வேண்டும்.

இருபத்தைந்து ஆண்டுகளாக அகதி முகாங்கிலும் வீடற்றவர்களாகவும் வாழும் இந்த மக்கள் பல்வேறு வகையான சமூக உளவியல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அகதிமுகாங்களிலேயே பிறந்து வளரும் குழந்தைகள் குறித்து அவர்களின் எதிர்காலம் குறித்து அவர்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அகதிமுகாங்களில் பிறந்து வளரும் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையை அகதிமுகாங்களில் தொலைத்தனர். இனியும் இந்த நிலை தொடரக்கூடாது என்பதே அந்த மக்களின் எதிர்பார்ப்பாகும்.

வலிவடக்கு, சம்பூர் போன்ற பிரதேசங்களில் மாத்திரமின்றி வடக்கு முழுவதும் இராணுவ முகாங்களுக்காகவும் இராணுவப் பிரதேசங்களுக்காகவும் உயர்பாதுகாப்பு வலயங்களுக்காகவும் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலத்திற்குச் சொந்தக்காரச் சனங்கள் வீடற்றவர்களாக நிலத்தை பறிகொடுத்தவர்களாக அலைந்து கொண்டிருக்கின்றனர். இது இராணுவ மய நீக்கத்திற்கான அவசியமான அடிப்படையான ஓர் ஏதுவாக காணப்படுகிறது.

இராணுவத்தினர் மக்களின் பொது நடவடிக்கைகள் மீது கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுகின்றனர். பாடசாலைகளின் நிகழ்வுகள், ஆலய நிகழ்வுகள், வீட்டின் மரணச்சடங்குகள் என வாழ்வின் அத்தனை விடயங்களிலும் மூக்கை நுழைத்து வருகின்ற செயற்பாடு தமிழ் மக்களின் பொது வாழ்வை கடுமையாக பாதிக்கிறது. பொது மக்களின் இயல்பு வாழ்வில் - பொது நடவடிக்கைகளில் எதற்காக இவ்வாறு இராணுவத்தை கலக்க வேண்டும்?

இராணுவத்தினர் ஓர் படை நடவடிக்கையை இன்னமும் தொடர்கின்றனர் எனலாம். தமிழ் மக்களின் சிவில் வாழ்வை கண்காணிக்கின்றனர். ஓர் மரண வீட்டில்கூட இந்தக் கண்காணிப்பு தொடர்கிறது. ஓர் ஆலய திருவிழாவில்கூட . இந்தக் கண்காணிப்பு தொடர்கிறது என்றால் அது எப்படியான கண்காணிப்பு? தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகள், உரையாடல்களை கண்காணிக்கும் இந்த நடவடிக்கையை ஓர் படை நடவடிக்கையாகவே இராணுவம் மேற்கொள்ளுகிறது.

யுத்தம் முடிந்த பின்னரும் இராணுவம் தனது தீவிர நடவடிக்கைகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொண்டுள்ளது. வருடத்தின் மே மாத்திலும் நவம்பர் மாதங்களிலும் கடுமையான கெடுபிடிகளில் ஈடுபட்டுவருகின்றன. நல்லிணக்க ஆணைக்குழுவில் இராணுவத்தின் போர்க்குற்றம் குறித்து சாட்சியம் வழங்கியவர்களை கண்காணித்து அவர்கள் எச்சரிக்கைக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப் பட்டுள்ளனர். இலங்கை அரசு முன்னெடுத்த அந்த நடவடிக்கையில் அவ்வாறு இராணுவ அணுமுறை மேற்கொள்ளப்படுவது நமக்குப் பல்வேறு செய்திகளைச் சொல்கிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைள் குறித்தும் உள்ளக விசாரணை குறித்த நம்பகத்தை குறித்து தெளிவாக்கும் அதேவேளை சாட்சியம் அளிக்கும் மக்களை இராணுவம் கண்காணித்ததன் மூலம் சாட்சிகளை இல்லாமல் செய்தலுக்காகவா மேற்குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற கேள்வியும் எழுகிறது. புதிய அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் சில நாட்களாக முகாங்களுக்குள் முடங்கிய இராணுவத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் வீதி ரோந்துகளும் இப்போது மீண்டும் தொடங்கியுள்ளன.

பொது இடங்களில் நின்று மக்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். தற்போதைய சூழலிலும் சில போராட்டங்களில் இராணுவம் கண்காணிப்பு செய்துள்ளது. எனினும் வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்களை கோரியும் அபகரிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்குமாறு கோரியும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான போராட்டங்கள் கடும் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் மகிந்த அரசிலும் நடைபெற்றவை. இப்போதும் பாதுகாப்பின்மையான உணர்வுடனேயே போராட்டங்களில் மக்கள் ஈடுபடுகின்றனர்.

மேற்குறித்த போராட்டங்களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புக்கும் காணாமால் போகச் செய்யப் பட்மைக்கும் எதிரானது. இந்தப் போராட்டங்களில்



இராணுவத்தை வெளியேறுமாறும் மக்கள் கோரிக்கையை முன் வைக்கின்றனர். புதிய அரசு புதிய இராணுவமுகாங்கள் வராது, இனி காணிகள் சுவீகரிப்படாது என்று கூறுகிறது. மகிந்த அரசால் தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டதும் சுவீகரிக்கப்பட்டதையும் புதிய அரசு ஏற்றுக் கொள்கிறதா?

இனி அபகரிக்க மாட்டோம், அபகரித்ததைவிட மாட்டோம் என்பதும் அபகரிப்பு நடவடிக்கையே. இராணுவத்தை வெளியேற்ற மாட்டோம் என்பதன் மூலமும் அபகரிக்கப்பட்ட நிலங்களை இன்னமும் விடுவிக்காமையின் மூலமும் புதிய அரசும் தமிழர்கள் மீது மகிந்த முன்னெடுத்த அதே நடவடிக்கையை முன்னெடுக்கப் போகிறதா என்ற சந்தேகத்தை வலுக்கச் செய்துள்ளது.

வட கிழக்கை விட்டு இராணுவத்தை வெளியேற்றப் போவதில்லை என்பதன் மூலம் நடந்த நில அபகரிப்பை இன அழிப்பை மறைப்பதும் தொடர்ந்தும் அதை முன்னெடுப்பதுமா நோக்கம்? ஜனாதிபதித் தேர்தலின்போது இராணுவத்தை அகற்ற மாட்டோம் என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்தபோது அது சிங்கள மக்களின் வாக்குகளுக்காகவே அவ்வாறு கூறப்பட்டது என்றார்கள்.

இப்போது வடக்கில் இராணுவக் குறைப்பில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளபோது நாடாளுமன்றத் தேர்தலுக்காகவே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. வடக்கு கிழக்கில் இராணுவம் நிலை கொள்வதைத்தான் சிங்கள மக்கள் எதிர்பார்க் கிறார்களா? தமிழ் மக்களின் நிலத்தை அபகரித்து அவர்களின் இயல்பு வாழ்வை பாதிக்கும் ஓர் முடிவைத்தான் சிங்கள மக்கள் விரும்புகிறார்களா? சிங்கள மக்களின் பெயரால் அரசுகள் முன்னெடுக்கும் நடவடிக்கையா இது? அல்லது இவ்வாறான ஓர் திருப்திப்படுத்தலை செய்வதுதான் இன நல்லிணக்கமா?

அல்லது காலம் காலமாக தொடரும் சிங்கள பேரினவாத இராணுவ ஆக்கிரமிப்பு நோக்கில் இவ்வாறு தொடர்ந்தும் இராணுவ மயம் பேணப்படுகிறதா என்பது குறித்தும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. இலங்கைத் தீவின் பிற்பகுதிகளில் இல்லாத வகையில் தொடர்ந்தும் ஓர் பகுதி மக்கள் அல்லது ஓர் இன மக்கள் இவ்வாறு இராணுவ ரீதியாக கையாளப்படுவது ஒடுக்குமுறையும் பாரபட்சத்தின் வெளிப்பாடும். சம உரிமைகளை தர மறுப்பதைப் போல இராணுவ மயத்தை அமுலாக்குவதிலும் வட கிழக்கை ஓர் வேற்று நாடாக கையாளும் நடவடிக்கைகளை இலங்கை அரசுகளே மேற்கொள்ளுகின்றன.

கடந்த அரசில் மகிந்த ராஜபக்சவால் பறிக்கப்பட்ட சரத்பொன்சேகாவின் இராணுவ அந்தஸ்துக்கள் புதிய அரசினால் மீளளிக்கப்பட்டன. அது மாத்திரமல்ல மகிந்த அரசில் பறிக்கப்பட்டவைகளும் இழக்கப்பட்டவைகளும் பலருக்கு மீள அளிக்கப்படுகின்றன. புதிய ஜனாதிபதியின் பதவி ஏற்புடன் மிக விரைவாக அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தமிழர் தாயகத்திலிருந்து அவர்களின் இயல்பு வாழ்வை அச்சுறுத்தும் இராணுவமயத்தை நீக்கவோ குறைக்கவோ இலங்கை அரசு முன்வரவில்லை. இதன் மூலமும் பல தசாப்தங்களாகத் தொடரும் பாரபட்சத்தையே உணர முடிகிறது.

தமிழ் மக்கள் தங்களைத் தாங்கள் ஆளும் வாழும் உரிமைக்காக போராடினார்கள். கோரப்பட்ட சுய உரிமையை மறுத்ததோடு அதற்காக அவர்களின் இயல்பு வாழ்க்கையும் இருப்பிடத்தையும் இராணுவமயத்தின் ஊடாக பறித்தெடுப்பது மாபெரும் அநீதியிலும் அநீதி. இது சம உரிமையை மறுத்தலில் இருக்கும் ஆதிக்கத்தையே வெளிப்படுத்துகிறது. எனவே வட கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருக்கும் இராணுவ மய நீக்கத்தை வலியுறுத்தி மிக வீச்சோடு போராட வேண்டிய நிர்பந்தம் தமிழ் மக்கள்மீது திணிக்கப்படுகின்றது.


– – தீபச்செல்வன்– –
www.globaltamilnews.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒன்று கூடல் வைபவம் ஒன்றிற்காக ஒரு வகுப்பில் உள்ள 40 மாணவர்கள் தேநீர் தயாரிப்பதற்கு கொண்டு வந்த பொருட்கள் பற்றிய விபரத்தைக் காட்டும் பூரணமற்ற வென்வரிப்படம் இங்கு காட்டப்பட்டுள்ளது.




1. சீனியை கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை 20, தேயிலையை கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை 10, இதனை சீனி வென்வரிப்படத்தில் குறிக்க.
2. பால் மாவைக் கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை 26. சீனி, பால்மா ஆகியவை இரண்டையும் கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை x எனின், x ஐக் காண்பதற்கான சமன்பாடு ஒன்றை உருவாக்குக.
3. அதனை தீர்த்து சீனி, பால்மா ஆகிய இரண்டையும் கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கையை காண்க
4. சீனி மாத்திரம் கொண்டு வந்தர்களின் எண்ணிக்கையைக் காண்க.
5. இதில் ஆகக் குறைந்தது ஒன்றையேனும் கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கை யாது?
6. சீனி கொண்டு வந்தவர்கள் S, தேயிலை கொண்டு வந்தவர்கள் T எனில், S,T ஆகியவற்றின் தொடர்பை தொடைக்குறியீட்டில் தருக.

02. பின்வரும் தசம எண்களைப் பின்னங்களாக எழுதுக.
1. 0.08 2. 5.375 3. 10.35 4. 112.125

03. -3, -1, 1, 3 ... எனும் கூட்டல்விருத்தியின் முதல் 8 உறுப்புக்களின் கூட்டுத்தொகையை காண்க.

## பாடம் : வரலாறு

01. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் புகையிரத போக்குவரத்து விருத்தி கண்டது. அந்த வகையில் எவ்விரு இடங்களுக்கு இடையில் முதல் முதலில் புகையிரத சேவை நடைபெற்றது என பின்வருனவற்றிலிருந்து தெரிவு செய்க.
1. கொழும்பு - காலி 2. கொழும்பு - கண்டி
3. கொழும்பு - களனி 4. கொழும்பு - அபேபுஸ்ஸ

02. வளைகுடா நெருக்கடிகுள் உள்ளாகியிருந்த இரு நாடுகள்
1. ஈராக் - ஆப்கானிஸ்தான் 2. ஈரான் - எகிப்து
3. ஈராக் - குவைத் 4. சவுதி அரேபியா - புருணை

03. வீடு, உணவு, வேலை, கூலி என்ற சுலோகத்துடன் ஆரம்பித்த புரட்சியானது,
1. ரஷ்ய புரட்சி 2. பிரான்சிய புரட்சி 3. ஆங்கில புரட்சி 4. சீனப்புரட்சி

04. பேமா, சீனா, யாவா, சுமத்திரா, கம்போடியா ஆகிய நாடுகளுடன் இலங்கையானது வைத்திருந்த தொடர்பினை சரியாகக் காட்டும் விடை
1. படை வீரர்களை அனுப்பல், படை உதவி பெறல்
2. திருமண தொடர்பு 3. குடியேற்றத் தொடர்பு 4. சமயத்தொடர்பு

05. இலங்கைக்கு வருகை தந்த சோழர்கள் இராஜஇராஜ பெரும்பள்ளியை கட்டினர். இது பிற்காலத்தில் அழைக்கப்பட்ட விதம்
1. ரன்தொத் விகாரை 2. வெல்கம் விகாரை
3. நிஸ்ஸங்க மண்டபம் 4. ராஜகோபுர மத்தியஸ்தானம்

06. ஒல்லாந்தர்கள் ஆபத்தானவர்கள் அல்ல. இவர்கள் ஜப்பானுக்கு வரலாம் என கூறிய ஜப்பானிய ஆட்சி முறையானது.
1. ஈடோ ஆட்சி 2. ஷொகுன் ஆட்சி
3. மெஜிஜி ஆட்சி 4. கோமிங்டாங் ஆட்சி

07. வர்சேல்ஸ் உடன்படிக்கையின் படி ஜேர்மனி நாட்டிற்கு பணிக்கப்பட்ட தண்டனைகளுள் பிழையான கூற்று?
1. ஜேர்மனி நாட்டு படை வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்
2. ரஷ்ய நாட்டுக்கு பெருந்தொகையான பணத்தினை நட்ட ஈடாக செலுத்த வேண்டும்
3. போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் பாவிப்பது தடுக்கப்பட வேண்டும்
4. கட்டாய இராணு சேவை தடுக்கப்பட வேண்டும்.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### நீதிப் பாடல்கள் (புதிய பாடத்திட்டம்)

### முதுமொழி வெண்பா

திருக்குறளுக்கு அடுத்த பெருமை வாய்ந்த நூல் நாலடியாராகும். இந்நூல் சமண முனிவர்களால் எழுதப்பட்டது. 400 வெண்பாக்களை உடையது. பாண்டிய மன்னன் ஆணையால் 8000 சமண முனிவர்களால் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் வைகையாற்றில் இடப்பட்டன. அவற்றில் 400 பாடல்களே நீரை எதிர்த்து கரை ஏறின என்பர். இவ்வெண்பாக்களை அறத்துப்பால் பொருத்துப்பால் காமத்துப் பால் எனப்பாகுபடுத்தி 40 அதிகாரங்களாக வகுத்து அதற்கு முதன் முதலில் உரை எழுதியவர் பதுமனாராவார். இந்நூல் திருக்குறட் கருத்துக்களும் சொற்களும் மிகுதியாக பயின்று வரக் காணலாம். மறுமுறையும் இடையிடையே கூறியிருக்கக் காணலாம். எனினும் இந்நூல் கூறும் கருத்துகள் பொருட்செறிவுடையனவாகவும் அறிவிற்கு இன்பம் பயப்பனவாகவும் அமைந்து விளங்குகிறது. திருக்குறள் போலவே இந்நூலும் ஆங்கிலநாட்டு மிஷனரியைச் சார்ந்த டாக்டர் ஜி.யு.போப் என்பவரின் உள்ளத்தையும் கவர்ந்துள்ளது. அவர் முழு நூலையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

யானை அனையவர் நண்பொரீஇ நாயனையர்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் ~ யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

**பாட்டின் பொருள்** - ஒருவன் யானை போன்றவனின் நட்பை விட நாயைப் போன்றவனது நட்பையே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் யானை பல காலம் பழகியிருந்தும் தனக்கு உணவு கொடுத்து காப்பாற்றும் பாகனையே கொல்லும் ஆனால் நாய் தன்னை வளர்த்தவன் அது மீது கோபப்பட்டுக் கொண்டு கூரிய ஆயுதத்தால் தாக்கிய போதும் அது தன் அன்பின் அடையாளமாக அது தன் வாலை ஆட்டும். (நன்றி மறவாத் தன்மையுடையது)

**வினா** : நாலடியார்ப் பாடலில் யானையின் நட்பை விட நாயின் நட்பு சிறந்ததென கூறப்படுவது ஏன்? விளக்குக.

**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: Complete the following dialogue by selecting the most suitable words from the boxes. Write the correct letter in the blanks.

01. Salesman : Good morning madam. Can I help you?
02. Customer : I'm looking for a (1) .............................. to take to my country.
03. Salesman : Is there (2) .............................. you like especially?
04. Customer : Yes, I want something different and natural.
05. Salesman : (3) .............................. these items you see here are made from coconut trees.
06. Customer : M..m.. very (4) .............................. How about that monkey?
07. Salesman : Oh! It's made of dry coconut husk.
08. Customer : I like that very much. How (5) .............................. is it?
09. Salesman : It's two hundred rupees.
10. Customer : (6) .............................. is the money.
11. Salesman : Thank you very much. Come again

1. a. souvenir b. present
2. a. anything b. something
3. a. whole b. all
4. a. beautiful b. fantastic
5. a. many b. much
6. a. there b. here

## பாடம் : விஞ்ஞானம்

01. பல்மானியால் அளக்கத்தக்க அளவீடுகளை மாத்திரம் கொண்ட விடை எது?
1. மின்னோட்டம், அழுத்த வித்தியாசம், வலு
2. மின்னோட்டம், அழுத்தவித்தியாசம், தடை
3. அழுத்த வித்தியாசம், தடை, கொள்ளளவு
4. மின்னோட்டம், தடை, வலு

02. $5ms^{-1}$ என்னும் தொடக்கக் கதியுடன் நிலைக்குத்தாக விழச்செய்யப்படும் பந்து ஒன்று கதி $25ms^{-1}$ ஐ அடைவதற்கு எடுக்கும் நேரம் யாது? (புவியீர்ப்பு ஆர்முடுகல் $10ms^{-1}$ ஆகும்)
1. 0.5s 2. 2s 3. 2.5s 4. 20s

03. பின்வருவனவற்றுள் எக்கட்டமைப்பு ஊத்தேக்கியின் குழாயினால் தொண்டையுடன் தொடுக்கப்பட்டுள்ளது?
1. நடுச்செவி 2. நுரையீரல்கள் 3. மூக்கு 4. இரைப்பை

04. ஒரு வித்திலைத் தாவரங்களுக்கு விசேடமான இயல்பு பின்வருவனவற்றுள் எது?
1. மூலவேர் இருத்தல் 2. நார்வேர்த்தொகுதி இருத்தல்
3. தண்டு பிரிந்திருத்தல் 4. இலைகள் சிறிலைகளாகப் பிரிந்திருத்தல்

05. பல்வேறு மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படும் உற்பத்தி எது? அ, ஆ, இ, ஈ என்னும் நான்கு கைத்தொழில்கள் கீழே காணப்படுகின்றன.
அ. வளமாக்கி உற்பத்தி ஆ. கண்ணாடி உற்பத்தி
இ. சீமெந்து உறபத்தி ஈ. இரும்பு உற்பத்தி
1. அ, ஆ, இ மாத்திரம் 2. ஆ, இ, ஈ மாத்திரம்
3. அ, இ, ஈ மாத்திரம் 4. அ, ஆ ஈ மாத்திரம்

06. ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்குக் கள்ளித் தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கம்?
1. இலைகள் சதைப்பிடிப்புள்ளதாக இருத்தல்
2. இலைகள் அருகி இருத்தல்
3. தண்டுகள் முட்களைக் கொண்டிருத்தல்
4. பரந்த வேர்த் தொகுதி இருத்தல்

07. குருதிப் படலத்தைச் சோதிப்பதன் மூலம் டெங்குநோயை இனங்காணலாம். எக்குருதிக் கூறின் எண்ணிக்கை குறைவதன் மூலம் அதனை இனங்காணலாம்?
1. நடுநிலை நாடி 2. இயோசினாடி 3. மூலநாடி 4. சிறுதட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 07

01. ஐந்து வருடத்திற்கு முன் கரணி, தரணி ஆகிய இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 50 ஆகும். இன்னும் ஐந்து வருடங்களுக்கு பின் அவர்கள் இருவரதும் வயதின் கூட்டுத்தொகை எத்தனை?

(1) 50 (2) 80 (3) 70


கீழ் தரப்பட்ட ஒவ்வொரு வினாவிலும் முதலில் தரப்பட்ட உருவை ஒத்திராத உருவைத் தெரிவு செய்க.

02.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. ஒரு வட்ட வடிவ மேசையைச் சுற்றி 36 கதிரைகளுக்கும் இலக்கமிடப்பட்டு 36 பேர் அமர்ந்திருந்தனர் எனின், இலக்கம் 8 இற்கு எதிர்பக்கத்தில் அமர்ந்திருப்பவரின் இலக்கம் யாது?

(1) இலக்கம் 18 (2) இலக்கம் 26 (3) இலக்கம் 16

04. ஒரு நீர்த்தாங்கியில் கொள்ளத்தக்க நீரின் கனவளவு 1500 லீற்றராகும். நீர்நிரப்பும் பம்பியானது ஆறு நிமிடத்தில் 2/5 பங்கு நீரை நிரப்பிவிடும் எனின், அந் நீர்த்தாங்கி முழுமையாக நிரம்ப எவ்வளவு நேரம் தேவையாகும்?

(1) ஒன்பது நிமிடத்தில் (2) பன்னிரெண்டு நிமிடத்தில்
(3) எட்டு நிமிடத்தில்

05. தனிச்சொல்லை தருக

அ. நடக்க இருப்பவற்றை முன்கூட்டியே கூறுபவன்

……………………………………………

ஆ. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன

……………………………………………

06. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

கண்ணே எழுந்திடுவாய்
கண்மணியே கண்மலர்வாய்
சின்னஞ்சிறு மலரே
துயில் நீங்கி நீ எழுவாய்

கிழக்கு வெளுக்குது பார்
கீழ்வானம் சிவக்குது பார்
பூக்கள் மலர்ந்தன பார்
புதுமணம் வீசுது பார்

01. இங்கு இடம்பெற்றுள்ள முன்னிலை ஒருமை பெயர்ச்சொல்லை எழுதுக? ……………………
02. பூக்கள் மலர்ந்தன என்பதை ஒருமையில் எழுதுக? ……………………
03. இங்குள்ள சொற்களில் பெயராகவும் வினையாகவும் வரும் சொல்லை எழுதுக? ……………
04. புது மணம் வீசுவது எவை? ……………………
05. மலர்கள் என்பதற்குரிய ஒத்தசொல்? ……………………
06. நித்திரை என்பதன் ஒத்த சொல்? ……………………
07. அடுக்கிடுக்கு சொல் ஒன்று தருக? ……………………
08. பூக்கள் மலர்ந்தன என்பதை எதிர்கால வடிவில் தருக? ……………………



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**




## ஓர் முடிவு

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப் படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை. அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப் படும் போதும் சம்பந்தப் பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மர வேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும் படி அறிவுரைத்தார். முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப் படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!



நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.

எல்லா ஆணியை யும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

**- வாயினால் கூறும் வார்த்தைகளில் கவனம் தேவை -**

குட்டிக்கதை

## என் தங்கை சுஷிகுட்டி

எனக்கு ஓர் தங்கை இருக்கிறாள். அவள் மிகவும் அழகானவள். என் அருமை தங்கை என்னுடன் சேர்ந்து விளையாடுவாள். அவளுக்கு நான் என்றால் மிகவும் பிடிக்கும். என்னை அச்சி என்று தன் மழலை மொழியில் அழைப்பாள்.

அவளுக்கு இப்போது தான் இரண்டு வயது. நான் பாடசாலை முடிந்து வந்து அவளை முத்தமிடும் போது அவள் தன்னை தூக்குமாறு சைகை செய்வாள். எனக்கு என் தங்கையை மிகவும் பிடிக்கும்.



*வீ.கைலேஷ்*
*தரம் - 02*
*திருகோணமலை*



செல்வன்.த.பிரதிக்ஷன்
தரம் 07, திருகோணமலை

## சிந்திக்க .. ..

படுத்துக் கிடப்பவனுக்கு
பகலும் இருட்டாகத் தெரியும்;
எழுந்து உழைப்பவனுக்கு
இருட்டிலும் வெளிச்சம் தெரியும்.

## குழந்தைக் குறும்பு



திருமலை சுந்தா

பொக்கை வாயைக் காட்டுவார்
நாக்கை கடித்து நீட்டுவார்
இச்சையாக அசைத்துக் காட்டுவார்
கொச்சை மொழியில் முனங்கிடுவார்

உடம்பு பிடித்துக் காட்டுவார்
திரும்ப முடியாது தவித்திடுவார்
கச்சை நனைந்தால் அழுதிடுவார்
காரணம் இன்றி அழமாட்டார்

அழைத்தால் திரும்பி படுத்திடுவார்
மீண்டும் அழைத்தால் வந்திடுவார்
தாவி அனைத்தும் மகிழ்ந்திடுவார்
வந்தால் மீண்டும் பிரிந்திடார்

## பொது அறிவு - 09

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. சுற்றுச்சூழல் செயற்திறன் பட்டியலில் முதலிடத்தில் உள்ள நாடு எது? சுவிட்சர்லாந்து
02. உலகிலேயே ஏழைகள் அதிகம் இருக்கும் நாடு எது? இந்தியா
03. சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையிலான தொடர்பு எது? நேர்க்கணியத் தொடர்பு
04. 2028 இல் மிகப் பெரிய பொருளாதார நாடாக எதிர்பார்க்கப்படுகின்ற நாடு எது? சீனா
05. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை தீர்மானிக்கும் அமைப்பு யாது? தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்
06. முகவர்களில் அதிகாரம் குறைந்தவர் யார்? தரகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்திரியை முன்னிட்டு ஏற்பாடுகள்

மட்டக்களப்பு நாவலடி காயத்திரி பீடத்தில் சிவராத்திரி தினத்தன்று மகா யாகம், சப்தரிஷிக்களுக்கும் பசுபதி லிங்கத்துக்கும் அபிஷேகம், மத சொற்பொழிவு, திருவாசகம் முற்றோதல் ஆகியவை நடைபெறவுள்ள நிலையில், அனைவரையும் கலந்துகொண்டு பயனடையுமாறு அப்பீடத்தின் பிரதமகுரு சிவயோகச் செல்வர், கதம்பவாரிதி சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார் வேண்டுகோள் விடுத்தார். காயத்திரி பீடத்தில் சிவராத்திரி தினத்தன்று நடைபெறவுள்ள நிகழ்வுகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைக் கூறினார்.

## முன்பள்ளி வரவேற்பு நிகழ்வு

அண்மையில் செட்டிபாளையம் சிவன் முன்பள்ளி பாலர் பாடசாலைக்கு 45 மாணர்களை புதிதாக இணைக்கும் நிகழ்வு எஸ்.கேஎச் முதல்வர் திரு.ரி.துரைராஜா தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக செட்டிபாளையம்ம.வி முதல்வர் மற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் நலன்விரும்பிகள் பலர் கலந்து கொண்டனர்.






## எண்ணெய்க்காப்பு - பெருவிழா

- மூதூர் நிருபர் -

ஈழத்தில் வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் திருக்குடமுழுக்கு பெரும்சாந்தி விழாவை முன்னிட்டு 07.02.2015 சனிக்கிழமை அதிகாலை 5மணிமுதல் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் எண்ணைய் சாத்தினர். நான்கு நாட்களாக திருக்கோணேஸ்வர கோவிலின் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெற்றது. பல மாட்டங்களில் இருந்தும் பல ளிநாடுகளில் இருந்தும் பக்த கோடிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். அத்துடன் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து மகா கும்பாபிஷேக பூசை இடம்பெறுகின்றது









## தாண்டவன் வெளி புனித காணிக்கை மாதா - திருவிழா

2015.02.07 - 08 சனி மாலை மற்றும் ஞாயிறு காலையும் மட்.:.தாண்டவன் வெளி புனித காணிக்கை மாதா ஆலய திருவிழா இடம்பெற்றது.

கடந்த ஒன்பது நாட்கள் நடைபெற்ற திருவிழா சனி மாலை ஊர்வலத்துடனும், ஞாயிறு காலை திருப்பலியுடனும், கொடி இறக்கத்துடனும் இனிதே நிறைவுற்றது.





## குடிநீர்ப்பிரச்சினைக்கு தீர்வு


மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்படிச் சேனைக் கிராமத்தைச் சேர்ந்த ஓர் விசேட தேவையுடைய இளைஞனால் அமைக்கப பட்டுவரும் பொதுக்கிணறுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பு கிளை யினால் கடந்த திங்கட்கிழமை உதவிகள் வழங்கப்பட்டது.

இலுப்படிச்சேனைக் கிராமத்தில் குடிநீர்ப்பிரச்சினை நிலவிவருகிறது குடிநீருக்கு மட்டுமல்லாது ஏனைய நீர்த் தேவைகளுக்காகவும் அயலிடங்களுக்கும் தூர இடங்களுக்கும் மக்கள் செல்ல வேண்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது.



அவருக்கு மாத்திரமின்றி அக்கிராமத்தின் ஒரு பகுதியில் காணப்படும் நீர் தேவை நிறைவேற்றப்படும் என அவ் விளைஞன் தெரிவித்தார். இந்நிலையில் இதுபோன்ற சுய முயற்சிகளை பூர்தி செய்ய முடியாமல் கஷ்ட்டப்படும் மக்கள் மத்தியிலேயே தமது மனிதாபிமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை தலைவர் கூறினார்.

# காதலர் தினம்



உலக காதலர்கள் கொண்டாடும் காதலர் தினம் குறித்து பல்வேறு சுவையான, தகவல்கள் கூறப்படுகின்றன. காலம் காலமாய் கூறப்பட்டு வரும் காதலர்தினக் கதைகள் தியாகம் நிறைந்தவை.

### வேலண்டைன்ஸ் டே

வேலண்டைன்ஸ் டே என்று உலகமெங்கும் கொண்டாடப்படும் காதலத் தினம் வேலண்டைன் பாதிரியாரின் நினைவாக கொண்டாடப்படுகிறது என்பது நம்பிக்கை. கி.பி 270 ம் ஆண்டு ரோம பேரரசரான இரண்டாம் கிளாடியுஸ் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்து கொள்ள தடை இருந்தது. திருமணம் செய்து கொண்டால் ஆண்களுடைய வீரம் குறைந்து விடும் என்பது அரசரின் நம்பிக்கை. இதனால் பெண்களை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்ற தடை விதித்திருந்தார் ரோமப் பேரரசர்.

திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை என்ஜாய் செய்யவேண்டும் என்று துடித்தவர்களுக்கு உதவி செய்து அவர்களுக்கு அரச கட்டளையை மீறி திருமணம் நடத்திவைத்தார் வேலண்டைன். இந்த உதவிக்கு மன்னன் மரணதண்டனையை பரிசளித்தார். இரண்டு மனங்களை திருமண பந்தத்தில் இணைத்து வைத்த பாதிரியார் வேலண்டைன் கொல்லப்பட்ட நாள் பிப்ரவரி 14. வேலண்டைன்ஸ் டே குறித்து உலவும் கதைகளில் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள கதை இது.

### சீனர்களின் காதலர் தினம்

சீனர்களின் காதலர் தின கதை சுவாரஸ்யமானது. சுவர்க்கத்தின் சக்கரவர்த்திக்கு ஏழு மகள்கள். ஏழாவது மகளான ஸி நூ அழகிகளுக்கெல்லாம் அழகி! பேரழகி. ஒரு நாள் ஏழு சகோதரிகளும் நதியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். நுவூ எனும் இளைஞன் அவர்களைப் பார்த்தான். குறும்புத் தனமாக எல்லாருடைய ஆடைகளையும் எடுத்துப் போய்விட்டான். ஆடைகள் இல்லாமல் வெளியே வரமுடியாமல் சகோதரிகள் தவித்தனர். கடைசியில் தங்கள் கடைசித் தங்கையான ஸி நூ வை அவனிடம் சென்று ஆடை வாங்கி வர அனுப்பினார்கள். ஈரம் சொட்டச் சொட்ட எழிலுடன் வந்து நின்ற அவளைப் பார்த்தவுடன், நுவூ காதல் கொண்டான். இந்த காதல் திருமணத்தில் முடிந்தது.

விஷயம் தெரிந்த மன்னர் இருவரையும் பிரித்து வானத்தின் இரண்டு மூலைகளில் கொண்டு போய் விட்டார். அவர்கள் ஏழாவது மாதத்தின், ஏழாவது நாளில் மட்டும் தான் சந்தித்துக் கொள்ள முடியும். அந்த நாள் தான் சீனர்களின் காதலர் தினம்.

ஸ்வீடன் நாட்டில் இந்தநாளை "அனைத்து இதயங்களின் தினம்" என்று அழைக்கின்றனர். போர்ச்சுக்கல் நாட்டில் காதலர் தினத்தை "நமோரோடோஸ் டயாடாஸ்" என்று அழைக்கின்றனர். இதற்கு அர்த்தம் பாய்.:.பிரண்ட் மற்றும் கேர்ள்.:.ப்ரண்ட் தினம் என்பதாகும். ஸ்பெயினில் இந்த நாளை செயின்ட் வேலண்டைன் என்று அழைக்கின்றனர்.

- தொகுப்பு - தனியா -

## மக்கள் முரசு

### மாசற்ற காதலே மகத்தான காதல்

எல்லாமே மாறும்
என்றும்
மாறாதது காதல்,

சொன்னாலே இனிக்கும்
காதல்
சுகமாகுமன்பு!

பண்பாகவே எரும்
பாசத்தால் நன்கு
உருவாகும் காதலே
உண்மைக் காதல்!

இரண்டு இதயங்கள்
இணைகின்ற பொழுது
திரணடு பிணைவது
தித்திக்கும் காதல்!

முரண்டு வந்தாலும்
முதுமை வந்தாலும்
அறுந்து போகாது
உண்மைக் காதல்!

கசடறக் கற்றிடும்
கலிபோல் - காதலை
மாசறக்கொள்வதே
மகத் தான காதல்!!

- கவிக்குயிலன் -




### காதல் அப்ளிகேஷன்

தனக்கு காதலர் இல்லை என ஏங்குபவர்களுக்காக புது வித அப்ளிக்கேஷன் ஒன்றை உருவாக்கியுள்ளனர் மாத்யு ஹோமன், கைல் டபோர். "Invisible Boyfriend" என்ற இந்த அப்ளிகேஷனில் உங்களுக்குப் பிடித்த பெயர், பிடித்த உருவம், குணாதிசயங்கள் என அனைத்தையும் தெரிவு செய்து கொள்ளலாம். மேலும் உங்களுடைய தகவல்களையும் அதில் குறிப்பிட்டு விட்டால், சிறிது நேரம் கழித்து உங்களது பாய் .:.ப்ரண்டிடம் இருந்து மெசெஜ் வரும். நீங்கள் எப்படி எல்லாம் பாய்.:.ப்ரெண்ட் இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அப்படியெல்லாம் இந்த இன்விசிபிள் பாய்.:.ப்ரெண்ட் இருப்பார். தற்போது அமெரிக்காவிலும், கனடாவிலும் கிடைக்கக்கூடிய இந்த அப்ளிகேஷனை விரைவில் மற்ற நாடுகளிலும் அறிமுகம் செய்ய இருக்கிறார்கள்.

### ஏன் பெண்ணே!

நின்று, கொன்று
மென்று
மௌனமாக சென்று
பார்வைகளால் தானே
எறிந்து உடைக்கின்றாய்
ஏனடி என்னை.......?

- பகீதரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களுக்கும்...

2012ம் ஆண்டிலும், தற்போது 2015ம் ஆண்டிலும் அவர்கள் மிகவும் கேவளமாக நடந்து கொண்டுள்ளார்கள். அதை கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களுக்கு, அதிலும் விசேடமாக தமிழ் பேசும் மக்களுக்கு, அதிலும் விசேடமாக முஸ்லீம் மக்களுக்குக் கூற கடமைபட்டுள்ளோம்.

எமது மாகாண சபை உறுப்பினர்கள் ஸ்ரீ.மு.கா கட்சியின் உறுப்பினரைச் சந்தித்து பேசியதன் முக்கிய காரணம் என்னவென்றால் ஸ்ரீ.மு.கா எந்தளவிற்கு தரங்கெட்டு நடந்திருந்தும் கூட தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையில் பகைமை ஏற்படக் கூடாது, பிரிவினை ஏற்படக் கூடாது எனும் அடிப்படையில் தான் பேசி இருக்கிறோம்.

அவ்வாறு பிரிவினைகள் உருவாகாமலிருக்க நாங்கள் பாதுகாப்போம். ஆனால் நிச்சயமாக ஸ்ரீ.மு.காவின் செயற்பாட்டை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் மிகவும் நியாயமற்ற முறையில் நடந்து இருக்கிறார்கள் என்பதை வலியுறுத்துவது எமது கடமை என நாம் நினைக்கின்றோம் எனத் தலைவர் சம்பந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தேசிய அரசு என்பது....

அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

கிழக்கில் பெரும்பான்மையாகத் தமிழர்களும் அடுத்த நிலையில் முஸ்லிம்களும் வாழ்கின்றார்கள் இந்த நிலையில் ஆட்சி அமைப்பது தொடர்பாக மூன்று முறை நாங்கள் அவர்களுடன் பேச்சுக்களை நடாத்தியோம். ஆனால் அவர்கள் முதலமைச்சர் பதவி அதாவது ஆட்சி அதிகாம் தங்களிடமே இருக்க வேண்டும் என்றும் அதற்காக ஒரு அற்பத்தனமான காரணத்தையும் சொன்னார்கள்.

அந்த அற்பத்தனமான காரணம் முதலமைச்சர் பதவியை த.தே.கூ எடுத்துக் கொண்டால் முஸ்லிம் மக்கள் தமக்கு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க மாட்டார்கள் என்றார்கள். அதனை நாம் ஏற்றுக்கொள்ளாத போது இரண்டாவதாக அவர்கள் வடக்கில் தமிழர்களிடம் ஆட்சி அதிகாரம் இருக்கும்போது கிழக்கில் அதனை முஸ்லிம்கள் ஏன் வைத்துக்கொள்ளக் கூடாது என்றார்கள். அந்த விடயத்திலும் சரியானதொரு காரணம் இருப்பதாக எமக்குப் படவில்லை.எம்மைப் பொறுத்தவரையில் அறுதிப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் கூட அதிகூடிய ஆசனங்களைக்கொண்ட நாம் ஆட்சியமைக்கும் வலுவைக் கொண்டுள்ளோம் என்பதை அனைத்தத் தரப்பினருக்கும் தெரியப்படுத்தியோம்.

அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளாத நிலையில் முஸ்லிம் காங்சிரஸ் மீண்டும் யுபிஎவ்ஏ உடன் இணைந்து அவர்களுக்கிடையிலான ஒப்பந்தப்படி பின்ரைக்காலப்பகுதிக்கு தாமே முதலமைச்சர் ஒருவரைத் தெரிவு செய்துள்ளனர்.

அடுத்து தேசிய அரசைக் கிழக்கில் அமைப்போம் என அழைத்துள்ளனர்.

அவ்வரசை நாம் தேசிய அரசு என அழைப்பது எவ்வளவுக்குச் சரியானது எனத் தெரியாதுள்ள போதும் கிழக்கிலுள்ள நிலைமைகளைக் கருதிற்கொண்டு அவ்வழைப்பை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டை கிழக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் கொண்டுள்ளனர்.

அதனை நாங்களும் ஏற்றுக்கொண்டுள்ளோம்.. உரிய நேரித்தில் அதன்படி முடிவுகள் வெளியாகும் என்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள்.

## வெளி மாவட்ட மீனவரைத்...

எம்.எஸ்.தௌபீக், மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான ஆர்.எம்.அன்வர் மற்றும் எம்.ஜனார்த்தன் ஆகியோர் வருகை தந்து மீனவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து கொண்டதுடன் அவை தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்தரையாடலில் மீன்பிடி உதவிப் பணிப்பாளர் தொழில் நடவடிக்கை நிமித்தம் தமது தொழில் இயந்திரங்களுடன் வெளிமாவட்ட மீனவர்கள் வருகை தருவது தொடர்பில் தான் எந்தவிதமான அனுமதியும் வழங்கவில்லை என தெரிவித்ததுடன் தற்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீன்பிடிப்பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பி வைத்து அங்கிருந்து வரும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

அதுவரை இரு வாரங்களுக்கு வெளிமாவட்ட மீனவர்கள் வருவதை இடை நிறுத்துமாறு காவல்தறைக்கு உத்தரவிட்ட அவர் ஏற்கெனவே வருகை தந்த மீனவர்களை வெளியேற்றுமாறும் காவல்துறைக்கு அறிவுரை வழங்கினார்..

## கிழக்கில் தேசிய .....

கேட்டுக் கொண்டதை அடுத்தே தமிழத் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செற்படும் முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

கிழக்கு மாகாணத்தில் 2012ம் ஆண்டு ஆட்சி அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்மைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியில் தமிழர்கள் கடுமையாகப் புறக்கணிக்கப்ட்டதனை முறியடீக்க வேண்டியிருப்பதால் கிழக்கின் மந்திரி சபைக்குள் ஒரு அமைச்சையேனும் பெற்றுக்கொண்டு அடுத்துவரும் இரண்டாண்டுக்குள் அவ்வாறான புறக்கணிப்புக்களை எதிர்க்கும் வாய்ப்பிருப்பதாலேயே தாமும் ஆட்சியமைக்க ஒத்துழைக்கப்போவதாக மாகாண சபை அங்கத்தவரொருவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் தமிழத் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்க முன்வராத பட்சத்தில் தமிழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தருக்கு ஒரு அமைச்சை விட்டுத்தரும் உள்ளக முடிவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அதனையும் முறியடிக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கின்றது என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றைக் கருத்திற்கொண்டே தேசிய அரசுக்கான முன்முனைவாக விடுக்கப்பட்ட அழைப்பைச் சாதகமாகப் பரிசீலித்திருப்பதாகத் தெரிகின்றது.

இதேவேளை இரண்டு அமைச்சுக்களையும் பிரததி தவிசாளர் பதவியையும் தமிழத் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

கல்வி அமைச்சையும், வீதி அபிவிருத்தி அமைச்சையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## திருமலைப் பெண்களை ...

விசாரணைகளின்போது இவர் திருகோணமலையில் இரண்டு பெண்களைத் திருமணம் முடித்து ஏமாற்றியுள்ளது தெரியவந்துள்ளது.

தான் சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்துள்ளதாகக் கூறியே திருகோணமலையில் இருவரையும், மேலும் மூவரை யாழ்ப்பாணத்திலும் திருமணம் முடித்து ஏமாற்றியுள்ளதுடன் பெண்களிடமிருந்து லட்சங்களை சீதனமாகச் சுருட்டியுள்ளதும் தெரிய வந்துள்ளது.

இறுதியாக மணம் முடிக்க முயன்ற பெண்ணிடம் பதினைந்து லட்சங்களை அவர் சுருட்டியதாகவும் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. .

## இராணுவத்தின்....

இன்று வடக்கு, கிழக்கு மற்றும் முழு இலங்கையிலும் சமாதானம் நிலவுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனநாயக ரீதியான புதிய நாட்டை உருவாக்குவார்கள் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நிலவுகின்றது. எமது தேசிய பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே தற்போதைய தேவைப்பாடு. எனவே இதற்கு மாவீரர்களினதும் நாட்டுபற்றுள்ள அதிகாரிகளின் ஆலோசனைகளும் அவசியமாகும். சேவைக்கான கௌரவம் வழங்கப்பட வேண்டும்.

சில இராணுவத்தினரின் தவறான செயற்பாடுகளால் அவர்கள் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.மூவின மக்களுக்கும் ஊறு விளைவிக்காத வண்ணம் இராணுவத்தின் செயற்பாடுகள் இருக்க வேண்டும்"

என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலையிலுள்ள தரைப்படையின் 22 ஆவது படைப்பிரிவுதலைமையகத்துக்கும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வருகைதந்ததுடன், அணிவகுப்பு மரியாதையினையும் ஏற்றுக் கொண்டார்

## அரச ஊழியரின்....

மாநங்களாக முடங்கிக் கிடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலையொட்டி இந்த வாகனங்கள் அரசாங்க ஊழியருக்கு வழங்கப்படுவதாக எழுந்த முறைப்பாடுகளை அடுத்து திடீரென நிறுத்தப்ட்ட வாகன வினியோகம் தேர்தலுக்குப் பின்னர் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கபட்டிருந்தது.

இவ்வாறு திடீரென வாகன வினியோகம் நிறுத்தப்பட்டதால் சுமார் ஆயிரத்து எழுநூற்றுக்கும் மேற்பட்ட அரச அலுவலர்களால் செலுத்தப்பட்ட எண்பது லட்சம் ருபாய்கள் திருகோணமலை மாவட்டக் காரியாலய வங்கிக் கணக்கில் முடக்கப்ட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சுமார் மூன்று மாதகாலமாக இப்பணம் முடங்கிக் கிடப்பதாகத் தெரிவித்த அலுவலர்களில் சிலர் பணத்தை வட்டிக்கெடுத்துக் கொடுத்திருப்பதாகவும். மற்றும் சிலர் நகைகளை ஈடு வைத்துப் பணத்தைச் செலுத்தியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

## 16ம் திகதி ....

நடைபெறவுள்ளது.

இலங்கையில் தோன்றியுள்ள புதிய அரசியல் மாற்றத்தை அடுத்து நம்பத்தகு உள்ளக விசாரணையொன்றைத் தாம் முன்னெடுப்போம் என தற்பொதைய இலங்கை அரசு உலகிற்கு உறுதியளித்துள்ளது. இதனையடுத்து தமது விசாரணையை தற்போது வெளிப்படுத்துவதா? இல்லையா என ஆராயும் பொருட்டே இக்குழுநிலை கலந்தாய்வு நடைபெறவுள்ளதாக ரொய்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர " ஐநாவில் அறிக்கையை முன்வைப்பது பின்தள்ளப்படும் என்பதில் தான் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளேன்" என ரொய்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவ்விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசிய விவகாரப் பணிப்பாளர் ஜோன் சிவ்டன், அவ்வாறு தாமதிக்கும் காலத்தில் மிகச் சிறந்த ஒரு அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வினைத் திறனுடன் பொருத்தப்பாடாக வெளியிட இணங்குவதுடன் பொறுப்புக்கூறுதலில் சர்வதேசத்தின் பங்களிப்பையும் உள்ளடக்குவாராயின் தமது அமைப்பு இவ்வறிக்கை வெளியிடப்படுவது தாமதமாவதைப் பற்றி அஞ்சவில்லையென்று தெரிவித்துள்ளார்.

உண்மையில் சர்வதேச அங்கத்துவத்துடன் தீர்ப்பாயம் ஒன்றின் ஊடாக இவ்விடயத்தை அனுகுவதே மிகச் சிறந்தவழி எனத் தெரிவித்திருப்பதுடன் இலங்கைக்குள் நடைபெறும் எந்தவொரு விசாரணை முயற்சியும் சரியாகப் பலனளிக்கப் போவதில்லை என்றும் சிவ்டன் கூறியுள்ளார்.

## உட்தறைமுக வீதியில்...

இன்றி சேவையாற்றி வருவதாக தெரியவருகின்றது.

அரசின் நியமனங்களிலும் இவர்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லையென்றும் கிழக்கு மாகாண முதல் அமைச்சராலும் நியமனங்கள் பெற்றுகொடுக்கப்படவில்லை என்றும் ஆசிரியர்கள் இதன்போது தெரிவித்தனர்.

எனவே புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில் தங்கள் மீது கவனம் செலுத்தி நிரந்தர நியமனம் வழங்க ஆவண செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

இதன் பின்னர் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் சென்று ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (தமிழ் மிரர்)



பயணித்துக் கொண்டிருந்த மகிழுந்து திடீரென நிறுத்தப்பட்டதால் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் [illegible] வளாக [illegible]

விபத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புரிதல்



புரிதல் ஓர் அற்புதமான அறிவு. இவ்வறிவின்மையே நம் பிரச்சனையின் ஆணிவேர்.பிறந்த குழந்தையின் அழுகையைப் புரியாத அன்னை இருப்பது அரிது. ஆம், அக்குழந்தை அழுவது பசிக்காகவா? இல்லை வயிற்றுவலிக் காகவா? என்பதை அன்னையினால் மாத்திரமே புரிய முடியும். ஆனால் இன்று பல குடும்பங்களில் அதனை அன்னையின் அன்னையே புரிந்து கொள்கிறார்கள். இன்னும் சில இடங்களில் ஆயாக்கள்தான் புரிகிறார்கள். இன்றைய அவசர உலகில் அன்னையின் அரவணைப்பைப் பெறாத குழந்தையின் நிலை இது.

தன்னையே புரிந்து கொள்ள முடியாத வயதில், இனக்கவர்ச்சியை தவிர்க்க முடியாத சூழலில், காதல் வயப்பட்டுப் பிடிவாதமாக ஒருத்தரை ஒருத்தர் முழுமையாக புரிந்து கொண்டுள்ளோம் என நம்பி திருமணம் என்ற பந்தத்தை அவசரஅவசரமாக ஏற்படுத்திக் கொள்ளும் அறியாமையில் இன்றைய இளைய சமுதாயத்தில் பலர் மூழ்கிவிட்டனர்.

புரிந்துதான் திருமணம் செய்தோம். ஆனால் திருமணத்திற்கு பின் எங்களுக்குள் புரியாமை புகுந்துவிட்டது. இனி எங்களால் இணைந்து வாழ முடியாது. பிரிந்து வாழ்வதே எங்கள் எதிர் காலத்திற்கு நல்லது எனப் பிரிந்துவிடுகிறார்கள். இது இவர்களின் அறியாமையின் அடுத்த கட்டம். மணம் முடிந்த ஒரு வருடத்திற்குள் மன முறிவு. இது இன்றைய சமூகத்தின் சாபக்கேடு.

பலவருடம் இணைந்து வாழும் தம்பதிகளாவது புரிந்து வாழ்கிறார்களா? என ஆராய்ந்தால் அவர்களின் நிலைமை இதைவிட கொடுமை.

தன் உணர்வுகளை புரியாத, தன் தேவைகளை உணராத, தன்னையே அறியாத கணவனோடு மனைவியும், மனைவியோடு கணவனும் வாழ்வது தான் அதிகம்.

5 வருடம், 10 வருடம், 15 வருடம் என ஒரே வீட்டில், ஒரே அறையில் ஒன்றாக தூங்கும் இவர் கள், ஒருவரின் தேவையை ஒருவர் அறியாமல் இருக்கிறார்கள் என்றால் இது எத்தனை பெரிய அறியாமை! எவ்வளவு போலித்தனமான வாழ்க்கை! கணவனின் பார்வையை புரியாத மனைவியும், மனைவியின் வார்த்தையை விளங்காத கணவனும் சிறந்த தம்பதிகளா?

தொடரும் .. .. – ஜெனாப் காதர் –



# மீன்குழம்பு (வெந்தயக் கீரை)



### தேவையான பொருட்கள்

வஞ்சிரமீன் - ½ கிலோ, வெங்காயம் 200 கிராம், தக்காளி - 350 கிராம், தக்காளி பேஸ்ட் - 50 கிராம், பச்சை மிளகாய் - 2, மிளகாய் தூள் - 2 தே.கரண்டி, தனியாத்தூள் - 2தே.கரண்டி, மஞ்சள் தூள், சீரகத்தூள் தலா – ½ தேகரண்டி, உப்பு - தேவையான அளவு, வெந்தயம் - 1 தே.கரண்டி, வெந்தயக்கீரை சிறிய கட்டு – 1, புளி - தேவையான அளவு, நல்லெண்ணை - 3 மே.கரண்டி, கடுகு, சீரகம், சோம்பு, மிளகு - 1 மே.கரண்டி, பூண்டு - 6 பெரிய பல், கருவேப்பிலை - ஒரு கைப்பிடி, தேங்காய் பவுடர் - 4 கரண்டி, கொத்துமல்லி தழை - அரை கைப்பிடி

### செய்முறை

மீனை கழுவி சுத்தம் செய்து துண்டுகளாக போடவும். பின் வெந்தயத்தை அரை மணி நேரம் ஊறவைக்கவும். வெந்தய கீரையை மண்ணில்லாமல் ஆய்ந்து கழுவி தண்ணீரை வடிக்கவும். தக்காளியை மையாக அரைத்து வைக்கவும். தாளிக்க கொடுத்துள்ளவைகளை எண்ணை ஊற்றி காய்ந்ததும் கடுகு, சீரகம், சோம்பு, மிளகு சேர்த்து தாளித்து, பூண்டை தட்டி போட்டு வதக்கி, கருவேப்பிலை சேர்த்து, 2 நிமிடம் வதக்கவும். பின்னர் வெங்காயத்தை பொடியாக அரிந்து போட்டு வதக்கவும். வெங்காயம் வதங்கியதும் எல்லா மசாலா தூள் வகைகள், ஊறிய வெந்தயம், வெந்தயக்கீரை, தக்காளி பேஸ்ட் போட்டு நன்கு 2 நிமிடம் வதக்கவும்.

அரைத்த தக்காளியை சேர்த்து அரை டம்ளர் தண்ணீர் ஊற்றி 5 நிமிடம் கொதிக்க விடவும். பிறகு புளியை ஒரு டம்ளர் தண்ணீரில் கரைத்து வடிகட்டி சேர்க்கவும். 5 நிமிடம் கொதிக்கவிடவும். கடைசியாக மீனையும் தேங்காயையும் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க விடவும். கொத்துமல்லி தழை தூவி இறக்கவும்.

## அழகுகுறிப்பு

# எண்ணெய் பசை சருமம்



எண்ணெய் பசை சருமம் என்றாலே பெண்கள், அழகாக மேக்கப் போட முடியாது என்று புலம்புவார்கள். ஏனெனில் என்னதான் மேக்கப் போட்டாலும் முகத்தை பளிச்சென்று காட்டாது. ஆனால் அத்தகைய சருமம் கொண்டவர்களுக்கும் நிறைய பயன்கள் உள்ளன.

1. பொதுவாக எண்ணெய் பசையுள்ள சருமத்தில் முகப்பருப்பிளவு அதிகம் ஏற்படாது. எண்ணெய் பசை சருமம் கொண்டுள்ளவர்களுக்கு சருமத்தில் வறட்சி ஏற்படாது.
2. எண்ணெய் பசை உள்ள சருமம் கொண்டவர்கள் எப்போதும் இளமையாகவே தோற்றமளிப்பார்கள்.
3. மேக் கப் செய்யும் போது அதற்குமுன் அது அதிகநேரம் நிலைத்து இருக்க ஆயில் படிமம் இட வேண்டும். ஆனால் எண்ணெய் பசை சருமம் உள்ளவர்களுக்கு அது தேவையே இல்லை.
4. எண்ணெய் பசை சருமம் உள்ளவர்களுக்கு முகச்சுருக்கங்கள் இருந்தாலும் அது வெளியில் தெரியாது.
5. உங்களது சருமத்தில் அதிகப்படியான எண்ணெய் பசை நிரம்பியிருந்தால், தினமும் அதிக அளவு தண்ணீர் பருகுங்கள், அது எண்ணெய் பசை மிகுதியை கட்டுப்படுத்தும்.





# மருத்துவம்

## அலர்ஜி, அரிப்பு நீங்க



பழைய சாதத்தில் வைட்டமின் பி6, வைட்டமின் பி12, ஏராளமாக இருக்கிறது. இதனால் அரிப்பு, அலர்ஜி ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

1.காலையில் சிற்றுண்டியாக இந்த பழைய சாதத்தைக் குடிப்பதால், உடல் லேசாகவும், அதே சமயம் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது.
2. இரவே தண்ணீர் ஊற்றி மூடி வைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பாக்டீரியாக்கள் இதில் உருவாகிறது.
3. மறுநாள் இதை குடிக்கும் போது உடல் சூட்டைத் தணிப்பதோடு குடல்புண், வயிற்று வலி போன்றவற்றையும் குணப்படுத்தும்.
4. அதுமட்டுமில்லாமல் இதிலிருக்கும் நார்ச்சத்து, மலச்சிக்கல் இல்லாமல் உடலை சீராக இயங்கச் செய்கிறது.
5. இந்தப் பழைய சாதம் உணவு முறையை சில நாள் தொடர்ந்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் கட்டுக்குள் வந்துவிடும், உடல் எடையும் குறையும்.
6. மிகவும் முக்கியமான விடயம் என்னவென்றால் உடலுக்கு அதிகமான சக்தியை தந்து நாள் முழுக்க சோர்வின்றி வேலை செய்ய உதவியாக இருக்கிறது.
7. அலர்ஜி, அரிப்பு போன்றவை கூட சட்டென்று சரியாகி விடும்.

# வாய் துர்நாற்றத்திற்கு ஏது காரணம்?

வாய் துர்நாற்ற பிரச்சனை இருந்தால் பொது இடங்களில் பேசுவதற்கே தயக்கமாக இருக்கும்.



### மூக்கு ஒழுகல்

சளி அல்லது மூக்கு ஒழுகல் இருந்தால், மூக்கின் வழியாக சுவாசிக்க முடியாமல், வாயின் வழியாக சுவாசிப்போம். மேலும் காய்ச்சல் இருந்தால் வாய் துர்நாற்றம் அதிக அளவில் இருக்கும்.

### உணவில் சேர்க்கும் பொருட்கள்

உணவில் நறுமணத்திற்காகவும், சுவைக்காகவும் சேர்க்கும் பூண்டு மற்றும் வெங்காயத்தை சாப்பிட்டால் கூட, வாய் துர்நாற்றம் வீசும்.

### காலை உணவு

காலை உணவை சரியான நேரத்தில் சாப்பிடாமல் இருந்தாலும், வாய் துர்நாற்ற பிரச்சனையால் அவஸ்தைப்படக்கூடும். எனவே சரியான வேளையில் உணவுகளை உட்கொண்டு வர வேண்டும்.

### கார்போஹைட்ரேட் குறைவான உணவு



டயட் என்ற பெயரில் உண்ணும் உணவில் கார்போஹைட்ரேட் குறைவாக இருந்தாலும், வாய் துர்நாற்றம் ஏற்படும். எனவே சரியான முறையில் கார்போஹைட்ரேட் உள்ள உணவுகளை எடுத்து வாருங்கள்.

### தண்ணீர்

தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டும். அப்படி போதிய அளவில் தண்ணீரை குடிக்காமல் இருந்தால், அது கூட வாய் துர்நாற்றத்தை ஏற்படுத்தும். மேலும் தண்ணீரானது வாய் வறட்சியை தடுப்பதுடன், எச்சில் உற்பத்தியை அதிகரிக்கும்.



# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : புதிய முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். பெண்களால் நன்மை உண்டு. சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து கிடைக்கும்.

**ரிஷபம்** : எதிர்ப்புகளை சமாளித்து, உரிய நன்மை பெற வேண்டும் என்கிற மன உறுதியுடன் செயல்படுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும்.

**மிதுனம்** : புதியவர்களின் அன்பு, நட்பு கிடைக்கும். பல நாள் நினைத்த திட்டம் ஒன்றை செயல்படுத்துவீர்கள். வெளியூர் பயணம் சில நன்மையைத் தரும்.

**கடகம்** : தாழ்வு மனப்பான்மையை அகற்றுவதால், வாழ்வின் முன்னேற்றத்திற்கான புதிய பாதை புலப்படும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**சிம்மம்** : பழகுபவர்களிடம் நிதானித்து பேசுவது நட்பை பாதுகாக்க உதவும். குடும்பத் தேவைகளுக்கான பணச் செலவு அதிகரிக்கும். அறிவாற்றலினால் வாழ்வில் சில நன்மை பெறுவீர்கள்.

**கன்னி** : மன தைரியம் சிறப்பாக அமைந்து, வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும். குடும்ப உறுப்பினர், சில வி'யங்களில் கருத்து வேறுபாடு கொள்வர்.

**துலாம்** : சமூகப் பணியில் ஓரளவு ஈடுபடுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு பணி பயணத்தை எளிதாக்கும். புத்திரர், புதிய நண்பர்களின் உதவியால், சில நன்மை பெறுவர்.

**விருச்சிகம்** : புதியவர்களின் உதவி கிடைக்கும். எதிர்ப்பு விலகி முன்னேற்ற பாதையில் நடைபோடுவீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்வு உண்டாகும்.

**தனுசு** : பெரிய திட்டங்களை நிறைவேற்ற, உரிய தருணம் வரும் வரை காத்திருப்பது நல்லது. சந்தோஷ நிகழ்வுகளை நினைப்பதால், மனதில் புத்துணர்வு ஏற்படும்.

**மகரம்** : பேசும் வார்த்தையின் வசீகரம் புதியவர்களின் நட்பை பெற்றுத் தரும். பசு, பால் பாக்யயோகம் அமைந்து செல்வ வளம் அதிகரிக்கும்.

**கும்பம்** : ஆடம்பர செயல்களை தவிர்ப்பது நல்லது. பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். குடும்பத்தினர் ஒற்றுமை பேணுவதால் மட்டுமே நிம்மதி, மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**மீனம்** : அரசுத் துறை அதிகாரிகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செயல்களை திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். பண வரவு திருப்திகரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### இல்ல விளையாட்டுப் போட்டி- 2015

2015 ம் ஆண்டிற்கான இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி மக்கெய்சர் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. அப்போட்டியில் 184.5 புள்ளிகளைப் பெற்று விவேகானந்தா அணி முதலிடத்தையும், 177.5 புள்ளிகளைப் பெற்று ராமகிருஷ்ண இல்லம் இரண்டாமிடத்தையும், 170 மற்றும் 137 புள்ளிகளுடன் முறையே விபுலானந்தா, சிவானந்தா இல்லங்கள் மூன்றாம், நான்காம் இடங்களையும் பெற்றுக் கொண்டன.







### வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று (13.02.2015) பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெற்றது. காவேரி, யமுனா, சிந்து, கங்கா என நான்கு இல்லங்களைக் கொண்ட இப் பாடசாலையின் 2015 இற்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 13.02.2015 அன்று 2.30 மணியளவில் ஆரம்பித்து வெகு சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் முதலிடத்தை காவேரி இல்லமும், இரண்டாமிடத்தை யமுனா இல்லமும், மூன்றாம், நான்காம் இடங்களை முறையே சிந்து, கங்கா இல்லங்களும் பெற்றுக்கொண்டன.













### வீரர்களுக்கு அபராதம்

உலகக்கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் 14 நாடுகளை சேர்ந்த வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வேளையில் பாதுகாப்பு விதிமுறையை மீறியதற்காக பாகிஸ்தானை சேர்ந்த முன்னாள் அணித்தலைவர் அப்ரிடி, தொடக்க வீரர் ஷேசாத் உட்பட 8 வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

### நற்சான்றிதழ்

இந்தியாவை எப்போதுமே குறைத்து எடை போட்டுவிட முடியாது என்கிறார் கிரேக் சப்பல். அவுஸ்திரேலியாவில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் இந்தியா சிறப்பாக செயல்பட முடியாமல் போயிருக்கலாம். ஆனால், உலக கிண்ணப் போட்டி என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் வேறு ஒரு அணியாக மாறியிருப்பார்கள்

நான் சுயநலவாதிதான். எனக்கு அவுஸ்திரேலியா வெல்ல வேண்டும் என்பதுதான் ஆசை.



இந்த உலக கிண்ணப்போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு சிறப்பான வாய்ப்பு உள்ளது. மற்ற எந்த ஒரு அணியைவிடவும் அவுஸ்திரேலியா நன்கு தயாராக உள்ளது.

### தொடர் தோல்வியில்

நடைபெற்ற பயிற்சிப்போட்டியில் சிம்பாவே அணி 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 280 ஓட்டங்களை 45.2 ஓவர்களில் பெற்றுக்கொண்டது. 6.19 எனும் ஓட்ட விகிதத்தில் இந்த வெற்றியிலக்கை அடைந்துள்ளமை சிறப்பான அம்சமாகும்.

இதன் மூலம் இடம்பெற்ற இரு பயிற்சி போட்டிகளிலும் இலங்கை அணி தோல்வி அடைந்துள்ளது.

### உலகக்கிண்ண கொண்டாட்டம்

இளைஞர்கள் முதல் உலகில் வாழும் மக்கள் தொகை யால் நேசிக்கப்படும் இரண்டாவது பெருவிளையாட்டான கிரிக்கெட்டின் உலகமே ஒன்றிணைந்து கொண்டாடும் திருவிழா கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

சாதாரணமாகவே மக்கள் நெருக்கடி மிக்க நகரங்களான அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன், சிட்னி, அடிலெய்ட், பிரிஸ்பேர்ன், ஹோபாட் உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளும் நியூஸிலாந்தின் ஒக்லண்ட், கிறிஸ்ட்சேர்ச், ஹமில்டன், நேப்பியர் என ஏனைய பகுதிகளும் உள்நாட்டு பிரஜைகளுக்கு அப்பால் உலகின் பல பாகத்திலிருந்தும் பிரவேசித்துள்ள கிரிக்கெட் இரசிகர் வெள்ளத்தால் நிரம்பிவழிந்து கொண்டிருக்கின்றது.



### இன்னும் குழப்பத்தில்



உலகக்கிண்ண போட்டிக்கான சிறந்த இந்திய அணியை தெரிவு செய்வதில் அணித் தலைவர் டோனியின் குழப்பம் நீடிக்கிறது. நம்பிக்கை நட்சத்திரமான விராட் கோஹ்லியின் துடுப்பாட்டம் தொடர்ந்து கவலை அளிக்கிறது. ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நேற்று விளையாடிய வீரர்களே பாகிஸ்தானுடன் ஆட வாய்ப்பு அதிகமாக உள்ளது. இடம்பெற்ற ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் வெற்றியீட்டியதை அடுத்து பேட்டி அளித்த டோனி, ஆடுகளத்தின் தன்மையை பொறுத்தே வீரர்களின் தெரிவு இருக்கும் என்றும், பயிற்சி ஆட்டத்தை வைத்து எதையும் முடிவு செய்ய இயலாது என்றும் மறைமுகமாக தெரிவித்துள்ளார்.

### சச்சின் இல்லாது முதல் தடவை மோதவுள்ளது



உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் முதல்முறையாக சச்சின் டெண்டுல்கர் இல்லாத இந்திய அணி பாகிஸ்தானை எதிர்கொள்ள உள்ளது. இதுவரை நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான உலகக்கிண்ண போட்டிகள் அத்தனையும் இந்தியா வெற்றி பெற சச்சின் முதுகெலும்பாக இருந்த நிலையில், அவரது இடத்தை ஈடுகட்டும் வீரர் யாராக இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு இந்திய ரசிகர்களிடம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெற்ற பிறகு முதல்முறையாக பாகிஸ்தானை உலகக்கிண்ண போட்டியில் எதிர்கொள்கிறது இந்தியா.

### களமிறங்காத மைக்கேல் கிளார்க்



உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் லீக் போட்டியில் மைக்கேல் கிளார்க் விளையாடமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய அணி வருகின்ற 14ம் திகதி இங்கிலாந்தை சந்திக்கிறது. இந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் விளையாடவில்லை என்று அந்த அணியின் பயிற்சியாளர் லீமேன் தெரிவித்துள்ளார்.

காயத்தால் அவதிப்பட்டு வந்த அவர் நேற்று நடந்த ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் 64 ஓட்டங்கள் குவித்து சிறப்பாகவே ஆடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உலக பூப்பந்தாட்ட போட்டி



லண்டனில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் உலகக் கிண்ண பாட்மின்டன் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பிக்குமாறு உலக தமிழர் பூப்பந்தாட்டப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலங்கை தமிழர்களால் உருவாக்கப்பட்டுள்ள விளையாட்டுத்துறை அமைப்பே உலக தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெளிமாவட்ட மீனவரைத் தடைசெய்யுங்கள்"

## மீனவர்கள் போராட்டம்



வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தந்து போகங்களுக்கு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவேரைத் தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் மீனவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

திருகோணமலை புல்மோட்டை பிரதான வீதியை இடைமறித்து குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்பாக புல்மோட்டை, புடவைக்கட்டு, குச்சவெளி, கும்புறுப்பிட்டி, சலப்பையாறு, ,இறக்கக்கண்டி, நிலாவெளி, ஜமாலியா, திருகோணமலை போன்ற பல பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்த மூவினங்களை சேர்ந்த மீனவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தரும் மீனவர்களை தடை செய்யக் கோரியே இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்விடத்திற்கு போக்குவரத்து பிரதி அமைச்சர் கௌரவ 17

## இன்று 10 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டம்

திருகோணமலை சில்வெஸ்டர் விடுதியில் இன்று 10 மணிக்கு தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டமொன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இக் கூட்டத்தில் கிழக்கு மாகாண சபையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பங்குபற்றுதல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## காணாமற்போனோர் ஆணைக்குழு திருமலையில் அமர்வு

திருகோணமலையில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் சனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் மார்ச் 02ம் 03ம் திகதிகளில் நடைபெறலாம் எனத் தெரியவந்துள்ளது.

## " இராணுவத்தின் தவறான நடத்தையாலேயே குற்றச்சாட்டுக்கள் "

### திருகோணமலையில் பாதுகாப்பு ராசாங்க அமைச்சர் தெரிவிப்பு



சில இராணுவத்தினரின் தவறான நடத்தையாலேயே அவர்கள் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளனர் என இலங்கையின் பாதுகாப்பு ராசாங்க அமைச்சர் ருவான் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ராசாங்க அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர் வடக்குகிழக்கு படைத் தளங்களுக்கு வருகை தந்த அவர் திருகோணமலையிலேயே இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

ராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கப்போவதில்லை என வடக்கில் தெரிவித்ததை அவர் இங்கு உறுதிப்படுத்தினார்.

"புகழ்பெற்ற திருகோணமலையையும் அதன் துறைமுகத்தையும் பாதுகாத்த பெருமை கடற்படை, தரைப்படை, விமானப்படைக்கே யுத்தத்திலிருந்து மூவின மக்களையும் பாதகாத்த பாதுகாப்பு படையினரை இந்த இடத்தில் நாம் நினைவு கூறுகின்றோம். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் உயிரிழந்த வீரர்கள் மற்றும் அங்கவீனமுற்ற வீரர்களையும் நாம் இந்த வேளையில் நினைவு கூறுகின்றோம். இவர்களுடைய அர்ப்பணிப்பினால்தான் 17

# கிழக்கின் ஆளுநரும் இந்தியா பயணம்

## சம்பூர் அனல் மின் பணிகளைத் துரிதப்படுத்துவாரா?



கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ அவர்கள் இந்தியா பயணமாகவுள்ளார்.

எதிர்வரம் 15ம் திகதி தொடக்கம் 19ம் திகதிவரை இலங்கையின் சனாதிபதி மைத்திரபால ஸ்ரீசேனவுடன் இவர் இந்தியா செல்லவுள்ளார்.

அண்மையில் சம்பூர் பகுதிக்குச் சென்ற ஆளுனர் அங்கு மக்களுடன் உரையாடியதன் பின்னர் சம்பூர் உயர் பாதுகாப்பு வலயத்திற்கும் பயணித்து அங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

அதன்போது சம்பூர் அனல் மின்நிலையப் பணிகள் மிக விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றிருந்ததாகத் தெரிகின்றது.

அதனையடுத்து இந்தியா பயணமாகவுள்ள கிழக்கின் ஆளுனர் இந்தியால் முன்னெடுக்கப்பட்டு தாமதப்பட்டு வரும் அனல் மின் நிலையப் பணிகளை விரைவுபடுத்தும் நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பு தோன்றியுள்ளது.




## காணாமற்போனோர் தொடர்பான உள்ளக ஆணைக்குழுவின் விசாரணைகளைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும்!

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவரும் சனாதிபதி ஆணைக்குழுவின் முன் தமிழ் மக்கள் பிரசன்னம் ஆகாது அவ்வமர்வுகளைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது.

காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைப் பதிந்த பின்னர் தற்போதுவரை அக்குழுவால் விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

அத்துடன் அவ்வாணைக்குழுவிலுள்ள குறைபாடுகள் தொடர்பாகப் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில் சர்வதேச விசாரணையொன்றின் ஊடாக காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான உண்மையான விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமாயின் காணாமற் போனோர் தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவை மக்கள் புறக்கணித்தால் மட்டுமே சர்வதேச விசாரணையொன்றின் ஊடாக உண்மை விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உள்ளக விசாரணை ஆணைக்குழுவிற்கு மக்கள் வருகை தருவார்களாயின் அக்குழவே விசாரணைகளைச் செய்யட்டும் என சர்வதேசம் வாளாவிருந்துவிடும் வாய்ப்பிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுச் சமூக அமைப்புக்கள் இவ்விடயம் தொடர்பாக விழிப்புடன் செயற்படுவதுடன் தமிழ் அரசியல் தலைமைகளும் இவ்விடயத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

## உட்துறைமுக வீதியில் தொண்டர் ஆசிரியர் ஆர்ப்பாட்டம்.

திருகோணமலை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை புதன்கிழமை (11) நடத்தினர்.

உட்துறைமுக வீதியில் அமைந்தள்ள இந்து கலாசார மண்டப வளாகத்தில் காலை 9.00 மணிக்கு ஒன்று கூடிய இவர்கள், காலை 11.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு ஊர்வலமாக கிழக்கு ஆளுனர் அலுவலகம் நோக்கி சென்றனர்.

அங்கு அலுவலகத்தின் முன்னால் கோசங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈச்சிலம்பற்று, மூதூர், குச்சவெளி, திருகோணமலை, தம்பலகாமம், மொரவேவ ஆகிய பகுதிகளை சேர்ந்த அதிகமான தொண்டர் ஆசிரியர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

மேற்படி ஆசிரியர்கள், கடந்த 12 வருடங்களுக்கு மேலாக பாடசாலைகளில் எவ்வித வேதனங்களும் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 14.2.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது